# விபுலானந்த வெள்ளம்

அருள் செல்வநாயகம்

Class No. 808.4 V
Acc. No. 5071
REF

1973 FEB 24

# மதிப்புரை

இலங்கை வானொலி தமிழ் நிகழ்ச்சி அதிகாரி
திரு. க. செ. நடராசா, B.A. DIPLOMA IN TAMIL
அவர்கள் அளித்தது

ஈழத்தின் அணையாத சுடர்விளக்கு அருட்டிரு விபுலாநந்த அடிகளார். தனக்கென வாழாப் பெருந்தகையாளர். வாழ்நாள் முழுதும் தமிழ்ப் பணிக்கே தம்மை அர்ப்பணம் செய்தவர் அடிகளார்.

ஈழத்தின் ஞான விளக்கான அடிகளார் பெருமை ஈழத்துடன் நின்றுவிடவில்லை. தமிழ் நாட்டின் மூலை முடுக்கெல்லாம் ஒலித்தது. யாழ் நூலாம் பெரும் நூலால் இறவாப்புகழ் பெற்ற அடிகளாரைத் தமிழகம் என்றுமே மறக்காது. அன்னாரின் எழுத்தோவியங்களுக்கு எவ்வித முன்னுரையும் வேண்டியதன்று. எனினும் அடிகளாரின் மாணவன் என்ற காரணத்தால் ஆசைபற்றி அறையலுற்றேன்.

தமிழரின் பழம்பெருமைகள்பற்றி அடிகளார் ஆராய்ந்தார். பிறநாட்டு மக்களின் கலாச்சாரங்களை ஆராய்ந்தார். ஒப்புநோக்கித் தமிழனின் பண்பாடு மேம்பட்டதென்று நிலைநாட்டினார். இந்த வகையிலே எத்தனையோ அரிய கட்டுரைகளையெல்லாம் பல்வேறு இதழ்களிலே அவ்வப்போது எழுதி வந்தார். அங்கொன்றும், இங்கொன்றுமாக மலர்ந்து கிடக்கும் அடிகளாரின் கட்டுரைகளைக் கோவைப்படுத்தினால், தன்னேரில்லாத ஓர் ஆராய்ச்சி நூலைத் தமிழ் பெறுமென்பதற்கோர் ஐயமின்று.

முத்தமிழ் வித்தகரான அடிகளாரின் கட்டுரைகளில் குற்றம் இருக்காது. குறை இருக்காது. ஆமாம்; பல மொழிகளிலும், பல துறைகளிலும் தேர்ச்சிபெற்ற அடிகளாரின் கட்டுரைகளுக்குத் தனியோர் மதிப்பு எங்கும், என்றும், உண்டு.

தமிழ்க்கொடைப் பெருவள்ளலான அடிகளார் மறைந்து பல ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. இந்த இடைக்காலத்திலே அடிகளாரின் ஞாபகார்த்தமாக, அவரது எழுத்தோவியங்களைக் கோவை செய்து தமிழ் அன்னைக்கு ஆரம் சூட்டப்போவதாகப் பலர் பறையறைந்தனர். ஆண்டுகள் இன்னும் பல மறைந்தன. ஆனால் செயல்தான் ஆகவில்லை.

இயற்கை எழில் ததும்பிடும் குருமண் வெளியிலிருந்து ஓர் உறுதிக் குரல் எழுந்தது. உற்றுக் கேட்டேன். என் அன்பினுக்குரிய நண்பர் அருள் செல்வநாயகந்தான் குரல் கொடுத்தார். மறைந்த அடிகளாரைத் தமிழகம் என்றென்றும் மறக்காவண்ணம் பணியாற்றுகிறேனென்று முன் வந்தார். அவரது அரும்பெரும் முயற்சியின் பயனாக அடிகளாரின் வாழ்க்கை வரலாறு "விபுலாநந்த அடிகள்" என்ற தனிப்பெரும் நூலாக மலர்ந்தது. அடிகளாரின் அச்சேரும் கட்டுரைகள் அச்சுவாகனமேறி "விபுலாநந்த அமுதம்" ஆக வெளிவந்தது. அடிகளார் சைவநெறி சம்பந்தமாக யாத்த கவிதைகளும் கட்டுரைகளும் "விபுலாநந்தத் தேன்" ஆக மலர்ந்தது. அடிகளார் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் "விபுலாநந்த ஆராய்வுகள்" என்னும் நூலாக வெளிவந்தது. அடிகளார் உணர்ச்சியின் எல்லையில் நின்று யாத்த கவிதைகள் "விபுலாநந்தக் கவிதைகள்" என்னும் சிறந்த நூலாகப் பவனி வந்தது. இப்பொழுது அடிகளாரின் ஒப்பற்ற கட்டுரைகள் "விபுலாநந்த வெள்ளம்" என்னும் தனிப்பெரும் நூலாக வெளி வருகின்றது.

அடிகளாரின் நூல்கள் பலவற்றை வெளியிட்டதனால் அருள் செல்வநாயகம் பாராட்டுதலுக்குரியவராகிறார். நண்பர் அருள் செல்வநாயகம் பண்பட்ட எழுத்தாளர். ஈழத்து எழுத்தாளர்களுள் தலைசிறந்தவராகத் துலங்கும் அருள் செல்வநாயகம், அடிகளாரின் நூல்களை மட்டும் வெளியிடவில்லை. இன்னும் அதிகமான நூல்களுக்கும் ஆசிரியராகச் சுடர்விட்டுப் பிரகாசிக்கிறார். ஈழ்நாட்டில் அருள்செல்வநாயகத்தினுக்கு தனியோர் மகத்தான இடம் என்றுமே இருக்கவே செய்யும்.

"விபுலாநந்த வெள்ளம்" என்னும் இந்நூலில் தொகுக்கப்பெற்ற கட்டுரைகள் தமிழ் அன்னைக்கு மெருகு பூசுபவைகள். தமிழ் முனிவரான அடிகளார் காலத்துக்குக் காலம் எழுதிய கட்டுரைகளை அழகாகக் கோவை செய்த அருள் செல்வநாயகம், அடிகளாரைத் தமிழகம் என்றுமே மறக்காவண்ணம் நிலைபெறச் செய்துவிட்டாரெனலாம்.

தமிழ்மொழி தலையாய நூலொன்றினைப் பெற்றுவிட்டது. அதனைப் படித்துப் பயன்பெறுவதே தமிழினுக்குழைத்த அடிகளாருக்குத் தமிழ் மக்கள் செய்யத்தக்க கடனாகும்.

நாவற்குழியூர்,<br>
யாழ்ப்பாணம்

க. செ. நடராசா

1973 FEB 24
BATTICALOA

# முன்னுரை

அறம் தழைத்து வளர்ந்தது தமிழகம். தமிழகத்தின் பாற் படுவதே இலங்கை வளநாடும். கடலாற் சூழப்பெற்ற இலங்கை வளநாடு தனித்தமிழ்நாடாகவும் ஒருகாலத்தில் இருந்தது. கால வேறுபட்டால் இலங்கைக்கே சொந்தமான தமிழர்கள் கிழக்கு இலங்கையையும் வடக்கு இலங்கையையும் தங்களது தாயகங்க ளாகக் கொண்டார்கள்.

இலங்கைத் தமிழர்கள் தமிழ்மொழியைப் பேணி வளர்ப்பதில் என்றுமே பின்நின்றதில்லை. தமிழே தங்களது உயிரெனக்கொண்டு எத்தனையோ அறிஞர்கள் வாழ்ந்து பெருமையீட்டியுள்ளார்கள். அந்த வகையிலே தமிழினுக்காக வாழ்ந்து பெருமை ஈட்டியவர் அருட்டிரு விபுலாநந்த அடிகளாவர்.

“தமிழ்த்தொண்டு செய்வதே என் கடன்” என வாழ்ந்தவர் அடிகளார். தமிழை அழகுசெய்வதே பிறந்ததின் பயனெனக் கண்ட அடிகளார் இல்வாழ்வைத் துறந்து, துறவியாகித் தூய வாழ்வு வாழ்ந்து காட்டினர். அதன் பயனாகத்தான் தமிழர்களின் மனத்தாமரைகளில் “விபுலாநந்த அடிகள்” என்னும் பெயர் அணை யாத சுடராகியது. அடிகளாரின் ஊன் உடம்பு மறைந்து பல ஆண்டுகள் கழிந்துவிட்டன. ஆனால் புகழ் உடம்பு தமிழர்களிடம் சிரஞ்சீவியாக உலாவிக் கொண்டிருக்கின்றது.

அடிகளார் அமரராகிவிட்டார். அவர் அளித்துச் சென்ற யாழ்நூலாம் பெரும்நூல் அமர காவியமாகிவிட்டது. அடிகளார் தம் நேரமனைத்தையும் தமிழ் அணங்கினுக்கே செலவிட்டார். அதன் பயனாக ஏராளமான கட்டுரைகளும், கவிதைகளும் பத்திரிகை ஆசிரியர்களுக்குக் கிடைத்தன.

பல பத்திரிகைகளில் சிதறுண்டு கிடக்கும் அடிகளாரின் கட் டுரைகள் கால நீரோட்டத்தினால் அழிந்து விடவுங்கூடும். இவ் வாறு ஆகுமானால் தமிழகம் தனது ஒப்பற்ற கலைச்செல்வங்களை இழந்ததாகமுடியும். இக்குறைவினை நீக்கும் பொருட்டுத்தான் நாம் விபுலாநந்த இலக்கியத்தைத் தோற்றுவித்தோம்.

விபுலாநந்த இலக்கிய வரிசையிலே, "விபுலாநந்த அடிகள்", "விபுலாநந்த அமுதம்", "விபுலாநந்தத் தேன்", "விபுலாநந்த ஆராய்வுகள்", "விபுலாநந்தக் கவிதைகள்" என்னும் நூல்களை நாம் வழங்கினோம். இப்பொழுது "விபுலாநந்த வெள்ள"த்தை உங்களிடம் ஒப்படைக்கிறோம்.

அடிகளார் துறவறத்தை மேற்கொள்ளும் பொருட்டு மயிலை 'ஸ்ரீராமகிருஷ்ண' மடாலயத்தினுக்குச் சென்ற காலையில், மடாலய வாயிலாக வெளிவரும் 'ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்' என்னும் திங்கள் இதழினுக்கு ஆசிரியராக இருந்தார். அந்நாட்களில், ஆசிரியர் தலையங்கங்களாகவும், கட்டுரைகளாகவும், கவிதைகளாகவும், பல எழுத்தோவியங்களை வரைந்தார். "ஸ்ரீராமகிருஷ்ண விஜய" ஆசிரியர் பணியினைத் துறந்து வாழ்ந்த காலையிலும் "ஸ்ரீராமகிருஷ்ண விஜய"த்தினுக்குப் பல கட்டுரைகளை வரைந்தார்.

"ஸ்ரீராமகிருஷ்ண விஜய"த்தில் எழுதிய பல கட்டுரைகளையும் வேறுபல இதழ்களில் எழுதிய கட்டுரைகள் சிலவற்றையும் கொண்டு விரிகிறது "விபுலாநந்த வெள்ளம்" என்னும் இப் பெரும் நூல்.

விபுலாநந்த வெள்ளம், ஆராய்ச்சி நூல், சமயநூல், இலக்கிய நூல், சிந்தனை நூல், வரலாற்று நூல், இன்னும் பலவகையான நூலென்று சிறப்பித்துச் சொல்லலாம்; படிக்குந்தோறும் நீங்களே வேறு பெயர்களைச் சூட்டி மகிழ்வீர்கள்.

அடிகளாரின் எழுத்தோவியங்களைத் திரட்டும் முகமாகத் தமிழகத்தின் பல அறிஞர்களுடன் தொடர்பு கொண்டோம். அந்த வகையிலே, "விபுலாநந்த வெள்ளம்" உருவாக முதற்காரணராய் இருந்தவர் "ஸ்ரீராமகிருஷ்ண விஜய"த்தின் ஆசரியரான சுவாமி பரமாத்துமாநந்தா (ரா. வி.) அவர்களாவர்.

சுவாமி பரமாத்துமாநந்தா அவர்கள் ஸ்ரீராமகிருஷ்ண விஜயத்தின் பழைய இதழ்களையெல்லாம் அரும்பாடுபட்டுத் தேடியெடுத்து எம்மிடம் ஒப்புவித்தார். அவரது அரும்பெரும் முயற்சியினால் கிடைத்த கட்டுரைகளைப்படித்து விபுலாநந்த வெள்ள நூலினுக்கமைய ஒரு சில கட்டுரைகளைத் தெரிந்தோம். மேலும் பல இதழ்களில் வெளிவந்த கட்டுரைகள் பலவற்றையும் சேர்த்துத் தொகுத்தோம். எமது தொகுப்பு "விபுலாநந்த வெள்ள"மாக மலர்ந்தது.

இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ள கட்டுரைகளைக் கையாள்வதற் கனுமதி யளித்த பத்திரிகை ஆசிரியர்களுக்கும், மதிப்புரை வழங்கிய திரு. க. செ நடராசா அவர்களுக்கும், மதிப்புக்குரிய சுவாமி பரமாத்துமாநந்தா அவர்களுக்கும், பிரசுரகர்த்தா அவர் களுக்கும் எம் இதயம்கலந்த நன்றியறிதலை உரிமையுடையதாக்கு கிறேம். ஒப்பில்லாத விபுலாநந்த வெள்ளத்தை உங்கள் அன்புக் கைகளில் அகம் மலரப்படைக்கிறேம். ஏற்றுக் கற்றுப் போற்றி இன்புறுவீர்களாக.

குருமண்வெளி
மட்டக்களப்பு
(Ceylon)

அருள் செல்வநாயகம்

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கலைச்சொல்லாக்கம் ... | 1 |
| 2. | இலக்கியச் சுவை ... | 12 |
| 3. | அறத்துப்பாலாராய்ச்சி ... | 25 |
| 4. | சோழமண்டலத்துத் தமிழும் ஈழமண்டலத்துத் தமிழும் ... | 34 |
| 5. | உயிர்வாழ உழைப்பு ... | 45 |
| 6. | பாவலர்விருந்து ... | 50 |
| 7. | இளமைப் பருவத்தின் பெருவனப்பு ... | 75 |
| 8. | யோகமார்க்கம் ... | 78 |
| 9. | அருநிதியம் விலைசரசம் ... | 86 |
| 10. | மாதவர் நோன்பும், மடவார் கற்பும், மன்னவர் நீதியும் ... | 91 |
| 11. | பெரியோர் வாழ்க்கையும் அவரது திரு நட்சத்திரங்களும் ... | 94 |
| 12. | மானத சக்தியும் காரியசித்தியும் ... | 98 |
| 13. | தமிழ்மொழியின் தற்கால நிலைமையும் தமிழரின் கடமையும் ... | 103 |
| 14. | மானிடனும் அவன் மனத்தின் ஆற்றலும் ... | 113 |
| 15 | சிந்தனை மொழிகள் ... | 125 |

# 1

## கலைச்சொல்லாக்கம்*

சென்னை மாகாணத் தமிழர் சங்கத்தாரது பெருமுயற்சியினாலே, பலப் பல அறிவுத்துறையிற் புலமை வாய்ந்தோரும், உயர்ந்த ஆராய்ச்சித் துறைகளில் முயன்றுழைப்போரும், இளைஞர்க்குரிய கல்வி பயிற்றும் சிறந்த தொழிலினை மேற்கொண்டோரும், தமிழ்மொழி வளர்ச்சியில் ஆர்வம் மிக்கோரும், கல்வியிலாகா, பல்கலைக்கழகம் என்றித்தகைய அதிகார சபையாரால் அனுப்பப்பட்டோரும், பிறரும் ஈண்டுக் குழுமியிருக்கின்றனர். நவிலுந்தோறும் நூல் நயம்போலப் பயிலுந்தோறும் இனிமை பயக்கும் பண்புடையாளராகிய இப்பெருமக்களைக் காணுதலினாலே என்னுள்ளம் களிகூருகின்றது.

தமிழ்மொழி வளர்ச்சியைச் சிறந்த குறிக்கோளாகக் கொண்டு, இன்றைக்கு மூன்றாண்டுகட்கு முன்பு நிறுவப்பெற்ற சென்னை மாகாணத் தமிழர் சங்கமானது கலைச்சொல்லாக்கமென்னும் துறையிலே, சென்ற மூன்றாண்டுகளாக முயன்றுகொண்டிருக்கின்றது. இதுவரையும் செய்த வேலையை மதிப்பிட்டுத் திருத்தஞ் செய்தலும், இனி நடத்தற்குரிய இவையெனத் தீர்ப்பிட்டு முடிவு செய்தலும் இம்மகாநாட்டின் நோக்கங்களாகும்.

மேனாட்டுத்தொடர்பு ஏற்பட்ட காலம் முதலாக அந்நாட்டினரது உயர்வுக்குக் காரணமாயிருக்கின்ற கலைத்துறைகளைத் தம்மொழிப்படுத்த வேண்டுமென்னும் ஆர்வம் இந்திய மக்களிடையே இருந்து வருகின்றது. தொன்றுதொட்டுத் தமக்கு உரிமையாக வருகின்ற உண்மை நூல்களின் நிறைவையும், குறைவையும் நண்குணர்ந்த கலைவல்லுநர்

*சென்னை, பச்சையப்பன் கல்லூரி மண்டபத்திலே, சென்னை மாகாணத் தமிழர் சங்கத்தாரினாதரவிலே "கலைச்சொல்லாக்கம்" கருதி 1936-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20-ஆம் நாள் கூடிய மகாநாட்டிலே அருட்டிரு விபுலாநந்த அடிகளார் நிகழ்த்திய தலைமைப் பேருரை.

குறைவாய துறைகளை நிறைவு செய்யும் வழிகளைத் தேடி நிற்பது இயல்பேயாம். அஃதன்றியும் கலைத்துறைகள் கால தேச விகற்பங்களால் வேறுபடாது, எந்நாட்டினருக்கும் எக்காலத்தும் வேண்டப்படுவதாதலின், அவை உலகிற்குரிய பொதுவுடைமைகளாகக் கொள்ளும் தகுதி வாய்ந்தன. மேலும் இந்நாட்டின் கல்விமுறை இங்குள்ள பல்கலைக்கழகங்களை அநுசரித்து ஒழுங்கு செய்யப்படுவது. இற்றைக்கு ஏறக் குறைய எண்பது ஆண்டுகளாக நடைபெற்று வருகின்ற சென்னைச் சருவகலாசாலையின் விதிகளுக்கிணங்கக் கல்வி கற்றுத் தேறிய அறிஞர்களே இந்நாளிற் கலைத்துறைகளிலும் அரசியற்றுறைகளிலும் முன்னின்று இந்நாட்டின் நிர்வாகங் களை நடத்தி வருகின்றனர். இவர் தாம் பயின்ற மேற்றிசைக் கலைத்துறைகளின் சிறப்பினையுணர்ந்து அவை எப்பால ரிடத்தும் பரவவேண்டுமென விழைந்து நிற்பது முறையேயாம்.

## 2

"சையன்ஸ்" என்னும் ஆங்கில மொழி ஒருவாறு நோக்கு மிடத்து அறிவுத்துறையனைத்தினையும் குறிக்குமெனினும் "நிலந்தீ நீர் வளி விசும் போடைந்துங் கலந்த மயக்கமாகிய" உலகத்திற் பொறியுணர்வாற் சுட்டியுணரப்படுபவற்றை அளந்தும் இனங்கூட்டியும் ஆராய்கின்ற பூதபௌதீக நூற் றுறைகளே "சையன்ஸ்" என்னும் மொழியாற் சிறப்பாகக் குறியீடு செய்யப்படுகின்றன. அஃது அப்பரிசாக அமைந்த தெனினும், அறநூல், பொருணூல், இன்பநூல், வீட்டு நூல் எனவழங்கும் பாகுபாட்டினேடு Faculty, Laws, Science, Arts, Divinity என ஐவகைப்படுத்தியமைத்த மேனுட்டு மரபினை ஒப்பவைத்து நோக்கும்போது "சையன்ஸ்" என்னும் மொழி பொருட்பாலனைத்தினையுங் குறியீடு செய்வதெனக் கொள்ளு தலும் ஒருதலை. அளத்தலும், இனங்கூட்டுதலும், வரையிறை செய்தலும், பொதுமை காண்டலும், இலக்கணங் கூறலும் என்றிவையனைத்தும் கலைத்துறையனைத்தினுக்கும் ஏற்பட்ட வாதலின், தனித்தனித் துறைகளை ஆராய்ந்து அவை தமக்கு வேண்டிய சொற்களை அமைத்துக் கொள்ளுமுன் கலைத் துறையனைத்தினுக்கும் பொதுவாக வேண்டப்படுவனவையா கிய சொற்களை ஆக்கிக் கொள்ளுதல் நலமாகும். கலைத்துறை கள் இவை என வகுத்துக் காட்டுவதும், கலைவல்லுநராகிய

1973FEB24
BATTICALOA



பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றியதுமாகிய "நூற்றொகை விளக்கம்" என்னும் நூல் சூத்திரமும் உரையுமாக வமைந்து சிறந்த முடிபுகள் பலவற்றைத் தெளிவுபெற எடுத்துக் காட்டுகின்றது. புத்தம் புதிய கலைகளை இயற்றும் முயற்சியிலீடுபடுவோருக்கு இந்நூல் இன்றியமையாத கருவியாகும்.

3

தமிழ்மொழியிலே ஆட்சியிலிருக்கும் சொற்களை ஆராய்ந்து கண்டறிதல் நாம் செய்தற்குரிய முதற்பணியாகும். "வடமொழி தமிழ்மொழி யெனு மிருமொழிக்கும் இலக்கணம் ஒன்றேயென்றே யெண்ணுக" என்னும் கூற்றினை நாம் முற்றிலும் ஒப்புக்கொள்ளாவிடினும், வடமொழியிலிருந் தெடுத்துத் தமிழான்றோராலே தமிழுருவாக்கி வழங்கப்பட்ட சொற்களைப் பிறமொழிச் சொற்களெனக் கடிந்தொதுக்குதல் மேற்கொள்ளாது அவைதம்மை ஆக்கத் தமிழ்மொழியாகத் தழுவிக்கொள்வதே முறையாகும். இமயம் முதற் குமரி வரையும் பரந்துகிடக்கும் பரத கண்டமெனும் பெருநிலப் பரப்பின் அறிவுச்செல்வம் பிளவு படாத ஒன்றேயாம் என்பதை நாம் மறந்துவிடுதல் கூடாது. சாதி சமய வேறுபாடின்றி இந்தியநாட்டுப் பேரறிஞர் கலைத்துறையிலே அழப்புகுந்து ஆராய்ந்து கண்ட சிறந்த முடிபுகளை வடமொழியிலெழுதும் வழக்கம் தொன்றுதொட்டு இந்தநாட்டிலே யிருந்து வருகிறது. இதனால் வழக்கு மொழிகள் கலைத்துறைகளிலே பெருக்கமடையாது ஒழிந்தன. உதாரணமாகச் சிற்பக் கலையினை எடுத்துக்கொள்வோம். தேவர் கோட்டம், மன்னன் கோயில், மக்களில்லம் என்னுமிவை தம்மையமைக்கும் முறைகளையும், தெய்வச்சிலையுருவங்களையமைக்கும் கணித நுட்பங்களையும் பண்டைத்தமிழர் நன்குணர்ந்திருந்தனரென்பதற்குத் தமிழ்நாட்டிலுள்ள திருக்கோயில்களே சான்று பகர்கின்றன. இவை தம்மையமைக்கும் ஆற்றல்வாய்ந்த சிற்பியர் தமிழ் நாட்டில் இன்றும் உளர். அங்ஙனமாயினும் இக்கலை நுட்பங்களனைத்தினையும் உணர்த்தும் ஆகமநூல்கள் வடமொழியிலேதான் எழுதப்பட்டிருக்கின்றன. இவை தம்மை வழக்கு மொழிகளிலே பெயர்த்தெழுதுதல் சாலவும் வாய்ப்புடைத்து. இம்முயற்சியிலே வடமொழி வல்ல தமிழறிஞர் இனிமேலாவது ஈடுபடுவாராக.

4

சாங்கியம், யோகம், நியாயம் வைசேடிகமாகிய நான்கு சாத்திரங்களிலும் கலைநூலுணர்ச்சிக்கு வேண்டிய பொருள் மலிந்து கிடக்கின்றது. பாரத நாடு செய்த அருந்தவப் பயனாகத் தோன்றிய சுவாமி விவேகாநந்தரியற்றிய "இராஜ யோக" நூலினை மொழிபெயர்க்குந் தொழிலில் யான் ஈடு பட்டிருந்த காலத்திலே யோகசாத்திரத்திற்கு முதனூலாகிய "பதஞ்சலி யோக சூத்திர" நூலினைத் தமிழில் மொழிபெயர்த் தெழுத நேரிட்டது. அம்மொழிபெயர்ப்பு சுவாமி விவேகா நந்தரியற்றிய நூல்களின் தமிழ்மொழி பெயர்ப்பாகிய "விவேகாநந்த ஞானதீப" முதற்றொகுதியிலே வெளியிடப் பட்டிருக்கிறது. அதனைப்படித்த அன்பர் பலர் மிகவுயர்ந்த நுண்ணிய கருத்துக்களைத் தூய தமிழிலே எழுதுதல் கூடும் என்னும் முடிபிற்கு வந்தனர். நியாய வைசேடிக நூல்களையும் மொழிபெயர்த்தெழுத முயன்றேன். ஓய்வு ஏற்படாமையால் அம்முயற்சி நிறைவு பெற்றிலது.

ஒரோவிடத்து ஆட்சிப்பட்ட வட மொழிப்பதங்களைத் தமிழில் வழங்குதல் குற்றமாகாது. பிங்கலந்தை, திவாகரம், சூடாமணி நிகண்டு என்னும் நிகண்டுகளிலே வந்த பதங்களை யெடுத்தாள்வது எவ்வாற்றானும் பொருத்தமுடையதாகும். சிவஞானபோதம், சிவஞான சித்தியார் முதலிய உண்மை நூல்களில் வழங்கிய வடமொழிப் பதங்கள் ஆன்றோர் வழக் காதலின் எம்மால் உவந்தேற்றுக் கொள்ளப்படுவனவேயாம். சித்தர் நூல், வைத்திய நூல், சோதிட நூல் என்னும் இவை தம்முள்ளும் தலையாயினோரியற்றிய நூலில் வரும் மொழிகளில் தமிழில் வழங்குதற்குரியவேயாம். இவையெல்லாம் புதுச் சொல்லாக்கத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ளன.

சொற்களைப் பொருள் பற்றுக்கோடாக வகைப்படுத்தி வழங்க முயன்ற நிகண்டு நூல்கள் புதுச் சொல்லாக்கத்திற்கு பேருதவி புரிவன. டாக்டர் ரோஜெட் என்பவர் ஆங்கில மொழி யிலியற்றிய "தெசாறுஸ்" என்னும் நிகண்டு நூலினை நோக்குவோருக்கு இவ்வுண்மை நன்கு புலப்படும். கலைச் சொல்லாக்கத்திற்கென வட மொழி, ஆங்கில மொழி, தமிழ் மொழியாகிய மும் மொழியினும் பொருட்பாகுபாடு செய்யும் ஒரு மும்மொழி நிகண்டினை வகுத்தமைத்தல் பெரும் பயன் றருவதாகும்.

5

பிறமொழியிலிருந்து எடுத்த பதங்களைத் தமிழில் வழங்கு மிடத்து அவை தம்மை எவ்வாறு தமிழாக்கிக் கொள்ளுதல் வேண்டுமென்பதைக் குறித்து ஒரு சில குறிப்புக் கூறுவாம். ஒவ்வொரு மொழிக்கும் சிற்சில சிறப்பியல்புகளுள. அவை தம்மை மாறுபடாது பாதுகாத்தல் ஆன்றோர்க்கியல்பு. யாப்பியலிற் கூறிய காசு, நாள், மலர், பிறப்பு என்னும் நால் வகை வாய்ப்பாடும் பற்றி நடப்பன. ஓரெழுத்தொரு மொழி யும் ஈரெழுத்தொருமொழியும், இரண்டிறந்திசைப்பன யனைத் தும் தொடர் மொழியேயாம். அவைதாம் ஈரசை கொண் டும் மூவசை புணர்ந்தும் சீரியைந்திறுவன. ஈரசை மொழி களே பெருவரவின. மூவசையின் மிக்க மொழிகள் தமிழிற் பயில்வதில்லை. மொழி முதலிலும் இறுதியிலும் நிற்றற்குரிய எழுத்து இவையாமெனவும் இன்ன இன்ன எழுத்துக்களின் முன்னர் இன்ன இன்ன எழுத்துக்கள் மயங்காவெனவும் இலக் கண நூலாசிரியர் வகுத்துக் காட்டியிருக்கின்றனர். அவர் ஆராய்ந்தமைந்த விதிகளுக்கு இயைவாகச் சொற்களை யாக்கிக் கொள்ளுதல் முறையாகும். உயிருள்ள மொழி யானது பிறமொழித் தொடர்பு கொண்டு தனக்குரிய சொற்களஞ்சியத்தைப் பெருக்கிக் கொள்ளுதல் வேண்டும். வினையெஞ்சுகிளவி, பெயரெஞ்சுகிளவி தொகைமொழி, தொடர்மொழி என்றின்னவற்றிற்கு இலக்கண நூலாசிரியர் கூறிய வரம்பினைக் கடைப்பிடிப்பது எவ்வாற்றானும் இன்றி யமையாததேயாம்.

வாங்கு, மேசை, கதிரை என்னும் மொழிகள் Bench, Table, Chair என்னும் ஆங்கிலச் சொற்களின் மொழி பெயர்ப்பாக ஈழநாட்டில் வழங்கப்படுகின்றன. இவை போர்த்துக்கீச மொழியிலிருந்து தமிழில் வந்து வழங்குந் திசை மொழிகளா மென்பதைப் பெரும்பாலார் அறிந்து கொள்வதில்லை. இச் சொற்கள் தமிழுருவுடையவாதலின் வேறுபாடின்றி வழங்கப் படுகின்றன. ஒரேயினப் பொருள்களைக் குறிக்குஞ் சொற் கள் ஒரே விகுதி பெற்று நிற்றலும். முரணிய வினைச் சொற்கள் ஒரே வாய்ப்பாட்டால் நடந்து பெரும்பாலும் ஒரே யெதுகையாயவாக நிற்றலும் தமிழ் வழக்கு. அறம், மறம் எனும் முரணிய வினைச் சொற்கள் ஒரே யெதுகையாயவாக

அமைந்து நிற்றலை நோக்குக. இம்முடிபுகளுக்கு எடுத்துக் காட்டாக "மின்சார சாத்திர வரலாறு" என்னும் பொருள் பற்றி யானெழுதிய கட்டுரையினொரு பாகத்தைப் படிக்கின்றேன்.

ஊசிக்காந்தத்தினியல்பு மிகப் பழைய காலந்தொட்டுப் பல தேசத்துப் பண்டிதர்களாலும் அறியப்பட்டுவந்து, காந்தக் கோட்டையினருகே சென்ற கப்பலொன்றிலிருந்த ஆணிக லெல்லாங் கழன்று போகக் கப்பல் அழிந்து போயிற்று எனக்கூறும் பழங்கதையும் உண்டு. காந்தக் கட்டியினுல் உரிஞ்சப்பட்ட இரும்புத்துண்டு காந்தத்தினியல் பினைப் பெறு மென்பதை முன்னோரறிந்திருந்தினர். யவன புரத்திலே மிலேத்துஸ் என்னும் பகுதியில் வதிந்த தாலேஸ் என்பாரொருவர் பொன்னம்பர் என்னும் ஒரு வகைப் பிசின் கையினுல் உரிஞ்சப்படின் கடிதத்துத்துண்டு போன்ற பாரமற்ற பொருள்களைக் கவரும் வன்மையைப் பெறுமெனக் கண்டறிந்தனர். பின்னுளிற் பதினேழாம் நூற்றுண்டினுரம் பத்திலே லண்டன் பட்டினத்தில் வசித்த கில்பேர்ட் என்பார் ஓராசிரியர். பலவகைப் பொருள்களையும் பரீட்சித்ததின் பயனுகக் கண்ணுடி, கந்தகம், முத்திரை மெழுகு, வைரம், கோமேதகம், குங்கிலியம் ஆகிய பொருள்கள் பட்டுத்துணி முதலியவற்றுல் உரிஞ்சப்படின் ஒரு வகைக் கவரும் சக்தியைப் பெறுமெனக் கண்டு பிடித்தனர். இப்பொருள்களை யெல்லாம் பொன்னம்பரைக் குறிக்கும் யவுனபுர மொழியினுலே "எலேக்ரிறிக்ஸ்" எனக் குறியீடு செய்தனர். இவருக்கு ஒரு நூற்றுண்டினுக்குப் பிறகு வாழ்ந்த ஸ்டீபன் கிரே (1670-1736) என்னும் ஆங்கிலேயர் மேற்கூறிய கவருஞ்சக்தி உலோகப் பொருள்களாலான தந்திகள் வழியாக எளிதிற் பாயுமென்றும் பட்டுத்துணி முதலியவற்றினுலே தடைப்படுமென்றுங் கண்டனர். ஆங்கதுபற்றி இவர் பொருள்களை உகைவன (Conductors), தகைவன (Non-conductors ; insulators) என இருதிறப்படுத்திக் கூறினர். [ஊர்தல், உய்த்தல், உகைதல், ஓட்டல், நடத்தல், செலுத்தல் என்பன ஒரு பொருட் சொற்கள். தகைதல், தடுத்தல், சிறைப்படுத்தல் என்பன ஒரு பொருட் சொற்கள்.] இவர் காலத்தில் வசித்த டூபே (1698-1739) என்னும் பிராஞ்சியர் உரிஞ்சுதலாற் பிறக்குஞ் சக்தி இரு வகைப் படுமெனக் கண்டு அவற்றினை Vitreous (கண்ணு

டியைச் சார்ந்த), Vemous (குங்கிலியத்தைச் சார்ந்த) என வெவ்வேறு அடை கொடுத்து வழங்குவராயினர். 1746-ஆம் ஆண்டிலே பீட்டர்வன் முல்சென் புறாக் என்னும் ஒல்லாந்து தேசத்து ஆசிரியர் லேடன்சால் என வழங்கும் இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். லேடன் என்பது ஒல்லாந்த் நாட்டிலுள்ள நகரின் பெயர்; சால் (ஜாடி). ஈங்கு, கண்ணுடியாற் செய்த ஒரு பாத்திரத்தைக் குறிக்கும். உள்ளும் புறம்பும் உலோகத் தகட்டினுல் மருவப்பட்ட ஒரு கண்ணுடிப் பாத்திரத்தினுல் அமைந்தது இவ்வியந்திரம். இதனைப்பற்றி பின்னர் கூறுவாம். இவ்வியந்திரத்திலிருந்து எழுந்த சக்தியின் தாக்கல் பலருக்கு அதிசயத்தை விளைத்தது. அக்காலத்திலே அமெரிக்க நாட்டில் வாழ்ந்த பெஞ்சமின் விருங்கிளின் (1706-1790) என்பார் லேடன்சாலிலிருந்தெழுந்த தாக்கலும் (Discharge) ஒளி வீச்சும் (Light effect) மேகத்திலிருந்தெழும் இடியேற்றையும் மின்னலையும் நிகர்த்தலா மெனக் கண்டனர். இவர் மின்னலின் தன்மையைப் பரீட்சிக்கக் கருதி உலோகப் பொருளினுலான தந்தி யொன்றினைக் காற்ருடிப் படத்திற் கட்டி மேலேற்றி ஆராய்ச்சி செய்தார். இத்தகைய ஆராய்ச்சிகளின் பயனுகப் பொன்னம்பர் கண்ணுடி முதலியவற்றை உரிஞ்சுதலாற் பிறக்குஞ்சக்தி மின்னற்கொடியாக மேகத்திற் ருேன்றுகிற மின்சக்தியோடு ஒன்ருகிய நீர்மையதே, எனக் கண்டறிந்தார். டுபே முதலியோர் கூறியது போல இச்சக்தி இருவகைப்படாது, ஒருவகையே யாமெனவும் அது மிகை (Positive), குறை (Negative) என்னும் வேறுபாட்டினுலே இருவேறு நீர்மையதாகிக் கூட்டு (Plus) மின்சக்தி, கழி (Minus) மின்சக்தியென இரண்டாகுமெனவுங் கண்டார். தகைவு செய்யப்பட்ட ஒரு பாத்திரத்தினுள்ளே உலோகக் கோலொன்றில் இரண்டு மெல்லிய பொற்றகடுகளைத் தொங்க விட்டபின் குறித்த கோலினை மின்சக்தியேறிய ஒரு பொருளினுற்ருெட்டாற் பொற்றகடுகள் அகன்று நிற்பனவா மெனக் கண்ட ஹாக்ஸ்பி (1706) என்பார் மின்காட்டி (Electroscope) என்னுங் கருவியை யமைத்தார். ஹென்றி கவெண்டிஷ் (1731-1810) என்னும் ஆங்கிலேயரும், சார்ள்ஸ் அகுஸ்தின் கூலம்ப் (1736-1806) என்னும் பிராஞ்சியரும் மின்சக்தியின் கவர்ச்சி, தாக்கல் என்னுமிவற்றின் அளவுகளைக் கணித்தறியும் மார்க்கங்களையும் கருவிகளையும் அமைத்தார்.

மேற்குறித்த ஆராய்ச்சிகள் நடந்து கொண்டிருக்குங் காலத்திலே இத்தாலி தேசத்து வைத்திய பண்டிதரான லூய்கி கல்வானி (1737-1898) என்பார் ஒருவகை மீன்கள் மின் சக்தியின் தாக்கலை யொத்த தாக்கலைத் தருகின்றனவெனக் கண்டு அப்பொருளைத் தொடர்ந்து விசாரித்து நீர்வாழ் சந்துக் களின் நரம்பு மண்டலங்களை ஆராய்வாராயினர். ஒரு நாள் அவர் தவளையின் பின்னங்காலிரண்டையுஞ் சேர்த்துச் செம்புக் கம்பியிற் கோர்த்துத் தூக்கியிருந்தார். காற்று வீசத்தவளை யின் கால் அணித்தாகவிருந்த இரும்புச்சலாகையிற் பட்டது; பட்டவுடனே அவை தவளைபாயும்போது ஒடுங்கி நிமிர்வது போல ஒடுங்கி நிமிர்ந்தன. நரம்பிலிருந்தே அம்மின்சக்தி தோன்றியதெனக் கல்வானி நினைத்தார். அவர் தேயத்தவ ரான அலெக்சாந்திரோ வொல்தா (1745-1827) என்பவர் கல்வானி கொண்ட முடிபு சரியன்றெனவும் இரு வேறு உலோகங்கள் ஒன்றினை யொன்று தீண்டுவதனுல் மின்சக்தி பிறக்கிற தெனவுங் காட்டித் துத்தநாகம், செம்பு என்னும் இவற்ருற் செய்த தகடுகளை ஒன்றின்மேலொன்ருக மாற்றி யடுக்கி அவற்றிடைட்யே உப்பு நீராற் றேய்த்த ஊறுதாள் களை வைத்து அடியிலிருந்த செப்புத் தகட்டோடு மேலே யிருந்த துத்தநாகத்தைச் செப்புக் கம்பியினுலிணைத்து அவற் றின் வழியாக மின்னருவி பாய்வதைக் காட்டினர். பல கண்ணுடிப் பாத்திரங்களில் உப்புநீரை நிறைத்து அவற்றி னுள்ளே செப்புத்தகடு, துத்தநாகத்தகடு என்னுமிவற்றை நிரைபட வைத்துச் செம்புக் கம்பியினுலிணைத்து மின்னருவி பாயுமியல்புகளைக் காட்டினர். இங்ஙனம் பிறப்பிக்கப்படு கின்ற மின்னருவியானது நீரினை நாரம், அனலம் என்னும் இரு வேறு வரிகளாகப் பிரித்துவிடும் என்பதை 1800-ஆம் ஆண்டிலே நிக்கல்ஸன், கால்லைல் என்னும் இருவர்கள் கண்டு பிடித்தனர். 1802-ஆம் ஆண்டிலே ஸேர் ஹம்பிரி டேவி என் பார் மின்னெகிழ்வு முறையினுலே நீரினைப் பிரித்து அத னிடையேயுள்ள நீரகம் தீயகம் என்னும் இரண்டு வழி களிலும் இரண்டு பங்கிற்கு ஒரு பங்கு விகிதமாக அமைத் துளவாமெனக் காட்டினர்.

மின்சக்திக்கும் காந்தசக்திக்குமிடையேயுள்ள தொடர் பினைக் கண்டுபிடித்த பெருமை டென்மார்க் தேசத்துச் சாஸ்திர பண்டிதராகிய ஹான்ஸ் கிறிஸ்தியன் ஓயர்ஸ்ரெட்

(1777-1857) என்பவருக்குரியது. இவர் கொப்பனேஜன் நகரத்துப் பல்கலைக் கழகத்திலே பேராசிரியரா யமர்ந்திருந்தார். கல்வானி மின்னருவித் தொடர் ஒன்றின்மீது இவர் பரீட்சை செய்து கொண்டிருக்கும்போது தற்செயலாக ஒரு காந்த ஊசியை மின்னுருவி பாயுங் கம்பிக்குச் சமீபமாகக் கொண்டு வந்தார். வடக்குத் தெற்காக நின்ற கம்பி தன்னிலையினின்று விலகியது. அருவிபாயுங் கம்பியை எதிர்த்திசையாகப் பிடித்தார். கம்பி மறுபுறமாக விலகியது. இந்தச் சோதனைக் கிரியையை ஒயர்ஸ்ரெட் வெளியிடுதலும் புதியதோர் ஆராய்ச்சித்துறை ஏற்பட்டிருப்பதைக் கண்ட ஐரோப்பிய அறிவு நிலையங்கள் இத்துறையை விசாரிக்கத் தொடங்கின. இதனைப் பெருகவாராய்ந்து சிறந்த முடிபுகளைக் கண்டவர் அந்திரேமாரி அம்பியர் என்னும் பிராஞ்சிய விஞ்ஞான சாஸ்திரியார் ஆவார். இவர் 1775-ஆம் ஆண்டிலே பிறந்து 62-ஆம் வயதிலே 1836-ல் உயிர் துறந்தார். தொடுத்துக் கணித சாஸ்திரத்தில் வல்லவராகிய இவ்வறிஞர் ஒயர்ஸ்ரெட் வெளியிட்ட உண்மையினைப் பூரணமாக ஆராய முற்பட்டார். இவர் கண்டு பிடித்த விதி ; காந்த ஊசியைப் பார்த்த வண்ணமாக ஒருவன் மின்னருவியோடு நீந்துகிறுனென்று வைத்துக் கொள்வோமாயின், ஊசியின் வடகோடி அவனது இடக்கைப் பக்கத்திற்கும் தென்கோடி வலக்கோடிப் பக்கத்திற்கும் விலகும். மேற் செல்வதன்முன் மின்னருவித் தொடர் முழுவதும் ஒரு வலயமாக அமைத்து நிற்கும் பொழுதுதான் மின்னருவி பாயும். அவ்வலயத்தைத் தொடுத்தலினுலும் வெட்டி விடுதலினுலும் மின்னருவி பாய்ச்சலை ஓடவும் நிற்கவுஞ் செய்தல் கூடும். வட்டாகாரமாக அமைந்த செம்புக் கம்பியின் நடுவிலே காந்தசக்தி தாக்கும். அச்சக்தி தாக்கலினளவு மின்னருவியின் வேகத்தைக் கணிப்பதற்குச் சாதனமாகும். பல சுற்றுக்களாலமைந்த செம்புக்கம்பி நாளத்தினுள்ளே இரும்புத் துண்டினை வைத்தால் அது காந்த சக்தி பெறும். உருக்கு நிலை பேருகிய காந்தமாகும். மின்னருவியின் காந்த சக்தியினுலே அவ்வருவியின் வேகத்தை யளப்பதற்கு அமைந்த கருவி கல்விஞேமாரி எனப்படும். மின்னருவி வேகத்தை யளப்பதற்குரிய அலகு விஞ்ஞான சாஸ்திர பண்டிதருடைய பெயரினுல் அம்பியர் என வழங்கப் பெறும். இதைக் குறித்துப் பின்னர்க் கூறுவாம்.

இனி ஜோர்ஜ் சைமன் ஓம் என்பவர் செய்த ஆராச்சிகளைப் பற்றிச் சிறிது சொல்லுவாம். இவர் ஜெர்மானியர். ஏர்லங்கன் நகரத்திலே (1789-1854) பிறந்தார். அனற் பெருக்கமானது ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்தினுக்கு ஓடுதலைப்பற்றிய முடிவுகளை 1822-ஆம் ஆண்டிலே ஜோஸெப் பூரியர் என்பவர் ஆராய்ந்து வெளியிட்டார். குறித்தகால வெல்லையிலே யோடுகிற அனலின் மொத்த அளவு அனலோடுகிற உலோகக் கோலின் எல்லைகளில் ஏற்பட்ட மதுகை வேறுபாட்டுக்கு நேர் விரோதமாகுமென்பது பூரியர் கண்ட முடிபு. ஓம் இம் முடிபைக் குறித்துச் சிந்தித்து மின்னருவியின் பாச்சளவு அவ்வருவிபாய்கின்ற கோலின் ஈரந்தத்திலுமேற்பட்ட மின்மதுகை வேறுபாட்டிற்கு நேர் விகிதமாக அமையும் என்பதைக் கண்டார். இதைக் குறித்து ஓம் செய்த சோதனைகளிலே ஒரே உலோகத்தினாலமைந்து ஒரே கண்ணறையளவுடையவாய்ப் பலவேறு நீளங்களையுடைய தந்திகளின் மூலம் மின்னருவியைப் பாய்ச்சினார். உலோகமும் நீளமும் மாறுபாடற்றிருக்கக் கண்ணறையளவை வேறுபடுத்திச் சில பரீட்சைகளைச் செய்தார். இயற்றின் பயனாக அவருடைய நாமத்தினால் வழங்குகிற ஓம் விதி என்பதனைக் கண்டு பிடித்தார். வேறு வேறாகிய உலோகங்கள் வேறு வேறளவாக மின்னருவியை உகைக்கும் என்பது இவரது முடிபு. உகைப்புந் தகைப்பும் ஒன்றினுக் கொன்று விலோம மாவன.

அருவி வேகமானது முடுக்கத்திற்கு நேர் விகிதமாயும் தகைப்புக்கு விலோம விகிதமாகவும் அமைந்து நிற்கும் தகைப்பு வலயத்தின் தகைப்பும் மின் கலத்தின் தகைப்பும் ஒன்று கூட்டிய கூட்டுத் தொகையாகும். இவ்விதியைக் கொண்டு மேற் குறித்தவற்றை அளந்தறிதல் கூடும்.

## 6

கலை நூல்களை நாட்டு மொழியிலெழுதும் பெரு முயற்சி இந்தியாவின் பல பாகங்களிலும் நடந்து கொண்டிருக்கின்றது. ஐதராபாத் சமஸ்தானத்தினாதரவிலே நடைபெறும் ஒஸ்மானியா சர்வ கலாசாலையானது நாட்டு மொழியாகிய உருது பாஷையிலே எல்லாக் கலைத்துறைகளையும் பயிற்றுதற்கு

THE PUBLIC LIBRARY 1973 FEB 24

ஏற்பாடு செய்திருக்கின்றது. இந்தியாவின் பல பாகங்களி லும் உயர்ந்த விஞ்ஞானக் கலையாராய்ச்சிக்குப் பொது மொழியாக ஆங்கில மொழியமைதலும் ஒவ்வொரு மாகாணத் தினும் ஏழை மக்கள் தாமும் எளிதிற் பயின்று கொள்ள வேண்டிய கலைத்துறைகளனைத்தும் நாட்டு மொழியிலமைந்து நிற்பதும் பொருத்தமாகும்.

தொகுத்துரைக்கு மிடத்துக் கலைநூல்கள் நாட்டிற் பரவு வதற்கு எவ்வெச்சாதனங்கள் வேண்டப்படுவதோ ஆங்க வற்றைத் தாமதமின்றி ஆக்கித்தருவது அறிஞரது கடனாகும்.

இற்றைக்கு ஒரு நூற்றாண்டின் முன் யாழ்ப்பாணத்திலே ஆங்கிலக் கல்விச்சாலை நிறுவி, உயர்தரக் கல்வி பயிற்றுவித்த அமெரிக்க மிஷனரிமார் செய்த முயற்சினாலே வெளிவந்த வீச கணிதம், நியாய சாத்திரம், வான சாத்திரம், அங்காதிபாதம், சுகரணவாதம், உற்பாலனம், கெமிஸ்தம் முதலிய நூல்கள் ஒரு குறித்த மரபு பற்றிச் சொற்களை யமைத்துச் செல்லுகின் றன. அம்மரபு நமக்கும் பயன்படுமென்னு மெண்ணத்தினாலே ஈண்டு அதனைத் தருகின்றோம்.

# 2

# இலக்கியச் சுவை*

பரந்துபட்ட தமிழ் இலக்கியம் என்னும் பரவையினுள்ளே, சங்க மிருந்து தமிழாராய்ந்த நல்லியற் புலவர் வகுத்தமைத்த பத்துப் பாட்டும், எட்டுத் தொகையும், பதிணெண் கீழ்க் கணக்கு என்பனவும் பின்னரெழுந்த சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, சூளாமணி, நீலகேசி என்பனவும், கொங்கு வேண்மாக்கதையும், மூவர் தமிழும், திருவாசகமும், திருக்கோவையாரும், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமும். பெரிய புராணம், இராமாவதாரம், கந்தப்புராணம், வில்லி பாரதம் என்பனவும், திருவிளையாடற் புராண மிரண்டும், ஆரியப் புலவர் பாகவதமும், காசி காண்டமும், நைடதமும், இரகுவம்சமும், தேம்பாவாணியும், சீறாப்புராணமும், இரட்சணிய யாத்திரிகமும், சிறு பிரபந்தங்களென நின்றவற்றுள்ளே குமர குருபரரும், சிவப்பிரகாசரும், மீனாட்சிசுந்தரரும், சுப்பிரமணிய பாரதியாரும் வகுத்தமைத்தனவும் தமிழ் மாணவராலே பயிலப்பட்டு வருகின்றன. இவையாவும் செய்யுள் நடை இலக்கியங்கள், உரைநடை இலக்கியங்கள் தமிழில் அருகி நடப்பன. நக்கீரனார் கண்ட களவியலுரையும், பரிமேலழகியாரீந்த திருவள்ளுவருரையும், நச்சினார்க்கினியருவந்தளித்த சிந்தாமணி உரையும், அடியார்க்கு நல்லார் வழங்கிய சிலப்பதிகார வுரையும், பெரியவாச்சான் பிள்ளையுதவிய பிரபந்த உரையும், ஆறுமுக நாவலர் அன்பினோடருளிய பெரிய புராண வசனம் என்பனவும், இந்நாளிலே தமிழுக்கு வரம்பாகித் தென்றிசைக் கலைச்செல்வர், பெரும் பேராசிரியர், எழுத்தறிபுலவர் என உலகு புகழ நீடுநின்று தமிழ்த் தொண்டாற்றிவரும் சாமிநாதரருளிய மீனாட்சிசுந்தரர் சரிதம், உதயணன் கதை, பௌத்த தர்ம சங்கம் என்பனவும் சிந்தாமணி, சிலப்பதிகார, மணிமேகலைக் கதைச் சுருக்கங்களும் உரைநடை இலக்கியங்களாகி நிலவுகின்றன.

---

* 1939-ஆம் ஆண்டு கல்முனை நகரத்திலே நடை பெற்ற ஆசிரிய விடுமுறைக் கழகத்தினுக்குத் தலைமைதாங்கி அடிகளார் ஆற்றிய இலக்கிய நயச் சொற்பொழிவு.

இலக்கியம் இவையெனக் கண்டோம். இனி இலக்கியச் சுவையாவது யாது? அச்சுவையி லீடு படுவதற்குவேண்டிய மனப்பழக்கம் யாது? இலக்கியங் கற்றற்கு இயைந்த கருவிகள் யாவை என்றின்னோரன்ன வினுக்களுக் கெல்லாம் விடையிறுத்தல் வேண்டும். கற்று வல்ல ஆசிரியர் கழகத்தின் முன்னிலையிலே குறைமொழி உரைப்பினும் சார்பு நலம்பற்றி நிறைமொழியாகக் கொள்ளப்படு மென்னுந் துணிவினோடு ஒரு சில கூறத் துணிந்தேன். ஆசிரியத் தொழிலுக்கு மன நூற்பயிற்சி இன்றியமையாத சாதனமாகுமன்றோ? ஆதலினுல் முதற்கண் மன நூலாருழைச் சென்று அவர் அரிதிற் கண்டுணர்ந்த ஒரு சில முடிபுகளைப் பெறுதல் இன்றியமையாத தாயிற்று. மனமானது வெளிப்பட்டுத் தோன்றுமிடத்து அறிவு, இச்சை, துணிவு என முத்திறப்பட்டு நிற்குமென்பது மன நூலார் கண்ட முடிபு. அறிதல், இச்சித்தல், துணிதல் என்னும் முத்திறச் செயலும் தெளிவு, இனிமை, உறுதி என்னுங் குணங்களை அளாவி நிற்பன. இவை முறையே உண்மை, அழகு, நன்மை யென்னும் குணிகளைச் சார்வன.

உண்மை உணர்த்தும் நூல்கள் பூத பௌதீக விஞ்ஞான நூல்களும், தருக்க நியாய தத்துவ நூல்களும்; அழகு உணர்த்துவ இசையோவிய நூல்கள்; நன்மையுணர்த்துவ அற நூல்கள்; உண்மை அழகு, நன்மையாகிய அனைத்தும் உணர்த்துவ நல்லிசைப் புலவரளித்த இலக்கிய நூல்கள்; இவை செய்யுள் எனப்படும்.

ஏனைய கலைத்துறைகள் உள்ளத்தின் ஒவ்வொரு திறத்தினைப் பற்றி நிற்கச் செய்யுள் மாத்திரம் உள்ளம் முழுவதையும் பற்றி நிற்கும். ஆதலினுல் மதிப்பிடற்கரியதொரு நிறைவினையும் மலர்ச்சியையும் உள்ளத்திற்கு அளிக்கும். இந் நலத்தினை நல்லியற் புலவர் செய்யுளில் வைத்துக்காட்டுதல் மேற்கொள்வாம். பலப்பல இலக்கிய நூலினுள் ஒன்றினையே எடுத்துக் கொள்வோம்.

பாரதத்திற்குக் காப்பியத் தலைவன் யாவன்? கண்ணபிரான் என்பாரும், அருச்சுனன் என்பாரும், உதிட்டிரன் என்பாரும், சுயோதனன் என்பாருந் தம்முள்ளே முரணி நிற்க, ஈண்டுக் குறிப்பிட்ட அனைவரையுந் தனது அன்பி

ஞற் பிணித்த அங்கர்கோஞகிய கன்னன் காப்பியத் தலை வஞவானென்பாரது கூற்று வலிமையுற்று நிற்கிறது.

பெண்மைக்கிரதி யெனவந்த
  பெண்ணு ரமுதே பேருலகில்
உண்மைக் கிவனே வலிக்கிவனே
  உறுவுக்கிவனே உரைக்கிவனே
திண்மைக்கிவனே நெறிக்கிவனே
  தேசுக்கிவனே சிலைக்கிவனே-
வண்மைக்கிவனே கன்ன னெனு
  மன்னன் கண்டாய் மற்றிவனே ;

எனத் திரௌபதியின் செவிலித்தாயார் கூற்ருகக் கவி கூறுகின்ருர்.

"எத்தலங்களினும் மிகையாலோகை வாகையாலெதிரிலா வீரன்" நாகாயுதத்தினை மறுகாலு மேவாது பார்த்தனது சரமாரிக்கிலக்காகி நின்ற வேல்லையிலே, முதல்வஞகிய கண்ணபிரான் வஞ்சவேதியன் வடிவங் கொண்டுவந்து, "வறுமையால் வாடினேன் இக்கணத்து எனக்கு இயந்த தொன்று அளிப்பா" யென இரந்து நின்ருன்.

"என்று கொண்டந்த வந்தண னுரைப்ப
  விருசெவிக் கமுதெனக் கேட்டு
வென்றி கொள் விசயன் விசயவெங்கணையால்
  மெய்தளர்ந் திரதமேல் விழுவோன்
நன்றென நகைத்துத் தரத்தகு பொருணீ
  நவில்கென நான்மறை யவனும்
ஒன்றிய படிநின் புண்ணிய மனைத்தும்
  உதவுகென்றலு முள மகிழ்ந்தான்."

"ஆவியோ நிலையிற் கலங்கிய தியாக்கை
  அகத்ததோ புறத்ததோ வறியேன்
பாவியேன் வேண்டும் பொருளெலா நயக்கும்
  பக்குவந் தன்னில் வந்திலையில்
ஒவிலாதியான்செய் புண்ணிய மனைத்தும்
  உதவினேன் கொள்கநீ யுனக்கும்
பூவில்வாழயனு நிகரல னென்ருற்
  புண்ணிய மிதனினும் பெரிதோ."

THE PUBLIC ... 1973 FEB ... BATTICAL...

"என்ன முன் மொழிந்து கரங்குவித் திறைஞ்ச
இறைஞ்சலர்க் கெழிலே றனையான்
கன்னனை யுவகைக் கருத்தினு னோக்கிக்
கைப் புனலுடன் தருகென்ன
அன்னவனிதயத் தம்பின் வாயம்பா
லழித்தலு மங்கையா லேற்றுன்
முன்னமோ ரவுணன் செங்கைநீரேற்று
மூவுலகு முடன் கவர்ந்தோன்.''

குருச்சேத்திரப் போர்க்களத்திலே போர் தொடங்கிய பதினேழா நாளன்று நடந்த இத்தெய்வக் காட்சியை அகக் கண்ணுல் நோக்குவோமாக. பொழுது மேற்றிசையிலே இரண்டு விற்கிடை உயரத்திலே நிற்கிறது. சூரியனது பொன் போன்ற கிரணங்கள் புதல்வனது அகத்தினை மெல் லெனத் தழுவி நிற்கின்றன. அருச்சுனனது ஆயிரம் அம்புகள் துளைத்த துளைகளினின்றும் பாய்கின்ற செங்குருதி சூரிய குமாரனது உடலத்திலே ஆயிரங் கிரணங்கள் போலத் திகழ்கின்றது. இரு பெரு வீரர்களது இரதத்தில் பூட்டிய குதிரைகளும் செயலற்று நிற்கின்றன. கண்ணபிரான் விசயனை "செருவொழுதி'' யெனக் கைமர்த்திக் கன்னனை நோக்கி வருகின்றுன். வேதியன் வடிவமாக வந்த கண்ண பிரான் இரத்தலும் கன்னன் இதயத்தில் பாய்ந்து கிடந்த அம்பினை வாங்கி அங்கு பாய்ந்த செந்நீரே நீராகத் தான் புரிந்த புண்ணிய மனைத்தினையும் தானம் செய்கிறுன். பெற்ற கண்ணபிரானுகிய வேதியன் "வேண்டிய வரங்கேள் '' என் கின்றுன். இது கேட்ட கன்னன்.

"இல்லையென்றிரப் போர்க்கில்லையென்றுரையா
இதய நீ அளித்தருள்''

என்கின்றுன். கருணை வள்ளலாகிய கண்ணபிரான் உளமுருகிக் கண்களினின்று சொரிந்த நீரினுலே கன்னனை நீராட்டித் தனது தெய்வ வடிவோடு அவன் கண்களிக்கக் காட்சி யளிக்கின்றுர்.

"சமரமா முனையிற் றனஞ்சயன் கணையாற்
சாய்ந்துயிர் விடவுஞ் செங்கண்
அமலநாரணனைக் காணவும் பெற்றேன்.''

எனக்கூறிக் கன்னன் அகம் மகிழ்கின்ருன். பின்னும் அவன் கண்ணபிரானை நோக்கி,

" தருமன் மகன்முதலான அரியகாதற்
றம்பியரோ டமர்மலைந்து தறுகணுண்மைச்
செருவிலென துயிரனைய தோழற்காகச்
செஞ்சோற்றுக் கடன்கழித்தேன் தேவர்கோவுக்
குரை பெறுநற் கவசமுங் குண்டலமுமீந்தேன்
உற்றபெரு நல்வினைப்பே றுனக்கே தந்தேன்
மருதிடை முன் தவழ்ந்தருளுஞ் செங்கண்மாலே
மாதவத்தா லொருதமியன் வாழ்ந்தவாறே"

எனக் கூறுகின்ருன். இவ்வெல்லையிலே தாயாகிய குந்திதேவி போர்க்களத்தினை யடைந்து இறந்து படுகின்ற கன்னனை மார்புறத் தழுவி,

" ஓரைஞ்சு பேருளரா லறந்த வாத
உதிட்டிரனுதிய நாகக் கொடியோனுதி
ஈரைஞ்சு பதின்மருளர் தம்பிமார்கள்
இங்கிதங்க ளறிந்தடைவே யேவல்செய்யப்
பாரஞ்சு மொருகுடைக்கீழ் நீயே யாளும்
பதமடைந்தும் விதிவலியாற் பயன்பெருமற்
காரஞ்சு கரதலத்தா யந்தோ வந்தோ
கடவுளர் தம் மாயையினுற் கழிவுற்ருயே"

எனக்கூறி அழுதரற்றுகிருள். இத்தகையதோர் காட்சியினை ஹோமர் எழுதிய வீர காவியங்களிலும் காண்டலரிது. மன மெனும் இந்திர மாஞாலத் தேரிலேறிக் கால வெல்லையையும் தேச வெல்லையையும் கடந்து தீர்த்த யாத்திரை புரியும் அருச்சுனன் என்னும் தவசியுடனே பாண்டி நாட்டின் தலை நகரமாகிய மதுரைக்கணித் தாயுள்ள ஒரு பூஞ்சோலையை அடைவோமாக.

" குன்றிலிள வாடைவரும் பொழுதெல்லா
மலர்ந்திருக் கொன்றை நாறத்
தென்றல் வரும் பொழுதெல்லாஞ் செழுஞ் சாந்தின்
மண நாறுஞ் செல்வ வீதி."

பலப் பலவாக அமைந்த மதுரை மாநகரினைக் காக்கும் பாண் டியன் மகன்,

" சோதியரிச் சிலம்பரற்றத் துணை நெடுங்கண்
செவியளப்பத் தொடித் தோள்வீசி
ஆதியரவிந்தை யென "

விளையாட்டுக்கு ஆங்கு வருகின்றாள். அவளது,

" பச்சென்ற திருமுகமுஞ் சேயிதழும்
வெண்ணகையும் பார்வையென்னும்
நச்சம்பு மழுதூற நவிற்றுகின்ற
மடமொழியும் நாணும் பூணும்
கச்சின் கண்டடங்காத கனதனமும் நுண்ணிடையும் "

பார்த்தனது மனத்தினைக் கொள்ளை கொள்கின்றன.

" வண்டானந் திரிதடத்து வரிவண்டி
னினம்பாட மயில்களாடத்
தண்டார் மெய்க்கிளிக்கூட்டஞ் சான்றோர்க
ளுரை பயிற்றத் தமிழ்கள் மூன்றும்
கொண்டாடி யிளம்பூவைக் குழாந்தலை சாய்ந்
துளமுருகுங் குன்றினுங்கட்
கண்டாளக் குமரனைத் தங்கொடிக்கயலைப்
புறங்காணுங் கண்ணினளே."

" செந்திருவை யனையாளுந் திருமாலை
யனையானுஞ் சிந்தை யொன்றாய்
வந்திருவர் விலோசனமுந் தடையின்றி
உறவாடி மகிழ்ச்சி கூர்ந்து
வெந்துருவ மிழந்தமதன் மீளவும் வந்
திரதியுடன் மேவுமா போற்
கந்தருவ முறைமையினுற் கடவுளர்க்குங்
கிடைக்காத காமந் துய்த்தார்."

ஆங்கது நிகழ்ந்த பின்னர் அரசன் தனது புதல்வியது குறிப்பினை யறிந்து மணவினைக்கு வேண்டுவன புரிந்தான்.

" கோமடந்தை களிகூரப் புகழ்மடந்தை
களிகூரக் கொற்ற விந்தை
மாமடந்தை களிகூர மணவினை யொப்
பனைக்குரிய மடந்தை மார்கள்

பூமடந்தை யனை யாளைப் பூட்டிய வெண்
   தரளி மணிப் பூண்க ளாலே
நாமடந்தை நிகராக்கி நாயகன் றன்
   வலப்பாக நண்ணுவித்தார்.''

மணவினை நிகழ்ந்த பின்னர் ஒத்த காதலராகிய அவ்விருவரும்,

"நோக்கிய கண்ணிமை யாமனேக்கி
   நுண்ணிய மென் புலவியிலே நொந்துநொந்து
தேக்கிய செங்கனி யிதழா ரமுதுண்டுண்டு
   சேர்த்திய கைந் நெகிழாமற் சேர்ந்து சேர்ந்து
தூக்கிய பொற்றுலையினை நுராக மேன்மேற்
   ருெடரவரும் பெரும் போகந் துய்த்தார்முன்னைப்
பாக்கியம் வந்திருவருக்கும் பலித்த தல்லால்
   பாயனலத்திற் படியார் பயன் பெற்ருரே''

எனக் கவி கூறிச் செல்கிருர்.

இனிப் போர்க்களத்திலும், பூஞ்சோலையிலும் யாம் கண்ட காட்சிகளை ஒப்ப வைத்து நோக்கி இலக்கியச் சுவை எத் தகையது என ஆராயப் புகுவோம்.

போர்க்களத்திலே பெருமிதச் சுவை தலையாய சுவையாகி நிற்கும். செயற்கருஞ் செயல்களைக் கண்டு இறும்பூதெய்தும். உள்ளத்திலே மருட்கையென்னுஞ் சுவைதோன்றும். எள்ளி நகைக்கின்ற நகையும் அசைவு கண்டிரங்கும் அவலமும், பகைமேற் செல்லும் வெகுளியும், இகழ்ந்துரையாடும் இளி வரலும், அஞ்சத்தக்கன கண்டுழி நிகழும் அச்சமும், வெற்றியா லெய்திய உவகையும், ஏனைய சுவைகளும், போர்க்களத்திலே தோன்றுதற்குரியன.

பூஞ்சோலைக் காட்சியினுள்ளே "காதலிருவர் கருத்தொப்ப ஆதரவுபட்ட உவகையும்'' இனிய நகையும் வியப்பின் பால தாகிய மருட்கையும், பிரிபு நோக்கிய அச்சமும், பிரிவாலெய் திய அவலமும், பெருவரவின் பொருள் குறித்தெழுந்த சுவையி னுல் மாத்திர மின்று; பாவின்கத்து எழுத்துக்கள் அமைந்து நின்ற தாளவிகற்பங்களினுலும் கவிஞர் தமது உள்ளக் குறிப்பினை வெளிப்படுத்துவர்.

" வளவன்பதி முதலாக வயங்கும்பதி தோறும்
துளவங்கம ழதிசீதள தோயங்கள்ப டிந்தே
இளவண்டமி ழெழுதேடுமுன் னெதிரேறிய துறைசூழ்
தளவங்கமழ் புறவஞ்செறி தண்கூடல்பு குந்தான்"

என்னும் செய்யுளின் பின்,

"குன்றிலிளவாடை வரும்போதெல்லாம்" என்னுஞ் செய்யுள் வருகிறது. இடையின எழுத்துப் பயின்று மெல் லென்னு நீர்மையாகி நிற்கும். "துளவங்கம ழதிசீதள தோயம்" "இளவண்டமி ழெழு தேடு", "தளவங் கமழ் புறவம்" என்னும் சொற்றொடர்களின் நயத்தை நோக்குக.

தண்ணென்னும் நீர்த்துறையினையும், முல்லைமலர்களின் நகையினையுங் கண்டு இறும்பூதெய்தி நிற்பேமிடையே இள வாடைக் காற்றும், மலயத்துதித்த மந்தமாருதமும் வருதல் போல அடுத்த செய்யுள் வருகின்றது.

தனதந்தன தனதந்தன தனதந்தன தான என்னுஞ் சந்தத் தின் பின்னர் தந்தான தனதான தனதந்த தனதான தனனதான "வண்டானந்திரி பொழிலில் வரிவண்டினம்பாட மயில்களாட" என்னுஞ் சந்தந் தோன்றித் தென்றற் காற்றினையும், வசந்த காலத்தையும் நினைவூட்டி உவகையளிக்கின்றது.

பதினெட்டாம் போர்ச்சருகத்திலே துரியோதனனும் வீமனும் கதாயுத்தஞ் செய்யும் வேளையிலே வீமன் மரபு தவறித் துரியோதனனைத் தொடையிலடித்ததைக் கண்ட பலராமன் வெகுண்டெழுதலையும், கண்ணபிரான் இடைநின்று விலக்குதலையும் கூறுகின்ற பாகத்திலே செயல் விரைவினை நோக்கிச் சந்தமானது ஒவ்வொரு பாடலிலும் விகற்பித்துச் செல்வது உளங் கொண்டு உவப்புறு நீர்மையது.

1. தந்த தானன தானன தானன
2. தனதனத் தனத்த தானதன
3. தனனதன தான தனன தானன
4. தனனு தனனு தனனு தனனு
5. தந்தன தனன தனன தானன
6. தத்த தனதன தத்தன தானன
7. தந்த தானன தானன தானன

8. தனதந்த தானன தானன தானன
9. தான தனனதன தந்த தானன
10. தனன தனனதன தந்த தானன
11. தனத்தன தனத்தன தானன தானன
12. தனதன தனத்தன தந்ததா னந்தன
13. தனத னத்தன தனதன தானன
14. தானன தனந்தன தனன தானு தனன

என வேறுபட்ட சந்தங்களினுலே அப்பாடல்கள் நடக்கின்றன.

இனி "நோக்கிய கண்ணிமையாமல்" என்னும் செய்யுளிலுள்ளே "நோக்கி நோக்கி" "நொந்து நொந்து" "உண்டு உண்டு" "சேர்ந்து சேர்ந்து" என்னும் மடக்குகள் எத்துணை யழகொடு பொருந்தி நிற்கின்றன!

"கோமடந்தை களிகூர" என்னுஞ் செய்யுளிலமைந்த மடக்கினையும் நோக்குக.

"கண்ணினுஞ் செவியினுந் நுண்ணிதினுணரும் உணர்வுடைய மாந்த" ராகிய கவிகளுக்கு இயற்கையிலுள்ள அற்புதக் காட்சிகள் தத்தங் கருத்தினை வெளியிட்டுரைக்கும். திரௌபதியினது சுயம்வர மண்டபத்தினை நாடிப் பஞ்சபாண்டவர் சென்றனர். இளவேனிற் காலத்துக் குயிலினேசை அவர் செவிப் படுகின்றது. அக்குயில் என்ன செய்தியுரைத்தது என்னு முண்மை கவிக்குப் புலப்படுகின்றது.

"மாக்குர லளக வல்லி வதுவையி னழகு காணத்
தாக்குர லடிகொள் யானைத் தரணிப ரெவரும் வந்தார்
வீக்குகள் மிளிர்பொற் பூணீர்! விரைவுடன் வம்மி னென்று
கூக்குரல் விளிப்ப போலுங் கோகிலக் குரலுங் கேட்டார்."

ஓசையும் சுவையும் ஒத்து நடப்பதற்கு எடுத்துக் காட்டாக இச் செய்யுளை நோக்குக.

"பூபால ரவையத்து முற்பூசை
பெறுவார் புறங்கானில் வாழ்
கோபால ரோவென் றுருத்தங்
கதித்துக் கொதித்தோ தினுன்

கபாலி முனியாத வெங்காம
ணிகரான கவினெய்தி யேழ்
தீபால டங்காத புகழ்வீர
கய மன்ன சிசுபால னே."

இதன் கணமைந்த வெகுளிச்சுவையை நோக்குக.

"உருத்தங்கதித்துக் கொதித்தோதினான்" என வல்லொற்று மிக்கு வருவது இச்சுவைக்கு மிகப் பொருத்தமுடையதாகும்.

"வாரடவுனக் கியாதுதா னர்தம்
மகளடுக்குமோ வானமாதர் தோள்
சேரடாமலைந் துயிரை மெய்யினைத்
தின்று தேவரூர் சேருவிப்பன் யான்
போரடா துன்னோடாளி யேறுபுன்
பூனைதன்னுடன் பொரநி னைக்குமோ
பாரடாவெ னுண்மையை யரக்கர்கைப்
பட்டபோதில் யார் பாரில்வைகினார்."

இடும்பன் கூற்றாகிய இப்பாடலினும் வல்லொற்று மிக்கு வருதலை நோக்குக.

"கரியணிக்குளெக் கரிகள் புண்படா
கடவுதேரிலெத் தேர்கலக்குறு
பரியணிக்குளெப் பரிது ணிப்புறு
பாகர்தம்மிலெப் பாகர் வீழ்கலார்
நரனும் வெற்றிகூர் வசவு முற்றபோர்
நவிலுகிற்கினும் நாந டுங்குமால்
இருதளத்தினும் இருவ ரம்பினும்
ஏவுணுதபே ரெந்த மன்னரே"

என்னுஞ் செய்யுளை நோக்குக.

வாளபிமன்னு பட்டபின்னர் கடோற்கசன் கூறிய இவ்வுரையை நோக்குக.

"இருவரெதி ரெதிர் தம்மி லிகல்பொருத
லுலகியற்கை யாருங் கூடிப்

பருவமுருத் தனிக்குதலைப் பாலகனுக்
காற்றுமற் பறந்து போனீர்

ஒருவனெடுந் தேரளிக்க ஒருவன்மலர்க்
கைதுணிக்க ஒருவன் பின்னைப்
பொருவனென அறைகூவிப் பொன்றுவித்தா
னிது கொண்டோ புகல்கின் றீரே.''

''செழுந்தழல்வாழ் மனைகொளுவார் செய்ந்நன்றி
கொன்றறியார் தீங்கு பூணார்
அழுந்துமனத் தழுக்குரு ரச்சமுமற்
றருளின்றிப் பொய்ச்சூ தாடார்

கொழுந்தியரைத் துகிலுரியார் கொடுங்கான
மடைவித்துக் கொல்ல வெண்ணார்
எழுந்தமரின் முதுகிடா ரிவையெல்லா
மடிகளுக்கே யேற்ப வென்றான்''

இப்பாடலிலே நகையும் இளிவரலும் தோன்றி நின்றன,

'' நின்றனையே யெனைக்காத்து நீயேகென்
றியானுரைப்ப நெடுந்தே ரூர்ந்து
சென்றனையே யிமைப்பொழுதிற் றிகிரியையு
முடைத்தனையே தெய்வ ரோட

வென்றனையே சுயோதனன்றன் மகவுடனே
மகவனைத்தும் விடங்கா லம்பிற்
கொன்றனையே நின்னுண்மை மீண்டுரைக்கக்
கூசினையோ குமர ரேறே''

இதனுள் அவலச்சுவை தோன்றுகின்றது. மன்னைக் காஞ்சிச் செய்யுளுள்ளே 'னகரமெய்' பெருவரவிற்றாதலை நோக்குக.

'' அஞ்சின மஞ்சின மென்றுவி ரைந்துய
ரண்டர்ப ணிந்திட வுந்
துஞ்சின மின்றென வன்பணி யின்கிளை
துன்பமு ழந்திடவும்

1973FEB24
BATTICALOA



வஞ்சம னங்கொடு வஞ்சக னின்றிடு
வஞ்சனை நன்றி தெனு
நெஞ்சில்வெ குண்டுல கொன்றுபடும்படி
நன்றுநி மிர்ந்தனனே.''

முன்னிரண்டடியிலும் அச்சச்சுவை. பின்னிரண்டடியிலும் வெகுளிச்சுவை. வில்லி பாரதத்தினை இந் நாளில் யாம் மறந்திருக்கின்றோம். ஒரு காலத்தில் மட்டக்களப்பிலே வில்லி பாரதமானது கோயில்களிலே படித்துப் பயன் சொல்லும் நூலாக இருந்தது. ஆசிரிய வகுப்பிற்கும அஃது இன்றியமையாத பாடமாக இருந்தது. சங்கநூல்கள், காப்பியங்கள், இராமாயணம், கந்தபுராணம், பெரிய புராணம் என்றிவற்றைப் படிப்பதற்குமுன் மாணவர்கள் பாரதத்திற் பயிலலாம். அப்பயிற்சி மேலிலக்கியக் கல்விக்குச் சிறந்த அத்திவாரமாகும். இலக்கணச் சுருக்கமும், ஒரு சில கீழ்க்கணக்கு நூல்களும் பயின்றபின் பாரதத்தை எடுத்துக் கொள்ளலாம்.

சந்தச் செய்யுட்களைச் செம்மையாக வாசிப்பதற்கு ஒரு சிறிது சந்த விருத்தத்தின் இலக்கணத்தை அறிந்திருக்க வேண்டும். தனதான, தத்ததந்த எனச் சந்தக்குழிப்புகளை எழுதப்பயின்று கொண்டாற் போதும். தெளிவுபெற வாசிக்க வேண்டும். ஓசைக்காக ஒரு முறையும், பொருளுக்காக மற்றொரு முறையும் வாசிக்கலாம். செய்யுளிற் குறிப்பிட்ட இடங்கள், மக்கள், சந்தர்ப்பம், நிகழ்ச்சி அகக்கண்ணேக்குதல் வேண்டும். செய்யுளிற் குறிப்பிட்ட பேச்சு, ஓசை இவற்றை அகக் காதினுற் கேட்க வேண்டும். சுவையோடு கூடிய மெய்ப்பாடு வாசிப்போரது உடலத்தில் ஒரு சிறிது தோற்றுதல் வேண்டும். சுருங்கக் கூறுமிடத்து உள்ளத்தின் முத்திறமாகிய அறிவு, இச்சை, துணிவு என்பன தெளிவு, இனிமை, உறுதி யென்னுங் குணங்களை மருவி, உண்மை, அழகு, நன்மை யென்னு மிவற்றிலீடுபட்டு நிற்க, கண்ணுஞ் செவியும் ஆனந்தமுறக் கண்டுங் கேட்டும் இறும்பூதெய்த உடல் செயலற்றுப் பரவசப்பட்டு நிற்கும் எல்லையிலே வானவர் நாட்டின்பம் ஓரளவிற்கு வந்தெய்தும், ஆங்கது பற்றியன்றோ "தேவரனையர் புலவர்" என ஆன்றோர் கூறினர். "வண்டானந்திரி தடத்து" என்னும் பாடலினை ஆராய்வாம்.

தமது அகக்கண் முன்னே ஓர் அழகிய மலையும் மரங்களடர்ந்த இளஞ் சோலையும், அகன்ற தடாக மொன்றுங் காணப்படுகின்றன. தடாகத்திலே வெள்ளிய சிறையை உடைய நீர்ப்பறவைகள் திரிகின்றன. அலர்ந்த செந்தாமரை மலர்மீது ஒலி செய்யும் வண்டினம் படிகின்றன. மரக் கிளைகளிலே கிளிகளும், நாகணவாய்ப் புட்களும் காணப்படுகின்றன. இவ்வழகிடையே வனப்புமிக்க ஆடவனொருவனும் மடவரலொருத்தியும், ஒருவரை யொருவர் வியப்போடு நோக்குகின்றனர். இம் மடவரலது கண்கள் கயல் மீனினை வென்ற தோற்றத்தையுடையன. இக்காட்சியினாலே பற்றப்பட்ட அகக் கண் பிறிதொன்றினை நோக்காது, குறித்த காட்சியிலே படிந்துகிடக்கின்றது. வண்டுகளினது இனிய ஓசையும், கிளிகளும் நாகணவாய்களும் மொழியும் தமிழினோசையும், மந்தமாருதத்தின் மெல்லென்ற ஓசையும், மலையினின்று விழுகின்ற அருவியினோசையோடு கலந்து அகச் செவியை நிறைக்கின்றன. கிளியும் நாகணவாயும் சான்றோருரையினையும், முத்தமிழினையும் விளம்புகின்றன என்றமையினாலே, பாண்டிநாடு தமிழுக்கு உறையுள் என்பதும், சான்றோர் வாழும் பழம்பதி என்பதும் உய்த்துணர வைக்கப்பட்டது. "தங்கொடிக் கயிலைப் புறங்காணுங் கண்ணணினாள்" என்றமையினாலே, ஆங்குத் தோன்றிய மேதகவுடையாள் பாண்டிய மன்னனது செல்வப் புதல்வி யென்பதும் பெறப்பட்டது. இவ்விருவரது உள்ளமும் ஒரு வழிப்பட்டு நின்றமையைக் கண்கள் தடையின்றிக் காட்டினமையின் இவர் தமது நோக்குப் பொது நோக்கன்று, அன்பு நோக் கென்பது பெறப்பட்டது. உயர் குலத்துதித்தன ராதலினாலே நிறையழிந்து ஒருவரை யொருவர் தீண்டினாரல்லர். இவர் தம் கண்ணிணைகள், உறவாட, இருவர் மனமும் ஒருமித்தன வென்பது, என்றிவ்வழி யாராயுமிடத்து இச் செய்யுளிலமைந்து கிடந்த தெளிவும், இனிமையும், உறுதிப்பாடும் உள்ளத்தை நிறைத்து மகிழ்ச்சியைத் தருகின்றன. இதுவே இலக்கியச் சுவையிலீடுபடுதலாகும்.

# 3

## அறத்துப்பாலாராய்ச்சி*

மஹாரிஷிகள் அருந்தவமியற்றி வருந்திப் பொருள்கண்ட வேதாகமங்களுக்குத் தற்காலத்து ஆராய்ச்சியாளர் சிலர் மிகவும் எளிதாகப் பொருள் கூறி விடுகின்றனர். இவருள் ஒருவர் "ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்" என்னும் திருக்குறட்பாவைத் திருத்தியமைக்க முயன்று "அறுதொழிலை" "அறி தொழில்" ஆக்கினார். இவர் அறி தொழில் இதுவாயின், அறிவனுரை கடல்வாய்ப் பட்டொழிந்த தெனக் கூறுவதும் இவர்க்குத் தகவுடையதே. முதனூலைச் சமுத்திரத்துள் அமிழ்த்திவிட்டால், "அரங்கின்றி வட்டாடி" யாங்குத் தாம் நினைத்தவாறெல்லாங் கூறலாமென்றெண்ணினார் போலும். "அவிசொரிந்தாயிரம் வேட்டலினொன்றனுயிர் செகுத்துண்ணாமை நன்று" என்னும் மறைமொழியைத் தன்னுண்மருவி நின்றதாதலின், தமிழ் வேதம் இருக்காதி வேதங்களோடு மாறுகொண்டதெனவும், இங்ஙனம் மாறு கொண்டமையானும் பிற காரணங்களாலும் இருக்காதி வேதங்கள் பிராமண நூல்களாகக் கருதத்தகுவன வல்ல வெனவும், ஆராய்ந்து முடிவு செய்தாரிவ்வாராய்ச்சியாளர். இவர் அறியாமையினாலோ, மறதியினாலோ, பிறிதெக்காரணத்தினாலோ, மூவகைத்தாகிய கொள்வோன், இடம், சார்பு என்னும் உரையியைபுகளை ஆராயாது முடிவு செய்துவிட்டாரென, இவரது ஆராய்ச்சி வெளிப்படுத்துகின்றது. "பண்டை நாளிலிருந்த பெரியோர் சரித்திரவாராய்ச்சி செய்வதைத் தமக்கொரு தொழிலாகக் கொண்டாரல்லர்" எனப் பண்டை நாளிலிருந்த பெரியோரை இழியாது இழித்துக் கூறுந் தற்கால ஆராய்ச்சியாளர், அன்னார் வழுவாது கைக்கொண்டு வந்த தருக்கநூன் மரபினையும் இழித் தொதுக்கி விட்டனரோ? அங்ஙனம் இழித்தொதுக்காது விடின், இருக்காதி வேதங்கள்

---

* 'ஸ்ரீராம கிருஷ்ண விஜயம்' ருத்ரோத்காரி, தை மாத இதழில் வெளிவந்தது.

1923-24.

கூறிய ஒரு முடிபையும், திருவள்ளுப்பயன் கூறிய ஒரு முடிபையும், ஒப்பவைத்து நோக்குமிடத்து, கொள்வோன், இடம், சார்பு என்னும் இவை பொருந்து மாறறிந்தன்றோ நோக்குதல் வேண்டும். இருக்காதி வேதங்கள் பல்லாயிரம் இடங்களில், "புலையுங் கொலையுங் களவுந்தவிர்மின், உலக வாழ்க்கையோ கணப்பொழுதிலகன்று விடுவது; ஆதலால் ஐம்புலனடக்கி யுள்ளத்தைப் புறம்போக விடாது நிறுத்திச் சாந்த நிலையினின்று பரம்பொருளாகிய கடவுளை வழிபடுமின், ஆயிரம் யாகங்களைச் செய்து அடைகின்ற சுவர்க்கலோக இன்பமும் கழிந்துபோகு நீர்மையது; ஆதலால் அவையனைத் தையுந் துறந்து நித்தியவாழ்வை யடையும் மார்க்கத்தைத் தேடுமின்" என முரசறைகின்றனவே; இங்ஙனங் கூறிய வாக்கியங்களுள் ஒன்றினையல்லவோ, "அவி சொரிந்து" என்னும் மறை மொழியோடு ஒப்பவைத்து நோக்குதல் வேண்டும்; என்றின்னோரன்ன நியாயங்களை நாம் ஆராய்ச்சி யாளருக்குச் சொல்லப்புகுமிடத்து அவரெம்மை விளித்து, "இவ்வாறெல்லாம் தீர விசாரித்துப் பொருந்தும் வாக்கியத் தைப் பொருந்தவைத்து நோக்குதல் ஆராய்ச்சியாளராகிய எமக்குரிய கடமையல்ல; வேதந் தன்னுள்ளே முரணி நிற்கு மெனின் எமக்கென்ன; யாம் எமக்கிசைந்த ஒரு சொற் றொடரை யெடுத்துக்காட்டி எமது கட்சியை நிறுவுவோம்" என ஆராய்ச்சியாளர் கூறுவது மியல்பு. அங்ஙனமாயின், "ஒரு நூலினுள்ளே பொருளின்பத்தைக் காதலித்த இல்லற வியலோனுக்குக் கூறிய ஒரு வாக்கியத்தை, மற்றொரு நூலி னுள்ளே துறவறவியலோனுக்குக் கூறிய ஒரு குறட்பாவோடு ஒப்பவைத்து நோக்குதல் தோல்வித் தானத்தின் பாலதாமோ, அறிஞரவைக்களத்து நிலை பெறுதற்குரிய முடிபாமோ" என ஐயுறுதல் எமக்கு இயல்பு.

இனி உயிர்க் கொலையோடு கூடிய யாகங்களை எல்லா மக்களுங் கட்டாயஞ் செய்து முடிக்க வேண்டுமென்று வேதங்கள் விதி முறையாகக் கட்டளை யிடுகின்றனவா? அன்றேல், அத்தகைய யாகங்களை விழைவு நிறைவு (காமிய) வினைகளாக வைத்து, இன்னது செய்தோன் இன்ன நன்மை யையும், அதனோடு இன்ன தீமையையும் பெறுவான் என்று உரைத்துச் செல்கின்றனவா, எனவும் ஆராய்தல் வேண்டும். மேலும் "அவிசொரிந்து" என்னும் முதனிலையையுடைய

குறட்பா, இல்லறத்தானுக் குரியதா? துறவறத்தானுக் குரியதா? இரு பாலாருக்கு முரியதா? விழைவு நிறை விடத்ததா? விதிமுறையிடத்ததா? என்றின்னவற்றை யெல்லா மாராய்தல், உண்மை காண விழைவோருக்கு இன்றியமையாததாமென்பது. "இ∴து எம்முள்ளத்துக்கு இன்னவாறு தோற்றுகிறது" என வாளா மனப்பாங்குரைக்கும் மயக்கவுணர்ச்சியில் வீழாது, உண்மை காண்டற்குக் கருவியாகிய இலக்கண நூல், தருக்கநூல் வழி நின்று, இம்மறைமொழியை யாராய்தலும் வேண்டும். அங்ஙனமாராய்வுழி, இது தன்னுள் இரு வகைக் கருமங்களைக் கூறியதெனவும், அவற்றுள் ஒன்றினும் பார்க்க மற்றொன்று மிக்கதென உரைக்கும் மார்க்கத்தால் இரு கருமங்களையுந் தழுவிய சார்பினது எனவும், அறிதல் கூடும். ஒரு கருமம் இந்திரன் முதலிய இறையவர் பதங்களை யடைய விழைவோனுக்குரியது; மற்றொன்று வீட்டின்பத்தை நாடினோனுக்குரியது; "இதனினும் இது நன்று" என்றமையால் இரண்டும் நன்றெனத் தழுவப்பட்டன. அதிகாரப்பட்டு நின்றது துறவறமாதலின் இக்குறட்பா துறவினது உயர்வு கூறிற்று. இங்ஙனமே பிறண்டும், "நன்றாகுமாக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக் கொன்றாகுமாக்கங் கடை" எனபுழியும் யாகாதி கருமங்களினால் வரும்பயன் "நன்று" எனவும் "பெரிது" எனவுந் தழுவப்பட்டது; ஆண்டும் அதிகாரப்பட்டு நின்றது துறவு ஆதலின், இது கடையாய ஆக்கம்; இதனினும் மிக்க தலையாய ஆக்கம் பிறிதொன்று உண்டு எனத் துறவு வலியுறுத்தப்பட்டது.

துறவு நிலையினின்றோனை நோக்கித் "தாம் வீழ்வார் மென்றோட்டுயிலினிதுகொல், தாமரைக் கண்ணா னுலகு" என இன்பநிலைக்குறட்பாவைக் காட்டிப் பரிகசிப்பதும், இன்பமும் பொருளும் விழைந்து நின்ற இல்லறத்தானை நோக்கி, "அடல் வேண்டுமைந்தன் புலத்தை விடல்வேண்டும் வேண்டிய வெல்லா மொருங்கு" எனப் பரிகசிப்பதும், பரிகாச வார்த்தையாமேயன்றி உற்றுழி யுதவும் வார்த்தையாகாது. அவனவன் விழைந்து நின்ற பொருளினுள் மிக்க தொன்றினைக் காட்டுவதே அறிஞர்க்குரிய முறையாகும். ஆதலின், நாயனார் துறவு நிலையினின்றார்க்குத் துறவின் பெருமையைக் காட்டுதற்குத் தொடங்கி அத்துறவினாலடையும் பயனாகிய வீட்டின்பம் இந்திரப் பதவியினும் மேலானது என்பதைக்

கூறினுர் ; அங்ஙனங் கூறுமிடத்தும் அவிசொரிந்தாயிரம் வேட்டலை "நன்று" எனத் தழுவினுரேயன்றித் தீது எனக் கடிந்து விலக்கினுரல்லர்.

இவ்வாறு யாம் வகுத்துக் காட்டிப் பொருட்டுய்மை செய்தற்கு முயலுமிடத்து, உண்மையை நிறுவுவதினும் பார்க்கத் தம் மனப்பாங்கினுக் கியைந்த தொன்றை நிறுவி விடுதல் பெரிதென வெண்ணுமொருசாரார், "இங்ஙனமெல்லாம் வகுத்துக் கூறுவதெற்றுக்கு, வேதம் உயிர்க் கொலையோடு கூடிய யாகங்களை விதி முறையாகக் கூறிற்றிலதேனும், விலக்கா தொழிந்தது. ஆதலால் வேதம் பிரமாண நூலாகா" எனக் கடாவுவார் ; அங்ஙனமாயின், "அவிசொரிந்து" "நன்ருகும்" என்னும் முதனிலையவாகிய குறட்பாக்களுட் திருவள்ளுவ நாயனுரும் யாகாதி கருமங்களை "நன்று" எனவும் "பெரிது" எனவும் தழுவினுராதலினுல் அவர் நூலும் பிரமாண நூலாகாதோ ? என யாம் வினவுவோம்.

இருமொழி வேதமும் வேள்விக் கருமங்களைக் கடிந் தொதுக்காது தழுவி, அவற்ருல் வருகின்ற இந்திரன் முதலிய இறையவர் பதங்களிலும் பார்க்கப் பெரிதாகிய வீட்டின்பம் நன்று உளதென்பதனையுங் கூறி அவ்வீட்டின்பத்தை யடைவதற்குக் கொலை, களவு, காமம் என்னுங் குற்றங்களை முற்றிலும் நீக்குதல் வேண்டுமெனக் கூறிச் செல்லுகின்றன. ஆதலால், இந்திரன் முதலிய இறையவர் பதங்களைத்தரும் யாகாதி கருமங்களைத் தழுவியும் அவற்றினும் மிக்க தொன்றினை காட்டு மார்க்கத்தால் விலக்கியுமுரைத்த நாயனுர், அப்பரிசே தழுவியும் விலக்கியும் நின்ற பூருவ வேதக் கருத்தொடு மாறுகொண்டிலர் என்பது.

இங்ஙனம் இரு மொழிப் பெரியோரும் தழுவியும் பின்னர் விலக்கியும் உரைத்ததன் பொருளென்னை ? சமண பௌத்த நூலாசிரியர் கூறியவாறுபோலக் "கொலை தீது, களவு தீது, காமந் தீது" எனச் சுருங்கச் சொல்லிவிடலாகாதா ? வேட்டல் தீது என நாயனுர் கொண்டாராயின், வெளிப்படையாகத் தீது என்று சொல்லா தொழிந்ததென்ன ? நன்றெனத் தழுவியதேனே ? என்றின்னோரன்ன குறிப்புகளைத் தீர விசாரிக்க வேண்டும். கொலை தீது, களவு தீது, காமந் தீது,

1973FEB24



ஆதலால் இவற்றை யொழித்து வீட்டின்பத்தை யடையுங்கள் எனப் பள்ளிக்கூடச் சிறுவர் முதல் கௌதம புத்தரீருகவுள்ள புத்திமான்களெல்லாருஞ் சொன்னூர்கள், சொல்லுகிருர்கள். வாத நோயால் வருந்துகிற காலை வெட்டி யெறிந்துவிடுவதும் வாத நோயை மாற்றுவதற்கு வழிதான். இதனை ஒரு வேதமும் மறுத்துரையாது. வேதமும் பலப்பல விடங்களிற் "கொலைதீது, களவுதீது, காமந்தீது ஆதலால் இவற்றை யொழித்து வீட்டின்பத்தை யடையுங்கள்" என முறையிடுகின்றது. அங்ஙனமாயினும், புருஷார்த்தங்களை நான்கெனப் பகுத்துக்கொண்ட வேதம் அவற்றிடை நின்ற பொருளின்பம் என்னும் இரண்டும் கொலை களவு காமம் இவற்ருேடு மாருதுமருவி நின்ற இயல்பையும், அங்ஙனமாயினும், அப்பொருளின்பங்கள் இல்வாழ்க்கைக்கு இன்றியமையாவாகலின், அவற்றைத் தழுவுதல் வேண்டுமென்பதையும், இல்வாழ்க்கை யில்லாவிடிற் றுறவுக்காதாரமில்லை யென்பதையும் நுணுக வாராய்ந்து கூறியதாதலின், காமம், கொலை, களவு என்னும் இவை ஒரோவிடத்து நன்ருகு மார்க்கங்களையும் வகுத்துக் கூறியது. இங்ஙனம் வகுத்துக் கூற முற்பட்டமையினுல் அறநூல்கள் விரிந்தன. ஒருயிரையுங் கொல்லுதல் கூடாது என்று முடிப்பின் துறவறத்தான் தேற்றமடைவான்; இல்லறத்தானுக்கோ வெனின், அரசன் சொற்படி நின்று நாட்டை யழிக்க வருகின்ற பகைவரைக் கொல்லலாம்; தீமை விளைக்கின்ற விலங்கினங்களைக் கொல்லலாம், தம்முணவுக்காக நம்முணவை யழிக்க வரும் மான் முதலிய புல்வாய்களைக் கொல்லலாம், இங்ஙனம் மக்களுடைய நன்மைக்காக விலங்கினங்களைக் கொல்லுதல் முறையாயினவாறுபோலத் தேவர், முனிவர், பிதிரர் பொருட்டும் விலங்கினங்களைக் கொல்லலாம். தேக பலமும் மனேபலமும் நிறைந்த புதல்வரைப் பெறுதலால் நாடு நன்மையடையுமாதலால், கருப்பவதிக்கு மருந்து நீர்மையவாய சிற்சில தசையுணவைக் கொடுக்கலாம் என்று வேதம் விரித்துரைப்பது இன்றியமையாததாயிற்று. ஒருயிர்க்கும் தீமை செய்வதில்லை யென்னும் விரதத்தை இல்லறத்தோர் யாவரும் கைக்கொண்டிருப்பாரெனின், பொருளும் பொருளின் விழித்தர்கிய இன்பமும் ஒரு தினத்திலே ஒழிந்துவிடச் சமூக வாழ்க்கை நிலைகுலையுமாதலின் ஒருவகையறமும் நடந்தேருதென்பது முடிவாகின்றது. அங்ஙனமாதலின் இல்லறத்தினிற்போர் கொள்ளத்

தக்கனவிவை, தள்ளத்தக்கன விவையென முடிந்த நூல்கள் ஆராய்ந்து விரிவுறக் கூறின.

இனித் திருவள்ளுவ நாயனுர் பொருளுமின்பமுங் காதலித்த இல்லறத்தார்க்குரிய நெறியிது, பொருளின்பம் இரண்டையும் முற்றிலுந்துறந்த துறவறத்தார்க்குரிய நெறி யிது என வகுத்துக் கூறியிருக்கின்ற மாண்பிணைச் சற்று நுணுக வாராய்வாம். மன மொழி மெய்களால் ஏற்படுங் குற்றங் களாவன, ''கொலையே களவே காமத்தீவிழைவு—வுலையாவுடம் பிற் ருேன்றுவ மூன்றும்—பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில்—சொல்லெனச் சொல்லிற்ருேன்றுவ நான்கும்-வெஃ கல், வெகுளல் பொல்லாக்காட்சியென்—னுள்ளந் தனின்றுருப் பன மூன்று'' மென முன்ஞேர் கூறியன. இக்குற்றங்களையும் இவற்றின் எதிர் நிலையாய குணங்களையும் இருபத்தியாகத் தருவாம்.

| | | |
|---|---|---|
| உடம்பிற்ருேன்றுவ | கொலை | கொல்லாமை |
| | களவு | கள்ளாமை |
| | காமம் | அவாவறுத்தல் |
| சொல்லிற்ருேன்றுவ | பொய் | வாய்மை |
| | குறளை | புறங்கூருமை |
| | கடுஞ்சொல் | இனியவைகூறல் |
| | பயனில் சொல் | பயனிலசொல்லாமை |
| உள்ளத்திற் ருேன்றுவ | வெஃதல் | வெஃகாமை |
| | வெகுளல் | வெகுளாமை |
| | பொல்லாக் காட்சி | மெய்யுணர்தல் |

''கொல்லாமை'' முதல் ''மெய்யுணர்த'' லீருக்கிடந்த பத் திணையும் திருவள்ளுவ நாயனுர் பத்து அதிகாரமாக வகுத்துக் கூறினுர். அங்ஙன் கூறியவழி, புறங் கூருமை, இனியமை கூறல், பயினில சொல்லாமை, வெஃகாமை யென்னும் நான் கிணையும், இல்லற வியலினுள்ளும், கொல்லாமை, கள்ளாமை, அவாவறுத்தல், வாய்மை, வெகுளாமை, மெய்யுணர்தல் என்னும் ஆறிணையுந் துறவற வியலினுள்ளும் வைத்துக் கூறினுர்.

இப்பெற்றறியாதார் வேள்விக்கருமங்களையும் அவற்றின் வழிவந்த புலாலுண்ணுதல் ஆகிய குற்றங்களையும் நாயனர் அனைவர்க்குங் கடிந்தொதுக்கினுராதலினுல், முதற்பாவலர் வைதிக நெறியொடு மாறுபட்ட சமணர் எனத்தஞ் சிறுமதிக் கியைந்தவாறு கூறியிடர்ப்படுவ.

"புலான் மறுத்தல்" நாயனர் துறவறவியலுள் விரத மாகக் கூறினுர்; ஆதலால் அது இல்லறத்தார்க்கு விதி யின்மையுணர்க. விரதம் வேறு; விதிவேறு. இல்லறங்கடந்த நிலையின்மேல் வருவது துறவு ஆதலின் இல்லறத்துட் கூறிய நான்கும் துறவறத்துக்கும் பொதுவாகலும், துறவறத்திற் கூறிய ஆறும் துறவறத்திற்கே சிறப்பாதலுமறிக.

குற்றங்கள் பத்தினையும் ஒருங்கே யகற்றுதல் வேண்டு மெனக் கூறிய சமண பௌத்த நூல்கள் புருஷார்த்தம் நான் கினையுந் தழுவாது பொருள் இன்பமென்னுமிவற்றை யாண் டும் வெறுத்தகற்றுதல் வேண்டுமெனக் கூறு நீர்மைய வாதலாற் சமண பௌத்த நூல்களோடு மாறுகொண்ட நடை யினவென்பது தெளிவாகின்றது. அருளுடைமை, புலான் மறுத்தல், தவம், கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னு செய்யாமை, நிலையாமை, துறவு, மெய்யுணர்தல், அவாவறுத் தல் என்பன துறவறத்தினுட் கூறப்படுவனவாதலின் இவை இல்லறத்தார்க்கு உரியனவா காவோவெனின், எல்லாவிடத் தினு முரியனவாகா; சிற்சில விடங்களில் உரியனவாமென் பது. இம்முடிபைப் பின்னர் ஆராய்வாம். இல்லறத்துட் கடிந்த குற்றங்களனைத்தும் துறவினுள்ளுங் கடியப்படுவன வெனவும், துறவினுட் கடிந்தன துறவுக்கே சிறப்பாகிக் கடியப்பட்டன வெனவும் முன்னர் நிறுவினும். புலான் மறுத் தல் இருவகை யறத்தாருக்கும் பொதுவாயின் அதனை நாயனர் இல்லறத்தினுட் கூறியிருப்பாரென்பது வெளிப்படை.

அங்ஙனமாயின், சுற்றத் தொடர்பினுக்கு வாயிலாக நின்ற காமவின்பத்தை முற்றிலுந் துறவா நீர்மையோர் அதனை துறந்தோறுக்குச் சிறப்பாக வைத்தோதிய ஏனைய குற்றங்களை முற்றிலுங் கடிந்தொதுக்கி விடுதல், அறநெறி யின் பாற்படாதோ என வினவுவது மொருதலை. இவ்வினு வினுட்பட்ட பொருளைக் கூர்ந்தாராய்வோமாயின், பௌத்த

சமண நெறிக்கும் வைதிக நெறிக்கு மிடையிலுள்ள வேறு பாடும், வைதிக நெறியினுயர்வுந் தெற்றெனப் புலப்படுவன வாம்.

இப்பொருள் விரிந்து நீர்மையாதலின் "வைதிக நெறியின் உயர்வு" என்னும் தலைப் பெயர்க்கீழ் அமைந்த ஒரு தனி வியாசமாக எழுதித் தருவாம். வேதங்களுட் கூறப்பட்ட வேள்விக் கருமங்களின் இயல்பு இதுவென்பதைச் சுருக்க மாக ஈண்டுத்தந்து முடிப்பாம்.

பூருவ வேதமாகிய இருக்கும், எசுரும், சாமமும், அதர்வ மும் கரும காண்டத்தினுள்ளே காமிய யாகங்களினியல்பை விரிவுறக் கூறுகின்றன. இக்காமிய யாகங்கள் தாமே, விதி யெனப்படுவனவு மல்லவாய் விலக்கெனப் படுவனவுமல்ல வாய்ச் சுவர்க்காதி போகங்களை விழைந்தோரால் உவந்தேற் றுக் கொள்ளப்படுவனவாய் அவாவறுத்தன் மேற்கொண்டோ ராற் கடிந்தொதுக்கப்படும் நீர்மையவாய் நிலவுகின்றன.

இந்திரப் பதவியை விழைந்தானொரு ஆண் மகனுளான். அவன் முற்றுந் துறந்த முனிவரனல்லனுதலாற் கற்பகக்கா நிழலையும், தேவ கணிகையரையும், மூப்பு விளிவில்லாச் சசி யனைய மடநல்லாரையும், அளப்பருஞ் செல்வத்தையும், ஐராவத வாகனத்தையும், அமரர்க் கரசனுயுறையும் பெருமை யையும் விழைந்து நின்றது இயல்பாயிற்று. உலக வாழ்க்கை யிலுள்ள மக்களுட் பெரும்பாலார் பூஞ்சோலை நிழலையும், உருத்திர கணிகையரையும், ஆண்டு கழிந்த ஞான்று மூப்பு விளிவுக்குரிய அணியிழையாரையும், நிறைந்த செல்வத்தை யும், குதிரை வண்டியையும் கிராமாதிகாரத்தையும் இன்னோ ரன்ன பிறவற்றையும் விழைந்து அவற்றைப் பெறுதற்குப் பலபட முயற்சிப்பாராதலின், இவற்றினும் எண்ணிறந்த மடங்கு பெருமை யுடைத்தாகிய இந்திரப் பதவியை விழைந் தோன் அவராற் போற்றற் குரியனேயன்றித் தூற்றற்குரிய னல்லன். இவ்வாறு இந்திரப் பதவியை விழைந்த ஆடவன் அது பெறுதற்குரிய மரபினை யறிதற்கு முயன்று செல்லுங் கால், எக்கலைக்கு முதற்கலை வேதமெனவும், வேதநூலினுட் காணப்படாத கலை பிறிதென்றனவும் பெரியாருரைப்பக் கேள்வியுற்று, வேத நூல் வல்ல அந்தணாளரை யணுகி, "ஐயன்மீர்! இந்திரப் பதவி யடைதற்குரிய வழியை யுரைத்

தருள்வீராக'' எனப் பணிந்து நின்றனன். அதுகேட்ட அவ் வந்தணாளர், "அசுவமேதம் நூறு செய்து முடிப்பாயின் இந்திரப் பதவியைப் பெறுவாய்; அங்ஙனம் வருந்திப் பெறும் இந்திரப் பதவியோ நிலைபேறுடையதன்று. அதனிலும் மிக்க தொன்றுண்டு; அது வீட்டின்பமெனப்படுவது; இறைவன் பொன்னடி நிழலைப் பொருந்தித் துய்க்கின்ற பரமசுகமாகிய வீட்டின்பம் என்றும் அழியா நீர்மையது. அதனை விழைவாயின் இறைவன் மேலுள்ள விழைவு உட்பட்ட அனைத்து விழைவினையும் அகற்றுதலை முதற்படியாகக் கொள்வாய்'' என்று கருமகாண்ட ஞானகாண்டப் பொருளை விளக்கி யருளினர். அவர் மொழியைக் கேட்ட ஆண்மகன் பக்குவனாயின், ஞானகாண்டப் பொருளைப்பற்றி வீட்டின்பத்தை நாடுவான். விழைவறுத்தற்குப் பக்குவனல்லனாயின், அவன் விழைவு விழைபொருளொன்றினைப் பற்றும்; கருமகாண்டத்தைக் கேட்டிலனேல், சுவர்க்கவின்பத்தின் மாண்பினை யறியானாய்க் கீழான உலக வின்பத்தின்பால் உள்ளத்தைச் செலுத்தி மிகக் கீழான நிலையை யடைவான். ஆதலால் வேதம் அவன் விழைபொருளில் மிக்கதொன்றினை யெடுத்துக் காட்டிற்று. தலையாயினன் ஞானகாண்டத்தின் வழி நின்று முத்தியின்பத்தை யடைய, இடையாயினன் கருமகாண்டத்தின் வழிநின்று சுவர்க்காதி போகங்களை யடைவான். கடையாயினன் ஒருவாற்றானுந் தேறாது இம்மை மறுமைச் சுகத்தை இழப்பான்.

இப்பெற்றியை யறியாத சமண பௌத்த நூலாசிரியர்கள் யாகாதி கருமங்களையும் அவற்றைக் கூறிய வேத நூலையும் இழித்துரைத்தார்கள். நாயனார் முக்காலமுமுணர்ந்த அறிவராதலால், வான்வழங்குதற்கு யாகாதி கருமங்கள் வேண்டப்படுவன வெனவும், உலக நிலை பெறுதற்குப் புதல்வரைப் பெறுதல் அவசியமெனவும் உணர்ந்து கொலை, காமம் என்னுமிவற்றை நன்குமாறறிந்து தழுவி, வேத நூலினுண்மையை யுணர்ந்து, தாமும் அவ்வாறே நூல் செய்தார். நாயனாரும் வேதமுங் காட்டிய வழிநில்லாது சமண மதம்பற்றி நின்ற இல்லறத்தார் பலர் துறவறத்தாருக்கெனச் சிறப்புற வகுத்துக் கூறிய விரதங்களைத் தாமும் அனுட்டிக்க முயன்றமையால் தமக்குரிய பொருளின்பங்களையும் துறவு நிலையாருக்குச் சிறப்பாயாகவுரிய வீட்டினையும் இழந்து தம்மையும் தாமரையுந் தமது நாட்டினரையுந் துயரமும் வறுமையும் பீடிக்குமாறு நடந்து கொண்டனர்.

# 4

# சோழமண்டலத்துத் தமிழும் ஈழமண்டலத்துத் தமிழும் *

வடநாட்டிலிருந்து வெளிவரும் " மாடர்ன் ரெவ்யூ " என்னும் ஆங்கில மாசிகை யொன்றிலே "தமிழ் மொழி ஒலியியல்" (The Phonetics of the Tamil Language) என்னும் பொருள் பற்றி ஒரு வியாசம் எழுதி வெளியிட்டேன். தென் மொழிச் சார்பாகிய பொருளினை மேற்றிசை மொழியில் எழுதி வடநாட்டு மாசிகையில் வெளியிட வேண்டிய காரணம் என்னவென்று அன்பர்கள் வினவலாம். காரணம் உண்டு. ஆனால் அதனைச் சொல்லத் தொடங்கினுல் இலக்கண நூலார் கூறிய " மற்றொன்று விரித்தல் " ஆகும்; ஆதலினாலே அதனை விடுத்து, எடுத்துக்கொண்ட விஷயத்தோடு தொடர்புடைய பொருளைமாத்திரம் பேசலாமென்று எண்ணுகிறேன். குறித்த வியாசத்திலே, தமிழ்நாட்டு மக்கள் இக்காலத்திலே, திண்ணையிலும் தெருவிலும் கடைவீதியிலும் தொழிற் சாலையிலும் வழங்கும் தமிழ் மொழியின் சிறப்பியல்புகள் சிலவற்றை எடுத்துக் காட்டினேன். அஃதன்றியும் ஸ்ரீமான் டி. கே. சிதம்பரநாத முதலியாரை யுள்ளிட்ட தமிழன்பர்கள் தமிழ் மக்களது வழக்கு மொழியாகிய உயிர்த்ததமிழினது அழகினையும் ஆற்றலினையும் தீரவிசாரித்து ஆவன செய்தல் வேண்டுமென விண்ணப்பித்துக்கொண்டேன்.

ஈழ நாட்டிற் பிறந்தேனுயினும் ஈழத்து வழக்குத் தமிழில் எனக்கு அதிகப் பழக்கமில்லை. கற்றது புத்தகத் தமிழ்; கலந்து பழகி ஒரு சிறிது பயின்று கொண்டது சோழநாட்டுத் தமிழ். இலங்கையிலே நான் நண்பரோடு உரையாடும்போது, என் உரையைக் கேட்டோர், " சாமி பேசுவது வடக்கத்திய தமிழ் " என்று சொல்ல நான் பலமுறை கேட்டதுண்டு.

* 'கலைமகள்' பொங்கல் மலர், 1941

இலங்கையிலுள்ளோர் தென்னாட்டுத் தமிழரை வடக்கத்தியார் என்பது வழக்கம்; தென்னாடு ஈழத்திற்கு வடநாடுதானே. இஃது இப்படியிருக்க; ஒரு நாள் சென்னை ஜார்ஜ் டவுனிலே ஒரு கடைக்காரன் என்னை நோக்கி, "சாமிக்கு ஊர் பாலேக் காடா" என்று வினவியதுண்டு. உயிர்த்தமிழுக்கும் புத்தகத் தமிழுக்கும் உள்ள எழுத்துத் திரிபு வேறுபாடுகளைக் காட்டுவதற்கு நான் கைக்கொண்ட மேற்கோள்கள் பொதுவாகத் தென்னிந்தியத் தமிழிலிருந்து எடுக்கப்பட்டவை. "தமிழ் மொழி ஒலியியல்" என்னும் வியாசத்திலே யாழ்ப்பாணத்து வழக்குத் தமிழை அதிகம் எடுத்துக் காட்டவில்லை.

இங்கிலேயிலே என் மாணவரும் நண்பருமாகிய பேராசிரியர் கணபதிப்பிள்ளை தாம் எழுதி வெளியிட்ட "நானாடகம்" என்னும் புத்தகப் பிரதியொன்று அனுப்பி வைத்தார். "உடையார் மிடுக்கு", "முருகன் திருகு தாளம்", "கண்ணன் கூத்து", "நாட்டவன் நகர வாழ்க்கை" என்னும் நான்கு நாடகங்களின் தொகுதி, "நானாடகம்" எனப் பெயர் பெற்றது. ஆக்கியோனது முன்னுரையிலிருந்து சில பாகங்களை இங்கு தருகின்றேன்.

"நாடகம் என்பது உலக இயல்பை உள்ளது உள்ளபடி காட்டுவது. ஆகவே வீட்டிலும் வீதியிலும் பேசுவது போலவே அரங்கிலும் ஆடுவார் பேசல் வேண்டும்.. ........... கொடுந் தமிழ்மொழி அவ்வந்நாட்டிற்கே உரிய மொழியாம். ஆகவே சோழ மண்டலத்துத் தமிழர் ஈழமண்டலத்துத் தமிழை அறிவதற்கு வழி யாது? அன்றியும் உயிருள்ள மொழியெல்லாம் இடைவிடாது மாறிக் கொண்டே வரும். ஆண்பாலாருக்கும் பெண்பாலாருக்கும் பருவம் ஏழு என வகுத்தார் ஆன்றோர். அப்படியாயின் ஒவ்வொரு பருவத்திலும் படம் பிடித்தல் விரும்பத்தக்கது. அது போலவே அவ்வக் காலத்துக் கொடுந் தமிழையும் தீட்டி வைத்தல் வேண்டும். இற்றைக்கு முப்பது ஆண்டுகட்கு முன்னே யாழ்ப்பாணத்திற் பேசிய தமிழோ இன்று நாம் பேசும் தமிழ்? இங்ஙனம் யாம் கூறுவது சொல்லை மட்டும் எண்ணியன்று; சொல்லின் வடிவம் மாறமாற இலக்கணமும் மாறும்; பொருளும் மாறும். ஆகவே, அவ்வக்காலத்து சொல்லின் வடிவும் பொருளும் இலக்கணமும் தீட்டிவைத்தல் இன்றியமையாதவை. இதன்

உண்மை ஆங்கிலம் முதலிய மேனுட்டு மொழி வல்லுநர் அறிவர். நம் தமிழ்மொழி வல்லுநரும் இவ்வுண்மையை அறிவரோ?

இந்நான்கு நாடகத்திலும் வழங்கிய பாஷை யாழ்ப் பாணக்குடா நாட்டுக்குப் பொதுவாயும் பருத்தித்துறைப் பகுதிக்குச் சிறப்பாயும் உள்ளது.

இந்நாடகங்களுள் முதல் மூன்றும் இலங்கைப் பல்கலைக் கழகக் கல்லூரித் தமிழ்ச் சங்கத்து ஆண்டு விழாக்களில் சங்கத்து அரிவையரும் ஆடவரும் கல்லூரி அரங்கில் ஆடியவை."

புத்தகம் கிடைத்ததைக் குறித்து நான் எழுதிய மறு மொழி வருமாறு:

பேரன்புவாய்ந்த திருவாளர் க. கணபதிப்பிள்ளை அவர்களுக்கு

"நானாடகமும், காதலி ஆற்றுப்படை"யும் கிடைத்தன. முற்றும் படித்து மகிழ்வுற்றேன். "பொருளோ பொருள்" எனப் பெயரிய மற்றுமொரு நாடகம் அண்மையில் அரங்கேறியதாக ஈழகேசரியிற் படித்தேன். மட்டக்களப்பு வழக்கு மொழியினையும் ஓரிரண்டு நாடகங்களிலே படம்பிடித்துவைப்பது நன்று. விஜயதசமி வாழ்த்துரை கூறி முடிக்கின்றேன்.

இங்ஙனம்
விபுலாநந்தர்.

மட்டக்களப்பு நான் பிறந்தநாடு. ஈழத்தின் கிழக்குப் பாகத்திலுள்ளது. அந்நாட்டு வழக்குமொழி யாழ்ப்பாணத்து வழக்கு மொழியினின்றும் வேறுபட்டது. அவ்வேறுபாடு களுள் ஒரு சிலவற்றை இக்கட்டுரையிற் குறிக்கிறேன்.

ஆங்கிலத்தில் சிறந்த நாடக நூல்கள் பலவற்றை இயற்றியத்தந்த ஜார்ஜ் பெர்னுட்ஷா என்னும் பேரறிஞர் எழுதிய பிக்மாலியன் என்னும் நாடகத்திலே "மொழியொலி யியல்" (Phonetics) நூலினை ஆராய்ந்துணர்ந்த பண்டிதனொரு வன் பூவிற்பவளாகிய ஏழைப் பெண்ணொருத்தியை ஆறுமாத

காலம் பேசப்பயிற்றி உயர்குடிப்பிறந்த சீமாட்டி (Duchess) களுடைய குழுவிலே சேர்த்து விடுகிறுன். அவளது பேச்சின் திறம் உயர்குடியோரது பேச்சினை ஒத்திருந்தமையின் அவள் ஏழைக்குடும்பத்துப் பெண் என்பதை யாரும் அறிந்துகொள்ள வில்லை. ஒருவர் பிறந்த தாலுகா, ஜில்லா அவரது குலம், கோத்திரம், தொழில், பொருணிலை என்னுமிவற்றை அவரது மொழியினின்று அறிந்து கொள்ளுகிறேம். ஆதலினுலே எல்லாரும் எவ்விடத்தும் உயர்ந்தோர் வழக்கையே கைக் கொள்ளவேண்டுமென்பது எனது கருத்தன்று. தாம் தாம் வழங்குகின்ற வழக்கு மொழியையே நயம்பட உரைக்கப் பயின்று கொள்ளவேண்டும். சம்பாஷணையிலே சொல் நயத் தோடு பொருள் நயமும் அமைய வேண்டும்.

நண்பர் கணபதிப்பிள்ளை லண்டன் மாநகரிலே டாக்டர் (Doctor of Philosophy) பட்டம் பெறுவதற்காகக் கல்வெட்டுச் சாசனங்களிலுள்ள வழக்கு மொழியினது இலக்கணத்தினை ஆராய்ந்தவர். கம்பன் இராமாயணம் அரங்கேறிய காலத்திலே எல்லோரும் கம்பராமாயண நடையாகப் பேசினுர்களெனக் கொள்வது மயக்கவுணர்வாகும். அக்காலத்து வழக்குத் தமிழ் அக்காலத்தில் ஏற்பட்ட கல்வெட்டுச் சாசனங்களிலே படம்பிடித்து வைக்கப்பட்டிருக்கிறது. சங்கம் மருவிய கலித் தொகையென்னும் அழகிய தமிழ் நூலிலே உலகநடையும் வழக்கு மொழியும் சிற்சில இடங்களிலே அழகாகப் படம் பிடித்து வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைப் படிக்கும் போது ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த தமிழ்நாட்டு மக்கள் நம்மின் வேறுபட்டவரல்லர் என அறிந்து உளமகிழ் வெய்துகின்றேம்.

இவ்வாராய்ச்சியின் இன்றியமையாமையையும் இதனது பொது வியல்பையும் இதுவரையும் காட்டினேன். இனி வட நாட்டு மாசிகையிலே யானெழுதிய முடிவுகளையும் நானுடகத் தொகுதியினை ஆராய்ந்து கண்ட முடிபுகளையும் தருகிறேன்.

(1) வழக்குமொழி எழுத்துத்தொகையிலும், மாத்திரை யளவிலும் சுருங்கி நடத்தலை விரும்பும். தேவை இல்லை= தேவல, நிரம்ப=ரெம்ப, பயல்=பய, வாருங்கள்=வாங்க, கேட்கிருர்=கேக்கார், இருக்கிறது=இருக்கு (ஈற்றுகரம் குற்றிய லுகரம்; இனி மேற்காட்டும் வழக்கு மொழிக் குற்றிய

லுகர ஈறுகளை இருதலைப் பிறையினுள் (=) அடைத்துக் காட்டுவாம்), போகவிட்டு=போட்டு. (இடைக்காலத்துச் சீவக சிந்தாமணி முதலிய நூல்களிலே "போகவிட்டு" என்பது "போகட்டு" என்று வருவதைப் பலவிடங்களிலும் காணலாம்) ஏன்அடா=ஏண்டா (தமிழ் நாட்டுப் பிராமணர் வழக்கு). ஏன்அடா=ஏனற்ரு (ஈழநாட்டு வழக்கு (attack) என்னும் ஆங்கில மொழியிலுள்ள இணை tt யினது ஓசையை ஒத்தது, "கற்ருர், பெற்ருர்" என்னும் மொழிகளில் வரும் இணை "ற்ற்" ஓசை. கணபதிப்பிள்ளை இவ்வோசையினைத் தனி "ர" வினுலே குறித்து "ஏன்ரா" என்று எழுதுகிருர். இணை ற்ற் ஓசையிலுள்ள அழுத்தம் தனி "ர"வுக்கு இல்லை. "ஏண்டா" "ஏனற்ரு" என்னும் இரண்டினையும் ஒப்பு நோக்குமிடத்து இரண்டிலும் அகரம் கெட, ஒன்றில் நிலைமொழி நகர வொற்று வருமொழிக்கேற்ப ணகரமாகத்திரிந்ததெனவும், மற்றையதில் நிலைமொழி திரிபின்றி நிற்க வருமொழி டகரம் நிலைமொழி யீற்றுக்கு இனமாகத் திரிந்ததெனவும் காணலாம்).

(2) செந்தமிழ் "டகரம்" கொடுந்தமிழில் "றகரம்" ஆதலும்.

(3) செந்தமிழ் "நகரம்" கொடுந்தமிழிலே "தகரம்" "மகரம்" ஆதலும்.

(4) செந்தமிழ்த் "தகரம்" கொடுந்தமிழிலே "சகர" மாதலும் விதி.

இம் மூன்று திரிபும் எய்தும் ஓர் உதாரணத்தை முதலிலே தருகிறேன். "போய் விட்டது" 1-ஆம் விதியினுலே "போயிட்டுது" என்ருகும். தென்பாண்டி நாட்டாரும் ஈழ நாட்டாரும் 2-ஆம் விதியை மேற்கொண்டு "போயிற்றுது" என வழங்குவர். முஸ்லீம் மக்களுள் ஒரு சாரார் 3-ஆம் விதிக்கிணங்கப் "பேய்த்தது" என்பார். 4-ஆம் விதியினுலே இத்தொடர் "போச்(சு)" என்ருகும். இம்முறையே "ஆகி விட்டது" "ஆச்(சு)" என்ருகும். வெற்றிலை = வெத்திலை. சற்றே=சத்தை, விற்று=வித்து, வைத்த=வச்ச, தெரிந்து விட்டது=தெரிஞ்சிச்(சு) என ஆகும்.

(5) உயிர்ப்பின்னுே, இடையின வொற்றின் பின்னுே வருகிற உயிரேறிய ககரம் வழக்கு மொழியிலே கெடும். கெட்ட

பின் முன்னின்ற உயிர் நீளுதலும் உண்டு. அலைகிறாய் = அலேறாய், அலேறே; அகத்துக்காரர் = ஆத்துக்காரர் (தமிழ் நாட்டு பிராமண மகளிர் வழக்கு), அகமுடையான் = ஆம்பிடையான் (மற்றையோர் வழக்கு).

(6) மெல்லொற்றின் பின்வரும் ககரம் வடமொழி வருக்கத்து மூன்றும் எழுத்தின் ஓசை பெறும்; என்கிறார்கள் = என்கிறாங்க, போய்விடுங்கள் = போங்க. ஏனைய வல்லொற்றுகளும் இன மெல்லெழுத்தாகும். வேண்டும் என்றால் = வேணும்னு.

(7) வருமொழி வல்லொற்றுக்கு இனமாக ஈற்றில் நின்ற மெல்லொற்றுத் திரியும்; ஆண்பிள்ளை = ஆம்பிள, பெண் பிள்ளை = பொம்பிள, பெண்டாட்டி = பொம்மனாட்டி.

(8) ழகரம் சென்னையில் யகரமாதலும், தென் பாண்டி நாட்டிலும் ஈழத்திலும் ளகரமாதலும், சென்னை ரிக்ஷா வண்டிக்காரர் வாயில் யெகரமாதலும் உண்டு. வாழைப்பழம் = வாயப்பயம், வாளப்பளம்; இழுத்துக்கொண்டு = இஸ்துக் கினு.

(9) குற்றியலுகரம் வல்லொற்றூர்ந்து மொழியீற்றில் வருவது செந்தமிழ் இலக்கண விதி. கொடுந்தமிழிலே குற்றியலுகரம் மெல்லொற்று இடையொற்று ஊர்ந்து ஈற்றில் வருதலும், வல்லொற்றூர்ந்து இடையில் வருதலும் உண்டு; ஐயர் = ஐய(ரு), யார் = யா(ரு), நெல் = நெல்(லு), கள் = கள்(ளு), பெண் = பெண்(ணு), இருக்கும் = இருக்(கு)ம்.

(10) உடம்படு மெய் யகரம் மொழி முதலில் நிற்கும் ஏகாரத்தின் முன் வருதலுண்டு. ஏன் ஐயா = யேங்யா.

(11) மொழிமுதல் வகரம் உகரமாதலுண்டு. வீடு = ஊடு.

(12) இகரம் எகரமாகத்திரிதல் உண்டு. நிறைய = நெறைய

(13) "ஐ" "எய்" ஆதல் உண்டு. வைகிறார் = வெய் கிறார்.

(14) எகரம் ஒகரமாதல் உண்டு. பெண்பிள்ளை = பொம்பிள.

இத்திரிபுகள் ஏன் நிகழ்கின்றன என்பதற்கு "மொழி யொலியியல்" ஆராய்ச்சியிலிருந்து காரணங் காட்டலாம். உரை பெருகுமாதலின் அது செய்வதை யொழித்து யாழ்ப்பா ணத்து வழக்கு மொழியியல்பு சிலவற்றை ஆராய்வாம்.

(15) யாழ்ப்பாணத்து வழக்கு மொழியில் ஐகாரம் குறுகு வதில்லை. நெட்டெழுத்திற்கு உரிய இரண்டு மாத்திரையையும் பூர்ணமாகக் கொண்டு ஒலிக்கும்.

(16) ஆல், ஓடு, இல் என்னும் வேற்றுமை யுருபுகளுள், போல் என்னும் உவமைவுருபும் ஏகாரம் பெற்று, அவ்வேகாரம் ஐகாரமாகத் திரியப் பெறுவன. மேலைய விதியின்படி ஐகாரம் பூர்ணமாக ஒலிக்கும்.

(17) ஆறும் வேற்றுமைச் சொல்லுருபாகிய "உடைய" ஈற்றுயிர் மெய்கெட்டு "உகரம்" "அகர"மாகும், 2-ஆம் விதி யின்படி டகரம் றகரமாகவும் பெறும்.

(18) ஐந்தாம் வேற்றுமைச் சொல்லுருபாகிய "இடத்தி லிருந்து" என்பது "இடத்திலையிருந்து", "இட்டையிருந்து" என ஐகாரம் பெறும். அவ்வைகாரமும் பூரணமாய் ஒலிக்கும்.

(19) விளி வேற்றுமை ஏகாரமும் வினு ஏகாரமும் பூரண மாயொலிக்கிற ஐகாரமாகும். தொகுத்து நோக்குமிடத்து முதலாம் நான்காம் வேற்றுமை யொழிந்த வேற்றுமைகளி லெல்லாம் ஐகாரம் நிறைவாக ஒலிக்கும். மேலை விதிகள் பெற்று வரும் இவ்வுதாரணங்களை நோக்குக.

அவனோடு = அவனோடை, எங்களுடைய = எங்கடை, நேரத் திலே = நேரத்திலை, எங்கே கிடக்கிறது = எங்கை கிடக்கு. என்னுடை அப்பன் = எற்றையப்பு, அவனைப்போல் = அவனைப்போலை, அவனால் = அவனாலை, அவனிடத்திலிருந்து = அவனிடத்திலையிருந்து. உங்களைத்தான் (ஐகாரக் குறுக்கம்) = உங்களத்தான் (ஐகாரம் பூர்ண வொலி) மட்டக்களப்புத் தமிழில் ஐகாரம் அகரமாய் நடக்கும். மேற்காட்டிய உதா ரணச்சொற்கள் முறையே எங்கட, நேரத்தில, எங்க கிடக்குது, அவனப்பெல (ஓகாரம் எகரமாயினமையும் நோக்குக) அவனால, அவனிட்டெருந்து, ஒங்களத்தான் (உகரம் ஒகார மாயினமையும் நோக்குக).

1973FEB24
BATTICALOA



(20) ஒன்றுமுதல் ஒன்பதுவரையுமுள்ள எண்கள் யாழ்ப் பாணத்தில் ஒண்டு, இரண்டு (சிறுபான்மை ரண்டு), மூண்டு, நாலு, ஐஞ்சு, ஆறு, ஏளு, எட்டு, ஒன்பது என நிற்பன. மட்டக்களப்பில் ஒண்டு, ரெண்டு, மூணு, நாலு, அஞ்சு, ஆறு, ஏளு, எட்டு, ஒன்பது என நிற்பன.

(21) யாழ்ப்பாணத்தில் அகர வீற்றின் பின்னும் யகரம் உடம்படு மெய்யாகும். காணவில்லை = காணயில்லை. மட்டக் களப்பில் " காணல்ல". யாழ்ப்பாணத்திலே யகரத்தின் முன் னிற்கும் அகரம் ஐகாரமாதல் உண்டு. காணையில்லை.

(22) " ஏன் " விகுதி " அன் " ஆகும். இருக்கிறேன் = இருக்கிறன், வருகிறேன் = வாறன்.

(23) ஒகாரவினாவின் முன்னிற்கும் ஆகாரம் இகரமாகும். பண்ணுகிறாயோ = பண்ணுகிறியோ, விட்டாயோ = விட்டியோ.

(24) மட்டக்களப்பிலே மொழிமுதல் ஓகாரம் ஒகாரங்கள் எகர ஒகாரங்கள் ஆவதுண்டு: சொல்லுங்கள் = சொல்லுங்க, போய்விட்டார் = பேய்த்தார் (பெரும்பான்மை முஸ்லீம்களி டையே காணப்படுவது). மட்டகளப்புத் தம்பிலிவில் என்னும் கிராமத்திலே மொழிமுதல் ஐகாரம் எகரமாதல் உண்டு. மைத் துனன்; மைத்துனி, மெச்சான், மெச்சி.

(25) நன்னூலார் கூறிய " கா " என்னும் அசை நிலை இடைச்சொல் மட்டக்களப்பிலே வழக்கில் உளது. இதனை அதிகமாகப் பெண்கள் வழங்குவார்கள். இதனை அவதானித்த ஒரு புலவன் " ஆடவர் தோளிலுங்கா, அரிவையர் நாவி லுங்கா " என்று கூறினன் என்பதாகக் கேள்வி. ஆடவர் பாற் குடங்களை உறியில் வைத்து காத்தடியின் இருதலையிலுங் கட்டித் தோளில் எடுத்துச் செல்வர். மகளிர் உரையாடும் போது " என்னகா சொல்லு? ஏங்கா நீ வரல்லை? எலக்கா இங்கே சத்து வந்திற்றுப்போ " என்று இப்படிக் " கா " அசைத்துப் பேசுவது அங்நாட்டு வழக்கம். " எலக்கா " என்பதிலே கலித்தொகையில் வரும் " எல்லா " திரிந்து நிற்பதை நோக்குக.

மேற்காட்டிய விதிகளோடு ஒரு புடை யொத்தும் ஒவ்வாதும் வருகின்ற சில வழக்குகளை உதாரண மூலம்

விளக்குவாம். யாழ்ப்பாணத்திலுள்ள சில வழக்குகள் வருமாறு: அங்கே = பங்க, இங்கே = பிஞ்ச, உங்கள் ஐயா = கொய்யா, உங்கள் ஆச்சி = கோச்சி, மகன் = மோன், மகள் = மோள், மேள்; தகப்பன் = தோப்பன். மேல் 5-ஆம் விதியிலே உயிர் பின்வரும் உயிரேறிய ககரம் வடமொழி "ஹ" போன்று இசைக்கு·மெனக் காட்டினும். அது வடமொழி விசர்க்கம் (:) போன்றும், தமிழ் ஆய்தம் (ஃ) போன்றும் இசைக்கும் என்பது வெளிப்படை. "மஃன்" எனப் பன்முறை விரைந்து சொல்லின், வடமொழி விசர்க்கத்தைப் போலத் தமிழ் ஆய்தமும் உகரவியற்கை பெற்று, முன்னின்ற அகரத்தோடு கூடி ஓகாரமாதல் ஒலியியலுக்குப் பொருத்தமேயாம் என்பதை மேலே உதாரணங்கள் காட்டுகின்றன. 11-ஆம் விதியிற் கூறியபடி மொழி முதல் வகரம் உகரமாதல் யாழ்ப்பாணத்தில் இல்லை; மட்டக்களப்பில் உண்டு. வீட்டிலே = (யா) வீட்டிலே = (ம) ஊட்டில், ஊட்ட; வயிற்றுக்குள் = (யா) வயித்துக்கை = (ம) வகுத்துக்க. பறஞ்சது என்னும் மலையாள மொழி யாழ்ப்பாணத்து வழக்கில் உண்டு. "எழுஞாயிறு" "படுஞாயிறு" போன்ற "எழுவான்", "படுவான்" மட்டக்களப்பு வழக்கில் உண்டு. போதும் = போரும் என்பது தென்னிந்தியப் பிராமணர் வழக்கு.

இடவேறுபாட்டாலும், முழுவேறுபாட்டாலும் கொடுந்தமிழ் விகற்பங்கள் பல வேறும் எனக்கண்டாம். இனி, தமிழ் நாடாக நூலோர் சுவை, குறிப்பு, சமத்துவம், அவிநயம், பொருள், சாதி, யோனி, விருத்தி, சொல், சொல்வகை, வண்ணம், வரி, சந்தி, சேதம் என நாடக வுறுப்புப் பதினான்கு என்பர். வட நூலார்க்கும் இவை ஒப்பனவே. தசரூபகம் 2-ஆம் அதிகாரம் 58-ஆம் சூத்திரம்; "உலக வழக்கினை நுணுக ஆராய்ந்துணர்ந்து, நாடகக் கட்டுரை நடந்தேறிய தேசத்தாருக்குரிய பாஷை, வேஷம், கிரியை என்னும் இவற்றை மாறுபாடின்றி வழங்கவேண்டும்." 60-ஆம் சூத்திரம்; "ஸம்ஸ்கிருதம் ஆடவருள் உயர்ந்தோராலும், தவத்தாராலும் ஒரோ வழித்தவமூதாட்டி யாராலும், பட்டத்தரசியாராலும், மந்திரி புதல்வியாராலும், கணிகை மாதராலும் பேசுதற்குரியது. பிராகிருதம் பெண்பாலாருக்குரியது. சௌரசேனி, ஆடவருட் கீழாயினாருக்குரியது. பைசாசம் கடையாயினாருக்குரியது." இந்த விதியினைத் தமிழுக்குக் கொள்ளுங்

கால் ஸம்ஸ்கிருதம் என்ற மொழி நின்ற விடத்துச் செந்தமிழ் எனவும் ஏனைய விடத்துக் கொடுந்தமிழ் எனவுங் கொள்க.

ஆசிரியர் தொல்காப்பியனூர் காலத்திலே "சேரி மொழி" யெனக் குறிக்கப்பட்டதும் உரையாசிரியராற் "பாடி மாற்றங்கள்" என வழங்கப்பட்டதும் ஆங்கிலத்திலே Dialects என்று குறிக்கப்பட்டதேயாகும். இஃது இடவேறு பாட்டினுலும், குழு வேறுபாட்டினுலும், வேறுபடும் மரபினை மேலே காட்டினும்.

"சேரி மொழியாற் செவ்விதிற்கிளந்
தோதல் வேண்டாது குறித்தது தோன்றிற்
புலனென மொழிப புலனுணர்ந் தோரே"

என்பது தொல்காப்பிய சூத்திரம். "சேரி மொழி யென்பது பாடி மாற்றங்கள். அவற்ருனே செவ்விதாகக் கூறி ஆராய்ந்து காணுமைப் பொருட் டொடரானே கொடுத்துச் செய்வது புலனென்று சொல்லுவர் புலன் உணர்ந்தோர் என்றவாறு. அவை விளக்கத்தார் கூத்து முதலாகிய நாடகச் செய்யுளாகிய வேண்டுறைச் செய்யுள் போல்வன வென்பது கண்டு கொள்க" என்பது உரை. கலியும் பரிபாடலும் போலும் இசைப்பாட்டினைச் செந்துரை மார்க்கத்தன என்பர். சேரி மொழிச் செய்யுளினை வெண்டுறை மார்க்கமென்ருர். இதனுற் செந்தமிழ் கொடுந்தமிழ் எனவகைப் படுத்தியது செந்துறை வெண்டுறையென்னும் வகுப்பினேடு ஒரு புடையொக்கும் என அறிகின்ருேம்.

"நாடக நூலுக்குக் கொடுந்தமிழ் வழக்கு வருமென்பது ஒருபாலாக, அறநூல் (Ethics and Law), பொருணூல் (Natural and Social Sciences), இன்ப நூல் (Fine arts), வீட்டு நூல் (Religion and Philosophy) என அறிஞர் வகுத்துரைத்த நூல்களைச் செந்தமிழில் எழுதுவது முறையா? கொடுந்தமிழில் எழுதுவது முறையா? என்னும் வினு எழுகிறது. ஆராய்ந்து கற்கும் அறிவுடையோருக்கு உரியவாதலானும், இடவேறுபாடு, பால் வேறுபாடு, பால் வேறு, வருணவேறுபாடு என்னும் வேறுபாடுகளை இகந்து நிற்பவாதலானும் அறிவு நூல்கள் செந்தமிழ் மொழியிலே ஆக்கப்பட வேண்டுமென்பது முடிவா

கின்றது. அஃதன்றியும் கோட்ட முடைய தமிழ் கொடுந் தமிழ் எனப் பெயரெய்தி நின்றது. நூலோவெனின் மனக் கோட்டத்தைத் தீர்ப்பதற்காக அமை வுற்றது.

" உரத்தின் வளம் பெருக்கியுள்ளிய தீமைப்
புரத்தின் வளமுருக்கிப் பொல்லா—மரத்தின்
கனக்கோட்டந்தீர்க்கு நூலஃதே போன்மாந்தர்
மனக்கோட்டந்தீர்க்கு நூன் மாண்பு "

என்பவாகலின், தான் கோடியது பிறிதொன்றினது. கோட்டத்தைத் தீர்க்கும் ஆற்றல் இலதாதலின் கொடுந் தமிழிலோ நூல் அமையாதென அறிகின்ரேம்.

# 5

# உயிர்வாழ உழைப்பு*

மானிடராய் பிறந்தோரிற் பெரும்பாலார், உண்ண உணவும், உடுக்க ஆடையும் பெற உழைக்கின்றனர். ஒருசிறு பான்மையரே சரீர சுகங்கள் அனைத்தும் அடைந்து பிறர்க்கும் நன்மை செய்யவல்ல செல்வம் பெற்று வாளாவிருக்கின்றனர். உடலைக்காப்பாற்ற மானிடர்கள் படும் கஷ்டம் கொஞ்சமன்று. உடலைப் பல கஷ்டங்களுக்குட்படுத்தியோ, மனதைப் பலவழிகளில் செல்லவிட்டோ, தாமே முன்னின்று வேலை செய்தோ அல்லது பிறர் கீழிருந்து உழைத்தோ, வருகின்றனர். ஆனால் இவ்வாறு உழைப்பதில் நாம் கவனிக்க வேண்டுவது ஒன்று உண்டு. உழைக்கும் ஒவ்வொருவனும் தானாவது அல்லது தானும் தன்னைச் சார்ந்தவர்களுமாவது உலக சுகங்கள் நிறையப்பெற்றுச் சுகிப்பதையே தன் நோக்கமாகக் கொள்கிறான். அவன் உழைப்பதெல்லாம் பெரும்பாலும் பிற மனிதர்கள் சுகமாக (சரீர சுகத்துடனோ அல்லது மனோசுகத்துடனோ) வாழ்வதற்கேயாகும். பொதுவாகச் சனங்கள் சுகம் என்பதற்குப் போதுமான உணவும் தகுந்த உடையும் பெற்றுச் சிறிது உழைப்புடன் கவலையின்றி வாழ்வது எனப் பொருள் கொள்கின்றனர். இதனாற்றான் ஒவ்வொரு மதத்தினரும், தாம் சுவர்க்கம் என்பதை ஆனந்தம் நிறைந்த இடம் எனக் கூறுகின்றனர். எது எப்படி யிருப்பினும், நாமனைவரும் உழைத்து அதனால் கிடைக்கும் பணத்தைக் கொண்டு வேண்டிய பொருளைப் பெறவேண்டியது அவசியம். ஏனெனில் அப்போதுதான் ஈசன் தன்னருளால் நமக்கருளிய உயிரை உடலில் வைத்துக் காப்பாற்றமுடியும்.

### அதன் ஆவசியகம்

ஆகவே, நாம் உழைக்க வேண்டியது அவசியமென்பது திண்ணம். உழைத்து வேண்டிய ஊதியம் பெற வேண்டிய

---

* ஸ்ரீ இராமகிருஷ்ண விஜயம், ருத்ரோத்காரி வருஷம், ஐப்பசித்திங்கள்.

1923-27.

தும் அவசியம். சிறிது ஆலோசிக்குமிடத்து நாம் நமக்கு அறிவு வந்தது முதல் கற்பதெல்லாம் எவ்வாறு பணம் சேகரிப்பது என்பதைப் பற்றி ஆலோசிப்பதும், யாதேனும் ஒரு தொழிலைக் கைப்பற்றி, அதில் தேர்ச்சி பெற முயற்சி செய்வதுமேயாகும். இதனுற்ருன் மதங்கள் எல்லாம், உண்மை உழைப்பை மேலானதாகக் கூறி, அதனைச் சரியாகச் செய்துவரல் கடமையென்னும் அவ்வழியே நற்கதி பெறக் கூடுமென்றும் கூறுகின்றன.

## தற்காலக் கல்வி ஏட்டுச்சுரைக்காய்

ஆயின் நம்நாட்டு தற்காலத்திய நிலைமையில் ஒவ்வொருவருக்கும் தாம் எத்தொழிலைப் பின்பற்றுவதென்று விளங்கவில்லை. விளங்குதற்குத் தகுந்த ஏற்பாடுகளுமில்லை. தற்காலத்தில் போதிக்கப்படும் கல்வி முறை குறைகள் பல பெற்றிருப்பதனுலேயே, மேற் கூறிய கஷ்டங்கள் ஏற்படுகின்றன. பத்து வருஷங்கள் பள்ளியில் படித்து, பன்னிரண்டு ரூபாய் கட்டிப் பரீக்ஷையிற்றேறிய மாணவனும், அதன் மேலும் சில வருஷங்கள் படித்துச் சர்வகலாசாலையார் தந்த யோக்யதாபட்டம் பெற்றவர்களும் எவ்வேலைக்குச் செல்வதெனத் திகைக்கின்றனர். அவர்கள் காசு அதிகம் செலவிட்டுக் கற்ற கல்வி சிறிதும் அவர்களுக்கு உபயோகப் படுவதில்லை. ஏனெனில் அவர்கள் கற்ற கல்வி சிறிதும் அவர்களுக்கு உபயோகப் படுவதில்லை. ஏனெனில் அவர்கள் கற்ற கல்வி, மனதை ஏதோ ஓர் நிலைமைக்குக் கொண்டுவந்ததேயன்றி கைத்தொழிலேதேனும் செய்வதற்குப் பயன் படுவதில்லை. அதன் பயனுக நம் மாணவர்கள் சுவல்ப சம்பளத்தில், குமாஸ்தா வேலைக்காகப் போட்டி போடுகின்றனர். அதையே பெரும் கௌரவமாக நினைக்கின்றனர்.

## கைத்தொழிற் கல்வி தேவை

ஆயின் குமாஸ்தாக்கள் வேண்டியவரை யிருக்கின்றவாதலால், இக்காலத்தில் அவர்களை வேண்டுவார்களில்லை. நம் நாடோ தற்காலம் கைத்தொழில்களில் பயிற்சி பெற்ருேரையே பெரிதும் வேண்டி நிற்கின்றது. வியாபாரங்கள் நடத்தவும், நாட்டிலுள்ள விளைபொருள்களைத் தகுந்தபடி விளைவித்து அவற்றை நம்நாட்டவர்க்குப் பயன்படுமாறு செய்யவும் போதுமான அறிவு நிறைந்தவர்கள் வேண்டும். ஏனெனில்

நம்மவர்க்கு வேண்டிய பொருள் எல்லாம் இங்கேயே மலிந்து கிடக்கின்றன; அவைகள் தகுந்தபடி தயார் செய்யப்படாமல் பிறநாடுகளுக்குக் குறைந்த விலைக்கு ஏற்றுமதி செய்யப் படுகின்றன. பிறகு அப்பொருள்கள், நன்ருய்ப் பதனிடப் பட்டு மிகவும் உயர்ந்த விலைக்கு நம் நாட்டிலேயே விற் கப்படுகின்றன. இஃது வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அழும் அறிவிலி செய்கைபோலவே யிருக்கின்றது.

## சில உண்மைகள்

இதற்கெல்லாம் காரணம் யாது? நம் சிறுவர்கள் கற்கும் கல்வியேயாகும். தாய்மொழியை எவ்வாறு தகுந்த அளவிற்குக் கற்காது பிற மொழிகளைக் கற்கின்றனரோ, எப்படித்தாய் மொழி இரண்டாம் மொழியாயிற்ருே அது போலவே தாய் நாட்டிற்கு வேண்டியவைகளைக் கல்லாது, காலங்கழிக்கின்ருர் கள். அவர்கள் கல்விச்சாலைக் காலம் முடிவு பெற்றதும் யாதொரு வேலைக்கும் தகுந்தவர்களாகாது தவிக்கின்றனர். நம் சிறுவர்கள் ஒவ்வொருவரும் லக்ஷாதிகாரியின் மாக்களா யிருப்பின் இந்நிலைமையைப்பற்றி நாம் வருந்தவேண்டிய தில்லை. பூலோகத்திலுள்ள நாகரிகம் நிறைந்த நாடுகளுக் குள்ளே உலகச் செல்வத்தில் மிகவும் குறைந்தது நம்நாடு. அனேகர் தம் மக்கள் கல்விபயிலும் பொருட்டு, நிலங்களையும், வீட்டையும் விற்று நகரங்களிற் குடிபுகுந்து வருகின்றனர். இவர்கள் எல்லோரும் தம்மக்கள் தக்க சம்பளம் பெற்றுத் தம்மைக் காப்பாற்றுவர் என நம்புகின்றனர். ஆனல் அவ்வாறு தம்மக்கள் செய்ய இயலாது, தவிக்கும்போது, அவர்களுடைய மனம் புண்ணுகாதோ ?

## நம்வேலை

ஆயின் இத்தகைய நிலைமையிலிருந்து தப்ப வழி யில்லையோ ? இருக்கின்றது. சிறிது காலமேனும், நம் சிறுவர் கள் அனைவரும் வெறும் பட்டங்களைப் பெறுவதற்குப் படிப் பதையும், பன்னிரண்டு ரூபாய் பரிக்ஷையில் தேறுவதையும் நிறுத்தித் தமக்குப் பிழைப்புக் கொடுக்கக்கூடியதான கைத் தொழில்களைக் கற்றல் வேண்டும். நாற்காலியின் மேலுட் கார்ந்து நாலெழுத்தெழுதி வருவதை விட நான்கிடத்தில் சரீரக் கஷ்டம் பட்டு சம்பாதிப்பது மேல், என நினைக்க வேண்டும். நமக்கு வேண்டிய பொருள்களுக்குப் பிறநாட்டார்

உதவியை நாடி அவர்கள் அனுப்புவதை நம்பி இருத்தல் கூடாது. பிறர் உதவியை நாடி எழுந்து உட்காருபவன் நொண்டி. அதுபோலத்தான் பிறநாட்டுப் பொருள்களை நாம் வாங்குவதும். நம்நாட்டுத் தனிகர்கள் முன்வந்து கைத்தொழிற் சாலைகள் ஏற்படுத்த உதவி செய்தல் வேண்டும். வட்டிக்குப் பணம் கொடுப்பதைவிட இவ்வாறு செய்யின் அவர்களுக்கு நிறைய லாபம் கிடைப்பதோடு, நாட்டின் கைத்தொழிலபி விருத்தியும் உண்டாகும். நாள்தோறும் வேலைக்கு அலைந்து திரியும் நம் சிறுவர்களுக்கு வேலையும் கிடைக்கும்.

## நாட்டாருடைய கடமை

கைத்தொழில்களில் மேலான நிலைமை யடைந்திருக்கும் மேனாடுகளிலே வேலையின்மை அதிகரித்து வருகின்றது. பல காரணங்களினால் தொழிலாளிகள் வேலையின்றிக் கஷ்டப் படுகின்றனர். நம் நாட்டிலும் அந்நிலைமை சிறிது பரவிவரு கின்றது. அதை நீக்க வேண்டியது நம் தாய்நாட்டின் நன்மையைக் கருதுவோரது கடமை. பிறநாடுகளிலோ தொழிற்சாலைகள் மலிந்து கிடக்கின்றன. அதனால் அங்குள்ள ஜனங்கள் பலர் தொழிற்சாலைகளில் வேலை செய்து தம் நாட்டிற்கு வேண்டிய பொருட்களைவிட, பிறநாட்டிற்கு ஏற்று மதி செய்வதையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருக் கின்றனர். ஆனால் நம் நாட்டிலோ தொழிற்சாலைகளில்லை. நம்மவர் பிறநாட்டுச் சாமான்களை வாங்கி வருகின்றனர். இதை நிறுத்தினால் பிறநாடுகளுக்குச் செல்லும் செல்வம் நமக்கே சேரும். அதனால் நம்மவர்கள் நன்மையடைவார்கள்.

## இளமையில் தொழிலும் அறிவும் இழையப் போதித்தல்

நம்நாட்டுக் கைத்தொழிலையும் கல்வி நிலைமையையும் பற்றி ஆராயுமிடத்து எம்மாதிரிக் கல்வி இக்காலம் அவசிய மென்று குறிக்கத் தோன்றுகின்றது. சிறுவயதிலே எழுதவும் படிக்கவும் தெரியவேண்டும். அதனுடன் நல்லொழுக்கமும் தெய்வபக்தியும் ஊன்றவேண்டும். இதற்குக் குருகுலக் கலாசாலையே அவசியமாகும். சிறுவயதிலேயே இம்மாதிரி கல்வி கற்ற பிறகு, தன்குலத் தொழிலோ, அல்லது சிறுவ னுக்கு எத்தொழில் கற்கவேண்டுமென்று ஆர்வமுண்டா கின்றதோ அதனைப் போதிக்க வேண்டும். அப்படிச் செய்தால் மாணவப்பருவம் கழிந்ததும், நம் சிறுவர்கள் குமாஸ்தா

வேலையைத் தவிர வேறொன்றுமில்லையே எனவும், பெற்றோர், " எத்தனை பணம் செலவழித்தோம்; ஏழையானோம், எண்சாண் உடம்பை வளர்க்க வழியில்லாது நாமும் நம்மக்களும் தவிக்கின்றோம் " எனவுங் கூறுவர். முற்காலத்தில் நடைபெற்று வந்த கல்வி முறையில் நாம் மேற்கூறியபடி அறிவுப்பயிற்சியும் தொழிற்பயிற்சியும் ஒருங்கே அமைந்திருந்தன. நான்கு வருணத்தாரும், தம் ஆசார்யர்களுடன் சிறுவயதிற் கல்வி கற்றதோடு, தத்தம் வர்ணத்தாருக்குரிய தொழில்களையும் கற்று வந்தனர். அதனால் ஒவ்வொருவருக்கும் பிற்காலத்தில் ஜீவனோபாயம் எதுவென்று நன்கு தெரிந்திருந்ததோடு, அதிற் பயிற்சியுமிருந்தது. அம்முறையையே நாம் பின்பற்ற வேண்டும். அப்போது ஜாதிச்சண்டைகள் ஒழியும். அமைதியுண்டாகும். ஆகாரமும் ஆடையும் கிடைக்கும்.

# 6

# பாவலர்விருந்து*

[இவ்வுரைத்தொடர் கிரேக்க தேசத்தறிஞர் பிளேட்டோ என்பவர் இயற்றிய " விருந்து " என்னும் கட்டுரையைத் தழுவி யெழுந்தது. கிரேக்க தேசத்துப் புலவர் பெயரையும் அவரோ டொத்த தமிழ்ப்புலவர் பெயரையும் இருபத்தியாகத் தருவோம்.]

Socrates—சாத்தனார் (வடம வண்ணக்கன் பெரிய சாத்தனார்)
Agatho—நன்மாறன்
Aristsdemus—ஆவூர் மூலங்கிழார்
Erycimachus—உறையூர் மருத்துவன் தாமோதரனார்
Alcilriades—மருதனிள நாயகனார்
Pausanias—பரணர்
Aristophanes—கணக்காயனார் மகனார் நக்கிரனார்
Diotime—ஔவையார்
Phaedrus—காவிரிப்பூப்பட்டினத்துக் காரிக்கண்ணனார்

ஆவூர் மூலங்கிழார் : (சாத்தனாரை நோக்கி) ஐய! தமிழ்ப் புலவ! தேவரீரைக் கண்டு உரையாடி இன்புறுவதற்காக இங்கு வந்தேன் : தேவரீர் வெள்ளை வஸ்திரந்தரித்து, வெண்பூச் சூடிப் புறத்தே போதற்கு விரும்பி நிற்றலைக் கண்டேன். ஆதலால் இன்று போய் நாளை வருதற் கெண்ணினேன். அடியேன் போய்வரலாமா ?

சாத்தனார் : இல்லை, நண்பரே ; நீரும் என்னுடன் கூட வரலாம், நம்முடைய அரசனும் அன்பனுமாகிய பாண்டியன் நன் மாறனுடைய திருமனையிலே இன்று விருந்து நடக்கப் போகின்றது. பரந்த கேள்வியான் மிக்க பாவலர் பலர் அங்கு வருவார்கள் ; நாமும் போகலாமென்று புறப்பட் டேன். திருவுடையாரைக் காணப் போகும் பொழுது

* ஸ்ரீ இராமகிருஷ்ண விஜயம்-ரக்தாக்ஷி வைகாசி, ஆனி, ஐப்பசி, மாத இதழ்கள்.

1924–1925

செழுமையுறப் போதலே தகுதியல்லவா? ஆதலால் உடுப்பன உடுத்து அணிவன அணிந்து நிற்கின்றேன். நேற்று அரசன் திருமணையில் அறக்களவேள்வி நடைபெற்றது. போகலா மென்றெண்ணினேன், ஆயினும் சில ஏது நிகழ்ச்சியினால் அவ்வெண்ணம் தடைப் பட்டொழிந்தது. இன்று நீரும் வருவீர் ஒருங்கு செல்வோம்.

ஆலூர் மூலங்கிழார்: ஐய, அரசர் என்னை விருந்துக்கு அழைக்கவில்லையே! நான் எங்ஙனம் தங்களோடு வருதல் கூடும்?

சாத்தனர்: "நாடாதா ராயினு நல்லார் விருந்தளிப்பின் வாடாது போதன் மரபேயாம்" என ஆன்றோர் கூறியிருக்கின்றாரல்லவா?

ஆலூர் மூலங்கிழார்: சரி, உங்களோடு வருகிறேன். அரசர் ஏன் வந்தாயென்று கேட்டால், "சாத்தனார் அழைத்தார் நான் அவர் பிறகே வந்தேன்" என்பேன்.

சாத்தனர்: சரி வா, போவோம்.

(நண்பர் இருவரும் நன்மாறனுடைய அரண்மனை வாயிலை நோக்கி நடந்தார்கள். சாத்தனார் வழியில் நடந்து செல்லும்போது பின்னாக வந்தவர் இடையில் நின்று விட்டார். இதனை ஆலூர் மூலங்கிழார் காணவில்லை; சாத்தனார் பின் வருகிறார் என்ற எண்ணத்தோடு போய் அரண்மனை வாயிற் கடையையடைந்து திரும்பிப் பார்த்தார்; சாத்தனாரைக் காணவில்லை. அத்தருணத்தில் அரண்மனையினுள்ளிருந்து, ஓர் ஏவலாளன் வந்து அரசன் ஆலூர் மூலங்கிழாரை அழைத்து வரும்படி கட்டளை யிட்டதாகத் தெரிவித்தான். ஆலூர் மூலங்கிழாரும் நன்று என்று உட்புகுந்தார்.)

நன்மாறன்: பிரிய நண்பரே! தங்களைக் காண்பது கார்த்திகைப் பிறையாய் விட்டது. நேற்றுத் தங்கள் வீட்டுக்கு எத்தனை ஏவலாளரை அனுப்பினேன். எங்கு போயிருந்தீர்கள்? உடலிற் சுகக்குறைவு ஏதேனும் உளதோ? மனத்துக்குக் கவற்சியைத்தரும் நிகழ்ச்சி ஏதாவது ஏற்பட்டதுண்டோ?

ஆலூர் மூலங்கிழார்: அரசே! தங்களுடைய பேரன்பு இருக்கும் வரையும் எம்மனோருக்குக் குறையும் உண்டோ?

நன்மாறன்: நல்லது, சாத்தனார் எங்கே? பொழுது கழிந்து

போகிறது, அவரை இன்னுங் காணுமே? நீர் அவரைக் கண்டதில்லையா?

ஆவூர் மூலங்கிழார்: அரசே! என் பின்னாக வந்தவர் இடையில் நின்றுவிட்டார் எனத் தோன்றுகிறது.

நன்மாறன்: என்ன ஆச்சரியம்! (வாயில் காப்பாளன் ஒருவனை விளித்து) ஏ வாயிலோய்! நீ விரைந்து சென்று சாத்தனுரைத் தேடியழைத்துவா. (ஆவூர் மூலங்கிழாரை நோக்கி) பிரிய நண்பரே! மருத்துவன் தாமோதரனுருக்கு அணிமையாக அமர்ந்திருப்பீராக; நான் கைகால் சுத்திசெய்து கொண்டு சீக்கிரம் வருகிறேன், நக்கீரனும் பிறரும் அதோ அமர்ந்திருக்கிறார்கள்.

(சற்றுநேரத்தில் நன்மாறன் திரும்பிவந்து ஆசனத்திருந்தான்).

வாயிலோன்: அரசே! வாழ்க! ஏழையேன் வீதி வழியே சென்று சாத்தனுரைத் தேடினேன். சிறிது தூரத்திலுள்ள ஒரு வீட்டு முற்றத்தில் சிலையிற் செதுக்கிய கடவுள் வடிவத்தைப் போல அசைவின்றி நிற்கின்றார். அணுக நடந்து, "ஐய, தேவரீரை அரசர் பெருமான் அழைக்கின்றார்" ரென்றேன். மறுமாற்றம் ஒன்றுங் கூறாதாராய்ப் பேசாது நிற்கின்றார்.

ஆவூர் மூலங்கிழார்: அரசே! சாத்தனார் சிற்சில வேளையில் உள்ளம் ஒருவழி படத் தம்மை மறந்து பரவசப் பட்டு நிற்பதுண்டு. அத்தருணங்களில் அவருடைய நிலை கலையும் வரையும் அவரை அப்படியே விட்டு விடுவதே நன்று.

நன்மாறன்: நல்லது, சாத்தனார் வருந்துணையும் நாம் வாளாவிருத்தலும் முறையாகாது. அன்பரீர் அனைவரும் வம்மின், செம்பஞ்சு பொதிந்து பட்டினாற் போர்வையிடப்பட்டு மலர் பரப்பியிருக்கும் இவ்வாசனங்களில் வந்து அமருமின். ஒள்ளிய வளையலணிந்த இவ்விளமகளிர் பொன்னினாற் செய்யப்பட்ட கலங்களிலே நறுமணம் பொருந்திய தேறலை நிரப்பித்தர அதனை வாங்கி மனங்களிகூர்வடைய உண்ணுமின். அன்பரீர்! இத்தேறல் யவன புரத்திலிருந்து நல்ல குப்பிகளிற் கொண்டு வரப்பட்டது; உண்போருக்கு மகிழ்ச்சியை யளிப்பது.

நாக்கீரனுர் :

"யவனர், நன்கலந்தந்த தண்கமழ் தேறல்
பொன் செய் புனைகலத் தேந்தி நாளு
மொண்டொடி மகளிர் மருப்ப மகிழ்சிறந்
தாங்கினி தொழுகுமதி யோங்கிவாண் மாற!"

வெற்றியானுயர்ந்த வாளையுடைய நன்மாற! எம்மரச! யவனர் நல்லகுப்பியிற் கொண்டுவரப்பட்ட குளிர்ந்த நறு நாற்றத்தையுடைய தேறலைப் பொன்னுற் செய்யப்பட்ட புனைந்த கலத்தின் கண்ணே யேந்தி நாடோறும் ஒள்ளிய வளையை யுடைய மகளிரூட்ட மகிழ்ச்சி மிக்கு இனிதாக நடப்பாயாக; நினது கொற்றம் நிலை பெற்று வாழ்க!

(இத்தருணத்தில் சாத்தனுர் உள்வருகிறுர்.)

சாத்தனுர் :

"புகன்ற செல்வமொடு புகழினிது விளங்கி
நீடுவாழிய நெடுந் தகை யானும்
கேளில் சேஎய் நாட்டினெந் நாளுந்
துளிநசைப் புள்ளினின் னளிநசைக் கிரங்கிநின்
னடி நிழற் பழகிய வடியுறை
கடுமான் மாற மறவா தீமே."

அரசர்க்கரசே! விரைந்த செலவையுடைய குதிரையை யுடைய மாறனே! பெருந்தகாய்! நீ விரும்பிய செல்வத் துடனே புகழும் இனிதாக விளங்கி நெடுங்காலம் வாழ்க; யானும் உறவில்லாத் தூரிய நாட்டின் கண்ணே நாடோறும் துளியை விரும்புதலையுடைய வானப்பாடிப் பறவைப் போல் நின்கொடை நசையான் இரங்கி நினது அடிநிழற் கட்பழகிய அடியின் வாழ்வேன், நீ செய்த செயலை மறவா தொழிவாயாக.

நன்மாறன் : ஐய! அருந்தமிழ்ப்புலவ; அடியேன் இருக்கும் இவ்வாசனத்தில் அடியேனுடனிருத்தல் வேண்டும். பரிச வேதியைத் தொட்ட இரும்பும் பொன்னுவது போலத் தேவரீருடைய பரிசத்தினுல் என்போலியருந் தமிழ்ப் புலவ ராதல் வேண்டும். பொன்மலையைச் சார்ந்த பொல்லாக் கருங்காக்கையும் பொன்னிற மாயிருக்குமெனப் பெரி

யோர் கூறுவாரன்ருே! நீர் நிறை கலத்தினுள் பருத்தி நூற்றியிர் ஒரு தலையை வைத்து நீர் வறிதாகிய கலத்தினுள் மற்றத்தலையை வைப்பின் இருகலத்தினுள்ளும் நீர் ஒரு மட்டமாக நிற்குமல்லவா? அதுபோல, அணுகவிருக்குங் காரணத்தினுல் அறிவீனராகிய எம்போலியர் தேவரீருடைய ஞானத்திற் சிறிது பெறுதல் கூடுமன்ருே?

சாத்தனுர்: அரசே! நன்கு கூறினீர். யான் விரும்புவதும் அஃதே. மன்னர் மன்னராகிய நீரே நிறைகலம். சீவிய காலம் முழுதும் ஞானம் எங்குளது எனத் தேடித் திரியும் நான் வறுங்கலம் என்பதற்கு ஐயமில்லை. உமது ஞானமாவது பரந்த விளக்கத்திறுற் பகலவனை நிகர்த்தது. எனது ஞானம் பகற்கனவை நிகர்த்தது. சிலநாட்களின் முன்னர் முப்பதினுயிரவர் கூடியிருந்த பேரவையிலே ஆண்மையினுல் மாத்திரமல்ல, அறிவினுலும் நீர் அனைவருக்கும் அரசரே என்பதை நன்கு காட்டினீர். பேரறிவாளரும் எனது அரசரும் ஆகிய உமது பக்கலில் இருப்பதனுல் உமக்கு உரிய அறிவையும் இசையையும் சார்ந்து நிற்பேன். ஆதலால் எம்பெருமான் கட்டளைப் படியே உடனிருப்பதற்கு உடம்படுகிறேன்.

நன்மாறன்: பிரிய நண்பராகிய தமிழ்ப்புலவீர்! வாதம்புரிய நேருமிடத்து வெற்றி அறிஞருக்கு உரியதாகுமன்ருே? சாத்தனுர் உரை என்றும் போல இன்றும் உயர்வுடையதே. மாலை கழிந்து யாமம் ஆகின்றது. இதுவரையும் உணவின் எண்ணம் இன்றியே யிருந்து விட்டோம். செவியிற் சுவையுணரும் அறிவுடையோராகிய நும்மை நாவிற் சுவையுணருமாறு வேண்டி நிற்கும் அடியேனுடைய பேதமையை ஒருவாறு மன்னித்து உண்ணுவதற்கு எழுந்தருளவேணடும்.

(புலவரும் அரசனும் உணவு உண்ணுகிருர்கள்.)

பரணர்:

“ உட்கப்படாஅ ரொளியிழப்ப ரெஞ்ஞான்றுங்
கட்காதல் கொண்டொழுகு வார் ”

என ஆன்ருேர் கூறியிருக்கின்றனரே. அஃதங்ஙனமாக, நக்கீரனுர் அரசனை வாழ்த்துமிடத்து, “யவனர் நல்ல

குப்பியிற் கொண்டு வந்த மதுவினையுண்டு மகிழ் கூருவா யாக" என்றது தகுதி யாகுமோ ?

சாத்தனர் : அறிவினை மயக்குங் கள் சாவக நோன்பிகளுக்கு யாண்டும் விலக்கப்பட்டது. உடலுக்கும் உள்ளத்துக்கும் மாருத் தீமையை விளைப்பதாதலின் அதனை முற்றிலும் வெறுத்து விடுவதே நன்று.

மருத்துவன் தாமோதரனர் : மிதமிஞ்சி மதுவினை உண்போர் நோய் வாய்ப்பட்டு இளவயதில் உயிர்துறப்பாரென வைத்திய சாத்திரங் கூறுகின்றது.

ஆவூர் மூலங்கிழார் : அன்பரீர், அரசர் அளித்த உணவின் சுவையும் பாடினியளித்த இசையின் சுவையும் நிரம்பப் பெற்ருேமாகிய யாம் கலைவல்லோர் அளிக்கும் அறிவமுதத்தையும் சுவைக்க விரும்பினேம். ஆதலால், பாடினியும் இவ் விளமகளிரும் தத்தம் இருக்கைக்குப் போய்விடுதல் நன்று. (இக்குறிப்பினைக் கேட்டு அன்னர் அகல்கின்றனர்.)

மருத்துவன் தாமோதரனர் : அருந்தமிழ்ப் புலவீர் ! அதோ விருக்கும் நமது நண்பராகிய காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனர் என்னைப் பலமுறையும் வினவிய சில வினக்களை உங்கள் முன்னிலையிற் கூற விரும்புகின்றேன். "அன்பு என்பது யாது? அன்புக்குரிய தேவதை எது? அன்பினல் ஆவதென்ன ? அன்பின் வரன் முறையென்ன ?" இவையே அவர் வினவிய வினக்கள். இவ் வினக்களை யாராய்ந்து ஐயம் நீக்குமாறு அறிவுடையோராகிய உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்,

சாத்தனர் : எடுத்துக் கொண்ட பொருள் மிகவும் சிறப்புடையதே. அன்பு நிறைந்த உள்ளத்தாராகிய அரசரும்பாணரும் அன்பினைப் பற்றியறிய அவாவுடையா ரென்பதற்கு ஐயமில்லை. அன்பு நூலுக்கு உரைகண்ட நக்கீரனரும் மறுதலையாகார். ஆதலால் இவ்வவையிற் குழுமியிருக்கும் புலவர் அனைவரும் அன்பினைப் பற்றிச் சுருக்கமாகத் தாங்கொண்ட கருத்தினைக் கூறல் வேண்டுமென நான் கேட்டுக் கொள்ளுகிறேன். காரிக்கண்ணனர் இப் பொருளை வினவிய காரணத்தினலே அவருக்கு இதனைப்

பற்றிய ஆராய்ச்சி யுளது என்பது வெளிப்படை. ஆதலால் முதலில் அவரே பேசுவாராக.

காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனுர் :

பெரியோருரைக்கு எதிருரை யில்லை. ஆதலால் சிறியேனாகிய யான் அறிந்ததைச் சொல்லுவதற்கு ஒருப்படுகிறேன். தேவர் மக்களாதிய சராசரப் பொருட்கள் அனைத்துந் தோற்றுவதற்குக் காரணம் அன்பே யாதலின், அன்பு தோற்றுவதற்கும் அன்பே காரணமாகு மன்றிப் பிறிதொரு காரணம் உளதாகாது. ஆதலினுல், அன்பு அநாதியாக வுள்ளது என்பது பெறப்படுகின்றது. பிரதம சிருஷ்டிக் காலத்தில் அன்பு வடிவனுகிய இறைவனுடைய திருவுள்ளத்தில் அன்பின் வேருகாத அருட்சத்தி தோன்றினள். இவ்விருவரிடத்திலும் நின்று உலகு உயிர் அனைத்துந் தோன்றின. இதனுலும் அன்பு அநாதியாம் என்பது பெறப்படுகின்றது. அன்பு மூப்பு, பிளிவு இல்லாதது, மிகுந்தவலிமை யுடையது ; தேவர்களையும் மூவர்களையும் தன் வயப்படுத்துவது ; அதற்கு அன்புதுணை ; மறத்துக்கும் அதுவே சார்பாகும். அனைத்தினுஞ் சிறந்தது அன்பேயாம். அன்புக்கு உரிய ஒரு நிலையம் இல்லாவிடின் அன்பு செய்வோனுக்கு உவகை யிலதாகின்றது. அன்பிலா விடத்து அன்பு நிலையத்துக்கும் எய்திய பயனென்றில்லை ; வீரம், ஆண்மை ஆகிய இம்மைப் பயனனைத்தும் அன்பு ஆதாரமாகவே தோற்றுகின்றன. கடையாயினுனும் அன்புடையார் முன்னிலையிற்றலையாய தொழிலையே செய்ய முயலுவான். கீழ்மகனும் தனது கீழ்மையை யகற்றி மேலாய தொழிலைச் செய்வதற்கு முன்னிற்பான். ஒரு நாட்டில் வாழ்வோர் அனைவரும் ஒருவர் மீது ஒருவர் அன்புடையவராயிருப்பின் அந்நாட்டில் தீச் செயலே நிகழாது. அந்நாட்டினை எதிர்த்து வெல்லுதல் பகைவருக்கு இயலாத தொன்ருகும். அன்புடையாருக்காகத் தம் முயிரையும் கொடுத்தல் அன்பர்க்கு மரபு. ஆதலால் அன்பிலிருந்து வீரமும் ஆண்மையும் தோற்றுகின்றன. காதலருக்காக உயிரைவிட முயல்வது ஆண் மக்களிடத்து மாத்திரமல்லப் பெண் மக்களிடத்துங் காணப்படுகிற ஒரு சிறந்த குணமாகும். மன்னன் கரிகால் வளவன் மகள் தனது காதலனுகிய வஞ்சிக் கோனைப் புனல் கொண்டு

செல்லத்தான் புனலின்மின் சென்று, "கன்னவில் தோளாயோ" என அழைப்பக் கடல் அவனைக் கொண்டு வந்து முன் நிறுத்திக் காட்டக் காதலனைத் தழுவிக் கொண்டு பொன்னங் கொடிபோலப் போதந்தாள். இதனை யாம் அறியோமா? கற்புக் கரசியாகிய கண்ணகியார் செயலை யாம் அறியோமா?

கணவன் மீது மாருத அன்பு வைத்த கற்புடைய மக ளிரை வானவரும் போற்றுவார். கண்ணகியார் நம்மாற் றுதிக்கப்படுந் தெய்வமாயினுரன்ருே? சாவித்திரியார் தமது நாயகனுகிய சத்தியவானுயிரை எமனுலகிலிருந்து மீட்டு வந்தன ரென்னில், அன்பின் வயத்ததாகிய கற்பி ஞல் ஆகாத தொன்றுண்டோ? சாவிற் சாதலே தலையாய அன்பின்றிறம். யவனபுரத்தில் அகிலேசன் எனப்பெரிய சுத்தவீரன் ஒருவன் இருந்தான். அவன் முன்னர் ஒரு தெய்வந் தோற்றி, "நினது மாற்ருனுகிய ஏகதன் நின் கையாற் படுவானெனின், நீயும் போர்க்களத்தில் இறந் தொழிவாய்; ஏகதன் பிறர் கையாற் படுவானெனில் நீ பல் லாண்டு வாழ்வாய்" எனக் கூறிற்று. அங்ஙனமமைந்து நின்ற ஊழின் திறத்தை அறிவானுயினும், தனது நண்பன் பத்திரோகலன் ஏகதனுடைய பாணத்தினுல் உயிர் துறந்தானெனக் கேள்வியுற்ற அகிலேசன் விரை ந்து சென்று, ஏகதனை யெதிர்த்துத் தனியமர் புரிந்து தன் கை அம்பினுல் ஏகதனுயிரை விண்ணுலகேற்றினுன். தெய்வமுரைத்த கட்டுரையின் வண்ணம் சின்னுட்களுக் குள்ளே அகிலேசனும் போர்க்களத் தொழிந்தான். நண் பன் கழிந்த பின்னர்த்தான் உயிர் வாழ்தல் தகுதியன்றென வெண்ணி, உயிர் துறப்பதற்கு இயைந்து நின்ற ஊழ் வினையை வலிந்து தேடியவனுகிய அகிலேசன் தேவ லோகத்தாராற் சன்மானிக்கப்பட்டான். இது தலையாய அன்பின்றிறமாகும். இத்தகைய தலையாய அன்பு இல்லா தார் தேவலோகத்தாரால் அவமதிக்கப்படுவார் என்ப தற்குச் சான்ருகிய மற்ருெரு சரிதம் உண்டு. இமயத் துக்கு வடபாலிலுள்ள உத்தர குருவில் அநங்கன் எனப் பெரிய யாழ்வல்லோ னுருவனிருந்தான். இவன் மனை யாட்டியாகிய சுசீலை ஆண்டு நிறைந்து இவ்வுலக வாழ் வினை நீத்தனள். மனைவி யிறந்தமையினுற் சோகமுற்ற

அநங்கன் புள்ளும் மரமும் இரங்க அழுது பிரலாபித்து, "என்னுயிர்க்குயிராகிய மனைவியை உடன் கொண்டன்றி இந்நகருக்குத் திரும்பேன்" என்று நிச்சயித்துக் கொண்டு யமனுலகை நாடித்தென்றிசை நோக்கி நடந்தான். ஆறும் மலையுங் கடந்து பலகாவதங்கள் செல்வுழி, வழியிற் கண்டோரனைவரும் இவன் துயர்க்கிரங்கி" மாண்டோர் வருவரோ, மாநிலத்தில்" என்றித்தகைய உண்மைகளை எடுத்தியம்பி மனைவியை மறந்து விடும்படி வேண்டினர். அவன் பிடிவாதமாகத் தென்றிசை நோக்கி நடந்தான். ஈற்றில் யமனுலகத்து வாயிற் கதவினையடைந்தான். அங்கிருந்த வாயில் காப்பாளர் உட்புகுதல் கூடாதெனத் தடுத்தனர். அநங்கன் தன் யாழிசையினால் வாயில் காப்பாளரை மயக்கி யமனுலகினுட் புகுந்தான். அவ்விருளுலகம் சூரியாஸ்தமன காலத்தின்பின் வந்தெய்துகிற அரையிருளைப்போன்ற இருளினால் மூடப்பட்டிருந்தது. சற்றுத் தூரத்தில் வெண்சுதைக் கற்களாற் கட்டப்பட்ட யமதர்ம மகாராஜனது அரண்மனையானது மூன்றாம் பிறைச்சந்திரனது நிலவைப்போன்ற மெல்லென்ற ஒளியோடு விளங்கியது. எவ்விடத்தும் நிசப்த மாயிருந்தது; புறவாயிலுக்கும் அரமனைக்கும் இடையிற் காரிருட்படலம்போன்ற ஒரு அகழியிருந்தது. இவ்வகழி நீர் அலையாது அசைவின்றி நிற்கும் நீர்மையது. இதனைக் கடந்து செல்வதற்கு ஓர் ஓடம் உண்டு. அநங்கன் ஓடக்காரனைக் குறையிரந்து வேண்டி ஒருவாறாக அகழியைக்கடந்து சென்று யமதர்மராஜனுடைய சமூகத்தை யடைந்தான். தர்மராஜன் அநங்கனை விளித்து, "ஏ மானிட! இங்கு மக்களுடலோடு வருவார் ஒருவருமிலராக நீ யெவ்வண்ணம் வந்தாய்? மனைவிமேற் கொண்ட காதல் உன்னை இத்தனை தூரம் வரப்பண்ணிற்று. நீ உன் மனைவி மீது உண்மையன்பு உடையவனாகில் மீட்டும் பூவுலகத்துக்குப்போ. உன் வாணாள் கழிந்த பின்பு நீயும் நின் மனைவியும் சுவர்க்க வாழ்வெய்துவீர்" என்றனன். அநங்கன் உயிர் துறப்பதற்கு அஞ்சினான்: அஃதன்றியும் அவன் தனது மனைவிமேல் வைத்த அன்பு அவளது உடல்மேல் வைத்த இச்சையாகிய பொய்யன்பு; ஆதலால் அவன் தர்மராஜனைப் பன்முறை பணிந்து தன்னையும் தனது மனைவியையும் பூவுலகத்துக்கு அனுப்புதல் வேண்டுமென மன்றாடினான், தர்மன்

இரக்க முற்று, "ஏ மானிட, எனது தூதுவர் நின்னையும் நினது மனைவியையும் இவ்வுலகிலிருந்து பூவுலகுக்கு அழைத்துச் செல்வர்; நினது மனைவி பின்னாக வருவாள் பூவுலகையடையும் வரையும் நீ யவளது முகத்தைப் பார்த்தல் கூடாது. இது எனது கட்டளை; கட்டளை தவறி அவள் முகத்தைப் பார்த்தாயாயின் நினது மனைவி எனது உலகத்திலே நின்று விடுவாள். நீ அவளைப் பின்பு ஒரு போதும் காணமாட்டாய்" என்றான். அநங்கனும் நல்லதென்று தூதுவர்கள் பின்சென்றான். அவன் மனை வியும் தர்மராஜன் கட்டளைப்படி பின்னாக நடந்தாள். மனைவியினது உடலின் மேல் வைத்த காதலினால் அநங் கனானவன் யமபுரத்தெல்லை கழிவதன்முன் மனைவி முகத்தை நோக்கினான். யமதூதுவர் தர்மராஜனுடைய கட்டளைப்படி அநங்கன் மனைவியை யமலோகத்திலே நிறுத்திவிட்டு அநங்கனை இழுத்துச் சென்று பூவுலகிற் சேர்த்தனர். உடன் சாதலுக்கு ஒருப்படாத காரணத்தினா லும் உடலின்மேல் வைத்த இச்சையினாலும் அநங்கன் கைக்கெட்டிய பொருள் வாய்க்கெட்டா நிலமையைப் பெற்றான். உண்மையன்பினால் வெற்றியும் உவகையும் உண்டு. இவ்வுலகிற் கீர்த்தியுண்டு; மறுமையிற் சுவர்க்க முண்டு.

[இவ்வாறு காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார் கூறி முடித்த பின்னர்ப் பரணர் எழுந்து சில குறிப்புகள் கூறுவார்.]

பரணர்: உத்தமப் புலவீர்! அன்புக்குரிய தெய்வம் இரண்டு ஆயினமை பற்றி அன்பும் இருவகைப் பட்டதெனக் கொள்ளவேண்டியிருக்கிறது. ஒருவனுக்கும் ஒருத்திக்கும் இடையில் நிகழும் அன்பு கேவலம் உடலைப்பற்றி நிற்கு மளவில், அங்ஙனம், அன்பு செய்வாரிருவரும் தமது அன்பு நிறைவுறுதல் கருதி வேனில் வேளாகிய காமனை வழிபடுவர். இன்னார் காமன் கோட்டத்திற் சென்று வழி படுங்காலத்தில், தாம் பேரழகு பெறவேண்டுமென்றும் தங்காதலர் தம்மையன்றிப் பிறரை நினைத்தல் கூடா தென்றும் தந்நலங்கருதியே அனைத்து வழிபாட்டினையும் புரிவர். இந்நிலையிற்றோற்று மன்பு மிகவுங் கடையாயது. தங்கணவரைத் தெய்வமாகக் கொண்டு வழி

படும் கற்புடைப் பெண்டிரும், நாயகியினது முக மன்றிப் பிறிது முகம் பார்த்தறியாக் கற்புடையாட வரும் ஒருவரொருவரை யன்றியமையாது நிற்கும் நிலையில் இவரது உள்ளத்தே தோற்றுமன்பு தெய்வத் தன்மை சான்றது. அனைத்து உயிரினும் இறைவன் வியாபித்து நிற்பதை யுணர்ந்து, "இவன் என் மகன், இவன் பிறன் மகன்" என வேற்றுமை காட்டாது மன்னு யிரனைத்தையும் தன்னுயிரெனக் கருதி வழிபடும் மேலான அன்பு சிவத்தைச் சார்ந்து நிற்பது. இவ்வன்பே சிவம் என அறிஞர் கூறுவர். காமனைத் தெய்வமாகக் கொண்ட அன்பு இழிவுடையது; கீழ் மக்களாற் கையா ளப்படுவது. கேவலம் ஒரு பெண்ணின் மேல் வைத்த இச்சையினால் மடலூர்தல் வரையுருளுதல் என்றித்த கைய வன்றொழில்களால் தம்முடலத்தை யூறுபடுத்தும் ஆடவர் இறைவன் பாலதாகிய உண்மை யன்புக்காகத் தம்முடல், பொருள், ஆவி மூன்றினையும் பரித்தியாகஞ் செய்வதற்கு முன் வராததேனோ? விலை மகளுக்குத் தம் பொருளையும் உடலையும் கொடுத்து மறுமையில் நரகத் துன்பத்தை விலைக்கு வாங்கிக்கொள்ளும் வீண்மதியோர், எம்மிறைவனுக்கு அவற்றை அர்ப்பணஞ் செய்து நித்தி யானந்த வாழ்வினை யடையலாகாதா? என்னே இம்மா னிடர் மதியிருந்தவாறு! காமனை முற்றிலுங் கடிதல் வேண்டும்; காமனைக் கடிந்த கண்ணுதல் பாதத்தைச் சார்ந்து நிற்றல் வேண்டும்; இதுவே அன்பின் றிறம். (எனப் பரணர் ஒருவாறு கூறி முடித்தார்.)

நன்மாறன்: இனி நக்கீரனார் தமது கருத்தை வெளியிடு வாராக.

நக்கீரனார்: அரசே! நா உலர்ந்தமையினாலோ பிறிதெக் கார ணத்தினாலோ தொண்டையில் விக்கல் உண்டாகி, அதனால் வருந்துகிறேன். மருத்துவன் தாமோதரனார் எனது விக்கலை மாற்றுதல் வேண்டும். அங்ஙனம் செய்யத் தாமதிப்பாராயின் நான் செய்ய வேண்டிய தொழிலை அவர் செய்தல் வேண்டும்.

மருத்துவன் தாமோதரனார்: விக்கலை மாற்றுதல், நீர் செய்ய வேண்டிய கடமையைச் செய்து முடித்தல் ஆகிய

இரண்டு வேலையையும் நான் ஏற்றுக் கொள்ளுகின்றேன். கொஞ்சம் குளிர்ந்த நீரை யெடுத்து வாயினுள்ளிட்டுத் தொண்டையை யலசிப் பின்பு உமிழ்ந்து விடுவீராக. இதற்கு விக்கல் மட்டுப்படாதிருக்குமாயின், ஒரு சிறு துரும்பை யெடுத்து நாசித்துவாரத்தினுள் விட்டால் தும்மலுண்டாகும்; இரண்டு மூன்று முறை தும்மிய பின்பு விக்கல் நின்றுவிடும். இஃது ஒருபாலாக, பரணர் அன்பினைப்பற்றிக் கூறிய அரிய வாசகத்தினுள் அன்பு இருவகைப்படும் என நன்ருக விளக்கிக் காட்டினர். இவ்வுண்மையைப் பலவாருக ஆராய்ந்து உணரலாகும். உதாரணமாக உணவின் மேலுள்ள விருப்பத்தை யெடுத்துக் கொள்வோம். தேகம் ஆரோக்கிய நிலையில் இருக்கும்பொழுது நாடுகிற உணவு மேன்மேலும் ஆரோக்கியத்தை வளர்ப்பதற்குத் தக்க உணவாகும்; நோய்வாய்ப்பட்டிருக்கும்போது விரும்புகிற உணவு நோயை அதிகரிக்கச் செய்கிற தகாத உணவாகும். ஒருவாருக நோக்குமிடத்து இருவகை விருப்பமும் அன்பின் பாலவேயாம். அங்ஙனமாயினும் முந்தியது நன்மையை உண்டாக்குகிறது; பிந்தியது தீமையைத் தருகின்றது; மனமானது காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூன்று நோயினுள்ளும் படாது சாந்த நிலையிலிருக்கும்போது எழுகின்ற அன்பு நன்மையை விளைவிக்கும்; காமம் முதலியவற்ருல் அலைவுண்ட உள்ளத்திலெழுகிற அன்பு தன்னலச்சார்பு உடையதாதலின் தீமையை விளைவிக்கும். கைதேர்ந்த வைத்தியன், தக்க விழைவு இது, தகாத விழைவு இது என்று ஆராய்ந்தறிந்து, உடலுக்கும் உணவுக்கும் பொருத்தமுண்டாக்கி வைப்பான். இயற்கையிலே பொருந்தாத பொருட்களையும் முறையறிந்து பொருந்த வைப்பது வைத்தியனது சாமார்த்தியமாகும். எங்களது முன்னேராகிய அகத்தியனர் இந்த விஷயத்தை விரிவாக ஆராய்ச்சி செய்திருக்கின்ருர். வெம்மை, தண்மை, கசப்புத் தித்திப்பு, நீர்ப்பொலிவு வறட்சி என்னும் வேறுபட்ட குணங்களைப் பொருந்த வைப்பதுவே வைத்திய சாஸ்திரத்தின் முடிபு. இவ்வண்ணமே இசைத் தொழில், கமத்தொழில், சிலம்பத் தொழில்களிலும் பொருந்தாப் பொருட்களுக்குப் பொருத்தங் காணுபவரே வல்லவரென எண்ணப்படுவார். இசை வகையில் இரண்டு

ஸ்வரங்கள் பொருந்தி நின்றனவென்னுமிடத்து அவற்றிடையே வேறுபாடும் உண்டு என்பது தெளியப்படும். ஒரே தன்மையவெனிற் பொருந்தி நின்றன வென்பது பயனில் சொல்லாகும்; பொதுத்தன்மையின் றெனில் அவை யொருபோதும் பொருந்தமாட்டா. ஆதலால் வேறுபட்ட இரண்டு ஸ்வரங்களுள்ளே ஒரு பொதுத் தன்மையமைந்து கிடந்தது என்பது தெளிவாகிறது. இப் பொதுத் தன்மையை இன்னதென்றுணர்ந்து பொருத்தி வைப்பவனே இசை வல்ல வித்துவானுவான். கூதிர்க் காலமும் வேனிற்காலமும் வேறுபட்ட நீர்மைய; அங்ஙனமாயினும் காலவியல்பையும் உடலியல்பையும் ஆராய்ந்தறிந்து பொருந்த நடப்பவன் இரண்டு காலங்களிலும் உண்டாதற்குரிய சுகத்தை யனுபவித்துத் துன்பத்தினின்று நீங்கிக் கொள்வான். உடலின் அவயவங்கள், ஒன்றிேனுடொன்று பொருத்தமாக அமைவுற்றிருக்கும் நிலையே ஆரோக்கிய நிலையாகும். பொருந்தா நிலையே நோய் எனப்படும். அன்பின் மர்மத்தை யறிவதனுல், மக்களனைவரோடும் ஒருமித்து வாழ்ந்து இம்மை மறுமைச் சுகத்தை யடையலாகும். உள்ளத்தில் அன்பில்லாதான் தனக்குத் தானே பெருந் தீமையை விளைவித்துக் கொள்கிருன். இனி நக்கீரனுருடைய விக்கலும் நின்றுவிட்டது. நான் சொல்லக்கூடிய குறிப்புகளும் ஒழிந்து விட்டன.

நக்கீரனுர்: விக்கல் ஒருவகைப் பொருந்தாமை; தும்மல் மற்ெறுரு வகைப் பொருந்தாமை, தும்மல் உண்டாக விக்கல் நின்று விட்டது; ஆதலால், பொருந்தாமையை மற்ெறுரு பொருந்தாமை யழிக்குமென்பது எனக்குப் புலப்படுகிறது; வைத்திய சாஸ்திரத்துக்கு இது உடம்பாடோ அறியேன்.

மருத்துவன் தாமோதரனுர்: குற்றங் காணுதலையே சிறந்த கொள்கையாகவுடைய நண்பரே, நீவிர் காட்டிய "பொருந்தாமை" இலக்கணத்துக்கு நீவிர் தாமே இலக்கியமுமாயினீர்; இனிப்பொருந்தும் வழியறிந்து கூறினுற் பொருந்தும் பொருளையாம் பொருந்தவைத்து நோக்கிக் கொள்வோம்; பொருந்தாப் பொருளையும் பொருந்த வைத்து நோக்கிக் கொள்வோம்.

நக்கீரனூர் : நல்லது ஐயா தாமோதரனூரே! தாங்களும் பரணரும் கூறிய முடிவுகளுட் பல பொருந்தா முடிவுகளாக எனக்குப் புலப்படுகின்றன. ஒருவனுக்கும் ஒருத்திக்கும் இடையிலுள்ள அன்பின் தன்மையை ஆராய்ந்தறிவதற்கு முதலிலே மனித வியற்கையை யாராய்ந்தறிதல் வேண்டும். சிருஷ்டி யாரம்பத்திலே கடவுள் மக்களை ஒரு பக்கம் ஆண்பிள்ளை வடிவமும் ஒரு பக்கம் பெண் பிள்ளை வடிவமும் ஒருங்கு பொருந்திய வடிவமாகப் படைத்தார். இங்ஙனம் படைக்கப்பட்ட மக்கள் எல்லோரும் ஒரே தன்மையராக விருந்தமையால் அவர்களிடத்து விருப்பு வெறுப்புத் தோற்றவில்லை. எல்லாரும் ஞான மார்க்கத்திலே தவஞ்செய்து கொண்டிருந்தார்கள். இதைக்கண்ட தேவராஜனுகிய இந்திரன், இவர்களை இந்நிலையில் விட்டால் உலகத்தில் விருத்தியுண்டாகா தென்றறிந்து, வாளினுல் இரண்டு கூறு செய்திட்டான். அங்ஙனம் கூறு செய்யப்பட்ட பாகங்கள் ஆணும் பெண்ணுமாய் ஒன்றை யொன்று நாடுவாயின; அதனுற் சந்ததி விருத்தி யுண்டாயிற்று. இந்த உண்மை யறியாது தனித்திருப்போர் மரபு கடந்தவராவார்; இத்தகையோரைத் தேவர்கள் கடிந்து பின்னும் இருகூறு செய்து விடுவாரெனின் இன்னுர்கதி அதோகதிதான். இந்த ஒரு குறிப்புத்தான் நான் சொல்லவேண்டியது; தாமோதரனுர் கொள்ளினுங் கொள்ளுக, தள்ளினுந் தள்ளுக. இனி அரசரும் சாத்தனுரும் கூறுவனவற்றைக் கேட்டுப் பொருந்தும் உரை இது, பொருந்தாவுரை இது என்று அறிவோமாக. நான் கூறிய குறிப்பினைச் சற்று பிரித்துச் சொல்லுவதாயின், தலைவனுக்குந் தலைவிக்கு மிடையிலுள்ள தொடர்பு சொல்லுக்கும் பொருளுக்கும் இடையிலுள்ள தொடர்பினையும், அமிழ்துக்குஞ் சுவைக்குமிடையிலுள்ள தொடர்பினையும் நிகர்த்தது. அன்புடையாரிருவர் இரு வேறு உடலினராக உலகத்தாருக்குக் காணப்படினும், உண்மையில் அவர் உயிர் ஒன்றேயாகும். "பொன்னம்பாவை யிரண்டினைப் பொற்கொல்லனவன் ஒன்று சேர்த்துருக்கி ஒரு பாவையாக்கி விடுதல்போல, அன்புடையோராகிய நும்மிருவரையும் ஒன்று சேர்த்துருக்கி ஒருருவமாக்கி விடுகின்றேன்" என்று ஒரு தெய்வங் கூறுமாயின், அன்புடையாரிருவர்

இதனினும் மிக்க பெரும் பேறில்லையென அறிந்து, ஒருருவமாவதற்கு உடன்பட்டு நிற்பார். அன்புடையார் தாம் அன்பு செய்யும் பொருளைச் சிந்தித்துச் சிந்தித்துத் தன்வயமிழந்து அதன் வயமாவதற்கு விழைவாரே யன்றித் தனித்திருப்பதற்கு விழையமாட்டார். ஆன்மாவுக்கும் தனிப்பெருந் தலைவனுக்கும் இடையிலுள்ள தொடர்பும் இந்நீர்மையதென உண்மை நூலுரைக்கும் “தானேயவள்; அவளேதான்” என நிற்கும் நிலையே தலையாய அன்பின் நிலை; அன்பர் தமக்கென ஒன்றும் வேண்டார்; உற்றார், ஊர், பேர், சுற்றம், புகழ், பொருள், நட்பு, கற்றோர்ச் சேர்தல் என்னும் இவை யனைத்தினையும் பற்றறத் துறந்து, கன்றை நினைத்தலறும் புனிற்றாவைப் போலக் கருத்தழிந்து, தலைவனை நினைந்து இரங்குதல் உண்மை யன்பரது இயல்பாகும். ஊன், உணர்வு, உள்ளமாகிய அனைத்துங்கெட்டு வெறும்பாழாகி “நான்” என்னும் எண்ணமுங் கெட்ட பின்பன்றி அன்பு நிலை கைகூடாது. நானும் அவனும் வேறல்லவெனின், நானென்பதெங்கே, அவனென்பதெங்கே? ஒன்றாயிருந்து பிரிந்தோர் ஒன்றுதற்கு விரும்பி நிற்பதுபோல, இறைவனோடு ஒன்றாயிருந்து பிரிந்த உயிரும் அவனோடு ஒன்றுபட்ட பின்பன்றிப் பேரின்பமுறாது. அன்பின் மேலனவாக யான் கூறவிருப்பின் இவையே.

மருத்துவன் தாமோதரனார்: நக்கீரனாருரை அறிவுடையோர் உள்ளத்துக்குப் பெரு மகிழ்வினையளிப்பது. இதுவரையும் யாங் கேட்டவையே யன்றி அன்பின் மேலனவாகிய பொருண் முடிபுகள் பிறவுள வென்றெண்ணுதற் கிடமில்லை. அங்ஙனமாயினும், அரசரும் சாத்தனாரும் அகத்திணையில் நிரம்பிய புலமை வாய்ந்தவராதலினால் அவருரை அகன்ற நீர்மையதாகு மென்பதற்கும் ஐயப்பாடில்லை.

சாத்தனார்: ஆமாம் தாமோதரனாரே! நீவிரெல்லாம் நல்வினையாளர். அரசருரைக்குப் பின்பு உரை தொடுக்கவேண்டிய யான் தீவினையாளன். சொல்லவேண்டிய பொருண் முடிபுகளை யெல்லாம் உத்தமப் புலவராகிய நீவிர் ஆராய்ந்து சொல்லிவிட்டீர்; எஞ்சியவற்றை யரசர் சொல்லி விடுவார்; என்பாடு அல்லல்தான்.

நன்மாறன் : ஐய! புலவரேறே! என்னுரை சிறக்குமென்று கூறினீர். அது சிறவா தென யானறிவேன். சிறப்பிலது தோற்றுமுன் சிறப்புளது எனப் புகழ்படுமாயின், சிறப்பிலதற்கு உள்ள சிற்றளவு சிறப்புத்தானும் குன்றியற்றுப் போகுமே யென அஞ்சுகிறேன்.

சாத்தனுர் : பெருவிறன் மள்ள! பல்லாயிரவர் கூடிய அரங்கங்களில் நின்புயவலியும், உரை வலியும் சிறந்து விளங்கினதை யான் அறியேனு? இங்கு கூடியிருக்கும் சில நண்பராகிய எங்களது முன்னிலையிலா நீ நாணி யொதுங்கப் போகின்ருய்.

நன்மாறன் : புல்லியோர் பலர் முன்னிலையில் பெருகவுரையாடும் நாவானது, நல்லாரவைக் களத்தில் நாணியொடுங்குதலும் இயல்புதானே!

சாத்தனுர் : செய்யுஞ் செயல் நற்செயலாயின் நல்லாரவையிலும், புல்லியோர் கூட்டத்திலும் நாணுது செய்யலாம். தீச்செயலாயின் புல்லியோர் கூட்டத்துக்கும் நாணுதல் வேண்டும். புல்லியோர் புல்லியராயின் அவரை இழுக்கமுற நடாத்தி மேன்மேலும் புல்லியோராக்குதல் மரபாமோ?

காரிக்கண்ணனுர் : புலமை மிக்கோரிருவர் உரையாடத் தொடங்கிறல் அவ்வுரை யெல்லையற்றுப் பெருகும். அன்பிணைப் பற்றியறிய யாமெல்லாம் ஆவலோடிருக்கின்ருே மாதலினுல், சொல்ல வேண்டியவற்றைச் சொல்லி முடித்துவிட்டுப் பின்பு உரையாடும்படி அரசரையும் சாத்தனுரையும் யான் பணிவோடு வேண்டிக் கொள்ளுகிறேன்.

நன்மாறன் : நல்லது நண்பரே! உமது சொற்படி இனித் தடையின்றி யான் சொல்லவேண்டியவற்றைச் சொல்லுகின்றேன், "சுவை பலவென்று கூறுவார் கூறுக; யாம் வேண்டுவதின்பச் சுவையே" எனப் போஜராஜன் உரைத்தான். இன்பப் பொருள் எப்பொருளினுஞ் சிறந்ததே. அப்பொருளைப் பெறுவாருக்கு வந்து எய்துகின்ற நன்மையைப்பற்றி அன்பராகிய நீவீர் அனைவருங் கூறினீர். அப்பொருளை யளிக்குந் தெய்வத்தின் புகழைக்

கூறுவது இன்றியமையாச் சிறப்பினதாமாதலினுல், தேவர்களுள்ளே அழகும் இளமையுஞ்சான்ற காதற் றெய்வத்தைப்பற்றி ஒரு சில குறிப்புக்கள் கூறமுற்பட் டேன். "காதல் இளமை சான்றது," என யான் கூறிய கூற்றுக்கு ஆதாரம் எதுவோ வென்னில் "இனம் இனத் தைச்சாரும்" என்றபடி காதல் என்றும் இளையோரைச் சார்ந்து நிற்பதுவேயாம். அஃதன்றி, இத்தெய்வம் மெல்லென்ற நீர்மையது. ஆடவர், மடவார், தேவர், அரம்பையர் என்றின்ஞேருடைய இருதய கமலத்தின் மேல் நடந்து பூக்களாகிய பாணங்களினுலே அவர் மனத் தில் இன்ப வேட்கையை உண்டு பண்ணுகிறதன்ரே? இக்காரணத்தினுல் இத்தெய்வம் மென்னீர்மையதாமென வும் அருளுடையதாமெனவும் அறிதல் வேண்டும். தறு கண்மையுள்ள விடத்துக் காதல் இல்லை. ஆதலால் காதல் என்றும் அருளையே சார்ந்து நிற்கும் என்பது பெறப்படுகின்றது. இனி இத்தெய்வம் வீரத்திற் சிறந் தது எனவும் அறிதல் வேண்டும். புயவலி படைத்த விறல் வீரரைத் தன்வயப்படுத்தி யடக்கியாளும் திறமையுடைய காதற்றெய்வத்தினும் பார்க்கச் சிறந்த வீரர் உளரோ? தேவர் சேனுதிபதியையும் காதல்வென்று விட்டதென்ருல் காதலுக்கிணையான வீரர் வேறு யாவருளர்? வித்துவ சக்தியிற் காதலுக்கிணையான பாவலர் பிறர் இலர்.

"காத லுளத்திற் கதுவக் கடல்புடைசூழ்
பூதலத்து மைந்தர் புலவராய்க்—கோதில்
தமிழ்த்தளைவ ராதலினுற் ருவில் புகழக் காத
லழிந்த மொழிச் செம்புலவனும்."

அழகினை விழைந்து நிற்பது காதல். அழகின் மேலுள்ள விழைவினுலன்ரே, சிற்பர், ஓவியர் என்றின்ஞேர் தமது வேலையைச் செவ்வனே செய்கின்றனர்? அழகினை விழை யும் விழைவினுலன்ரே, அவனியில் நன்மக்கள் தோற்று கின்றனர்? பிரிபு நீக்கத்து மகிழ் வினையழிப்பதும், விழாக்காலத்தும் குரவை மன்றத்தும் விழைவோடு தோன்றி யுவகையை யளிப்பதும், பகைமையை நீக்கி யொன்று கூட்டுவதும், சமுக வாழ்க்கைக்கு அழகினை யளிப்பதும், வாழ்வினுந் தாழ்வினும் ஆதாரமாவதும்

காதற்றெய்வ மன்ரே? ஆதலினுல் இத்தெய்வத்தின் புகழினை வியந்து பாடுவதும், அதனேடு உடன் சேர்ந் திருப்பதும் அறிவுடையா ரனைவருக்கும் கடனுகும். (என நன்மாறன் கூறி முடிக்கச் சபையிலிருந்தோர் உவகை யினுற் கைகொட்டி யார்ப்பரித்தனர்.)

சாத்தனுர்: (மருத்துவன் தாமோதரனுரை நோக்கி) பார்த்தீரோ, நண்பரே! அரசர் பெருமானது உரை சிறக்கு மெனவும் என்பாடு அல்லல்தான் எனவும் நான் ஏற்கெனவே கூறிய உண்மையைக் கண்டு கொண்டீரல்லவா?

தமோதரனுர்: அரசர் பெருமானுரை சிறக்கு மென்ற அளவிற் கண்டு கொண்டேன்; ஆனுல் தங்களுக்கு அல்லல் வந் தெய்து மென்பது எவ்வாற்ருனும் பெறப்படவில்லை.

சாத்தனுர்: என் நண்பரே! பலவேறு வகைப்பட்ட சொல்ல ணியும் பொருளணியும் பொலிந்து விளங்கிய அரச ருரைக்குப் பின்பு உரை விரிப்பது எத்தன்மையோருக்கும் அரியதொன்றல்லவா? யாதும் பேசாது சிலை யுருவம் போல் மௌனமாயிருந்து விடலாமோ வென்றெண்ணி னேன். அறிவீனனுகிய எனது நா ஆராயாது வாக்குப் பண்ணிய ஒரு வாக்குத்தத்தமுங் கிடக்கிறது. அன்பைப் பற்றியான் என்ன அறிவேன்? காதற்றெய்வத்தின் புகழாக யான் சொல்லக்கூடியயாவுள? சொற்களை நேர் பெற அடுக்கிக் கூறும் வன்மையைத் தருகிற அலங்கார சாஸ்திரப் பயிற்சியும் எனக்கில்லை; ஆதலால் எனது உரை நகைக்கிடனுகு மென்பது வெளிப்படை. அன்பரா கிய நுமக்குச் சம்மதமாயின் அரசர் பெருமானிடத்துச் சில வினுக்கள் வினுவி என் மனத்தில் உதித்த சில சந்தே கங்களை நீக்கிக் கொள்ள விரும்புகிறேன்.

காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனுர்: தேவரீர் அங்ஙனஞ் செய்வது எங்களுக்குச் சம்மதந்தான்.

சாத்தனுர்: என்னுயிர் நண்ப நன்மாற! என் அரசே! நினது உரையை நான் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டேன். காதற்றெய்வத்தின் மாண்பினை யறிந்தேன். காதல் தன்னைத்தான் காதலிக்கின்றதா? பிறிதொன்றினைக்

காதலிக்கின்றதா? என்ற ஒரு சந்தேகம் மாத்திரம் என் உள்ளத்தில் நிகழுகின்றது. தந்தை யென்புழிய் மைந்த னுண்மை யுய்த்துணரக்கிடப்பது போலக் காதலென் புழிக் காதலிக்கப்படும் பொருள் பிறிதொன்று உளதாக வேண்டும் என்பது எனது சிற்றறிவுக்குப் புலப்படுகின் றது. அரசருடைய கருத்து யாதோ? அறியேன். காதல் தன்னைத்தான் காதலிக்கிறதா? பிறிதொன் றினைக் காதலிக்கிறதா? என்பதே எனது வினு.

நன்மாறன்: பிறிதொன்றினைத்தான் காதலிக்கின்றது.

சாத்தனுர்: நல்லது, அரசே! பசியுடையோன் உணவைத் தேடுவானு? பசியில்லாதவன் உணவைத் தேடுவானு?

நன்மாறன்: பசியுள்ளவன்தான் உணவைத் தேடுவான். யாண்டுக் குறைவு உண்டோ அவ்விடத்துத்தான் விழைவு ஏற்படும்.

சாத்தனுர்: அழகுள்ளவன் அழகினைக் காதலிப்பானு? அழகில்லாதவன் அழகினைக் காதலிப்பானு?

நன்மாறன்: அழகில்லாதவன்ருன் அழகினைக் காதலிப்பான்.

சாத்தனுர்: நல்லது, அரசே! காதல் அழகினைக் காதலிக்கின்றது என்று கூறினீர். ஆதலால் காதல் அழகிற் குறைவு பாடுடையது என்பது பெறப்படுகின்றதா, அல்லவா? காதல் அழகில் நிறைவு உடையதாயின் அழகினைக் காதலிக்க வேண்டிய அவசியம் காதலனுக்கு ஏற்படுமா?

நன்மாறன்: குறைவுபாடுடையதென்றுதான் சொல்ல வேண்டும்.

சாத்தனுர்: அங்ஙனமாயின் காதற்றெய்வத்தினும் பார்க்க அழகு சான்ற தேவதை பிறிதொன்றில தெனக்கூறிய கூற்றுப் பிழைப்படுகின்றதல்லவா?

நன்மாறன்: ஆமாம். பிழைப்படுகின்றது.

சாத்தனுர்: ஆதலால், காதற்றெய்வம் அவலட்சண வுருவமுடையதல்லவா?

நன்மாறன் : தேவரீருரைக்கு மறுமாற்றங் கூற முடியாதவனாக யிருக்கிறேன். இவ்வண்ணம் தர்க்கிப்பீராயின் நான் காதற்றெய்வத்துக்கு இயம்பிய நற்குணங்களனைத்தினை யும் போக்கிவிடுவீர் என அஞ்சுகிறேன்.

சாத்தனார் : என் அரசே! அங்ஙனமல்ல, எந்த விஷயத்தையுங் கூர்ந்து நோக்க வேண்டும். காதல் வேறு; காதலிக்கப் படும் பொருள் வேறு. காதலிக்கப்படும் பொருளுக்குள்ள குணங்களைக் காதலுக்கு எற்றிச் சொல்லிவிடுவது அறியாமையின் பாலதாகும். அஃதன்றியும், ஒரு பொருள் நன்மை யெய்தப் பெருதது என்ற வெல்லையில் அது தீமை நிறைந்தது என்று நிச்சயித்து விடுவதுங் கூடாது: நன்மை தீமையாகிய விரண்டும் பொருத்தப் பெரு இடைப்பட்ட நிலை யொன்று இருக்கின்றதல்லவா? நீவிர் புகழ்ந்து கூறிய காதற்றெய்வம் அந்த இடைப் பட்ட நிலையிலுள்ளது. ஆடவருக்கும் மடவார்க்கும் இடையேயுள்ள அன்பினுருவம் நீர் உரைத்த காதல். இவ்வன்பு ஒரோ வழி நன்மை பயப்பது; ஒரோ வழி தீமையை விளைவிப்பது. ஆதலால் இதனை நல்லதென்ரு வது தீயதென்ருவது சொல்லுதல் கூடாது. அன்பின் வரலாற்றைப் பற்றிக் கலைச் செல்வியாகிய ஔவை யாரிடம் யான் கேட்டறிந்த விஷயங்கள் சில வுள; அவற்றை நீவிரறியும் படியாகச் சொல்லு கிறேன். முன்னொரு காலத்தில் தேவர்கள் ஒருங்கு கூடி விருந்தாட்டயர்ந்தார்கள். இவ்விருந்துக்குச் செல் வமும் வறுமையும் வந்திருந்தன. செல்வமென்னு மாடவன் மதுவினை நிறையவுண்டு, அறிவழிந்த காரணத் தினாலே அமராவதி நகரத்தின் ஐந்தரு நிறைந்த பூஞ் சோலையினுள்ளே அயர்ந்து நித்திரையாய் விட்டனன். இதனைக்கண்ட வறுமை யென்னும் பெண்ணனவள் பல நலங்களோடுங் கூடி விளங்குகின்ற செல்வத்தைக் கூடி ஒரு மகனைப்பெற்ருல் தனக்குப் பெருமை வந்தெய்தும் எனவெண்ணிச் செல்வத்தினருகே போய்ச் சயனித்தனள். அதன் பின் வறுமை வயிற்றிற் கருவுண்டாகிச் சுப தினத்திலே காதல் என்னும் ஆண் மகவினையீன்ற னள். ஆதலினுல் காதல் தாயின் குணம் மேற்கொண்டு பெருமூச்செறிவதும், நிலத்திற் புரள்வதும், வீடு துறந்

தலைவதும் என்றித்தகைய தொழில்களைச் செய்கின்றது; ஒரோவழி தந்தையின் குணம் மேற்கொண்டு அடுத்த வரைக் கெடுப்பதும், மருந்து மந்திரத்தால் மயக்கு வதும், பிறரை இகழ்ந்துச் செய்கின்றது. இத்தகைய காதல் அன்பின் ஓர் அம்சமாகும். அன்பு தேவருலகத் துக்கும் மண்ணுலகத்துக்கும் இடையே போக்கு வரவு செய்கின்ற ஒரு தூதுவன் போன்றது. நன்மையை நாடு வதே அன்புக்கு இயல்பு; அங்ஙனமாயினும் அறியாமை யினாலே தீய பொருட்களை நாடி அவற்றால் துன்பத்தை யடைவதுமுண்டு. அறிவில்லாதாரது உள்ளத்து எழு கின்ற காதல் கேவலம் சரீரத்தின் அழகை நாடி நிற்பது. சரீரமோ மூப்புவிளிவுடையது. எறியும் வேலொத்த கண் ணிணையுடைய மடநல்லார் ஆண்டு பலகழியக் கோல் கொண்டு வழிகாணும் முதுமைப் பருவத்தை யடைவார். ஆதலால் நிலைத்து நிற்கின்ற கல்வி யழகு, நற்குண நற் செய்கை இவற்றின்மேற் காதல்வைப்பார் அறிவுடை யார். கீர்த்தி யென்னும் அழியாப்பொருளைப் பெறு தற்கு விரும்பினோர் அழியாப் பொருளாகிய தமது உடலின் மீது சிறிதேனும் பற்றுவைக்காது போர்க் களத்தைக் காதலித்து நிற்பார். நித்தியத்துவத்தை யார் தான் விரும்பாதார்? அழிந்து போகிற குழந்தைகளைப் பெறுதற்கு உலகத்துமானிடர் எவ்வளவு தவஞ் செய் கிறார்கள். நிலைபெற்ற புகழ் என்னுங் குழந்தையைப் பெறு தற்கு அதனிலும் பார்க்கக் கோடி மடங்கு தவஞ்செய்ய வேண்டுமல்லவா? அழகுள்ள பொருண்மேல் இயல்பாக ஏற்படுகின்ற அன்பினைப் பெருக்குவோன் இம்மை மறுமைப் பயன் அனைத்தினையும் பெறுவான். அறத் துக்கும் மறத்துக்கும் அன்பே துணையாவது.

[என்றின்னவாறு தமிழ்ப் பெரும்புலவர் அன்பின்வரன் முறையை விரித்துரைத்து வார்த்தையாடிக் கொண்டிருக்க அவருரையை உற்றுக் கேட்ட வண்ணமாகத் தெருத் திண்ணையிலிருந்த இளமாணியார் அறிவுடையரனார் என்னும் தமிழ் கற்கும் மாணவர் தம்வயமிழந்து பரவசராகி இப்பெரும் பொருளைப்பற்றித் தாமும் சிந்திப்பாராயினர். அதனால் சாத்தனார் தொடர்ந்து கூறிய பொருண் முடிபின் பிற்பாகம் அறிவுடையனாரது உள்ளத்திற் பட்டிலது. சாத்தனாரது உரைமொழியை இவ்வளவோடு நிறுத்த வேண்டி வந்தமைக்காகக் கவற்சி யடைகின்ற அறிவுடை

யரனுர் தமது சிற்றறிவுக்கெட்டிய சிற்சில முடிபுகளை நிறைவு நோக்கியும் தம்மையொத்த மாணவர் பொருட்டாக வும் இதன் கீழ்த்தருகின்றுர்.]

அறிவுடையரனுர் :

குணதிசையிற் பரிதியெழக் கமலமல
ரகநெகிழ்ந்த குறிப்புக் கண்டேன்,
மணவணிநாள் விரவிவர மணமகளின்
முக கமல மலரக் கண்டேன்,
இணையணுக வுவகையினுற் குதுகலிக்கும்
பெண்புறவி னியல்பு கண்டேன்,
அணைவர்தனித் துணைவரெனி னகநெகிழ்ந்த
லன்பாமென் றறிந்தேன் யானே.

[கிழக்குத்திசைக் கடலிற் சூரியன் உதித்து வர அவ்விரவினைக் காத்திருந்த தாமரை மலரானது முகமலர்ந்து உவகைக் கண்ணீர் சொரிந்து உள்ளம் நெகிழ்ந்து நின்ற குறிப்பினைக் கண்டேன்? திருமங்கிலியதாரணத்துக்குக் குறிக்கப்பட்ட நன்முகூர்த்தத்தோடு கூடிய விவாகத் தினமானது நெருங்கிவரத் தனது நாயகனை யடைகின்ற தினம் சமீபித்து விட்டதையறிந்து உள்ளத்தெழுந்த உவகையினுல் முக மலர்ந்து நின்ற மணமகளைக் கண்டேன்; புறத்தேபோயிருந்த ஆண் புருவானது திரும்பிவர அதனைக்கண்டு பேருவகை யுற்றுக் "குறுகு குறுகு" என்னும் ஒலிக்குறிப்போடு நெருங்கிச் செல்லுகின்ற பெண் புருவைக் கண்டேன்; இத் தகைய நிகழ்ச்சிகளைக் கண்டேனுதலினுல் பிரிந்திருந்த நாயகர் வந்தணையுங் காலத்திலே அகங்குழைந்து முகமலர் வுற்றிருப்பது அன்பின்றன்மை யாமெனவறிந்து கொண் டேன்.]

அணியிரவி கடலில் விழ அரவிந்தஞ்
சேர்ந்துவிழு மல்லல் கண்டேன்,
இணைபிரிந்த விளம்பறவை சிறையடித்து
நனிவருந்து மின்னல் கண்டேன்,
கணவனுடல் பதறிவிழக் கதறியழு
மடமகளின் கவற்சி கண்டேன்,
துணைவர்பிரிந் தேகுங்காற் றுயுறுத
லன்பென்னத் துணிந்தேன் யானே.

[அழகு பொருந்திய சூரிய பகவானுனவன் மேற்றிசைக் கடலில் விழத் தாமரைமலரானது துன்புற்றுச் சோர்ந்து விழுகின்ற

தன்மையைக் கண்டேன்; தோடிழந்த பறவையானது துன் பத்தினற் சிறையையடித்துப் பிரலாபிப்பதைக் கண்டேன்; பாலைவனத்தில் உடன் போகுங்கால் கணவனுடலானது சோர்ந்து விழுந்து உயிர் துறக்க அதனைக்கண்டு ஆற்றுமை யினற் கதறியழுது துன்புற்ற இளமைத் தன்மை பொருந் திய கற்புடைப் பெண்ணினது கவலைப் பெருக்கத்தைக் கண்டேன்; இந்நிகழ்ச்சிகளைக் கண்டேனுதலினல் துணைவர் பிரிந்து போகுங்காலத்துத் துயருற்று வாடுதல் அன்பின் தன்மையாமென யான் துணிந்து கொண்டேன்.]

சாபத்தைக் கரத்தேந்திப் போர்க்களத்தி
லிறக்கவெண்ணிச் சார்வார்கண்டேன்,
தீபத்தின் மிசைவிழுந்து சிறையெரிந்த
சிறுவிட்டிற் செய்கை கண்டேன்,
பாபத்தி னுருவாய விலைமகளைக்
காதலித்தோர் பான்மை கண்டேன்,
ஆபத்தை நோக்காம லுட்புகுத
லன்பென்ன வறிந்தேன் யானே.

[புகழென்றுமழியாப்பொருளைப்பெறவிரும்பிப் போர்க்களத்தில் மரணம் வந்தெய்துமே யென்பதையுப் பற்றிச் சிறிதேனுஞ் சிந்தியாது வில்முதலிய ஆயுதங்களைக் கரத்தேந்திப் போருக் குச் செல்லுகின்ற வீரரைக் கண்டேன்; தீபத்தினுடைய பிரகாசத்திலீடுபட்டுத் துன்பம் வருமே யென்பதைப் பற்றிச் சிறிதேனும் சிந்தியாது விளக்கில் விழுந்து சிறையெரிந்து கிடந்த விட்டிற் பறவையினுடைய செய்கையைக் கண்டேன்; பாவமேயுருவாகிய வேசியர்பாற் பெறுகின்ற சிற்றின் பத்தைப் பொருளெனக் காதலித்துப் பொருளுந் தேக சுகமும் நாசமாகப் போகுமே யென்பதைச் சிறிதேனுஞ் சிந்தி யாது வேசியர் பாற்சென்று உழலுகின்ற விடபுருடரைக் கண்டேன்; இத்தகைய நிகழ்ச்சிகளைக் கண்டேனுதலினல் ஆபத்து வருமே யென்பதைப் பற்றிக் சிறிதேனுஞ் சிந்தி யாது காதலித்த பொருளைத் தொடர்ந்து செல்லுதல் அன் பின்றன்மையா மென யான் அறிந்து கொண்டேன்.]

ஈசாநின் றனையல்லாற் பிறவேண்டேன்
என்னுந் தொண்ட னேற்றங் கண்டேன்,
ஆசான்றன் றிருவடிக்கே யனைத்துமெனு
மாணுக்க னுற்றல் கண்டேன்,
நேசாவென் பொருளுயிரை நினதெனக்கொ
ளெனு நண்ப னேர்மைகண்டேன்,

கூசாம லுடல்பொருளா வியைக் கொடுத்த
லன்பென்னக் குறித்தேன் யானே.

[“என்னையாட்கொண்ட விறைவனே நின்னையல்லாற் பிறதொரு பொருள் வேண்டேன்” னென்னைச் சர்வாங்க பரித்தியாகஞ் செய்து நின்ற மெய்த்தொண்டனது ஏற்றத்தைக் கண்டேன்; “ஞானவுணர்வினை யளித்த குருமூர்த்தியே! எனது உடல், பொருள், ஆவியாகிய மூன்றும் தேவரீரது திருவடிக்கே யர்ப்பணமாகுக” வெனத் துறவு பூண்டு நின்ற சற்சீடனது வலிமையைக் கண்டேன்! “நண்பனே! நீ என் ஆருயிரினும் மிக்காய், எனது உயிரும் நான் படைத்த செல்வமும் நினக்கேயுரிய” வெனக் கூறி நின்ற உண்மை நண்பனது நேர்மையைக் கண்டேன்! இந்நிகழ்ச்சிகளைக் கண்டேனாதலினால், கூசாது உடல் பொருள், ஆவி மூன்றினையும் அர்ப்பணஞ்செய்து நிற்பது அன்பின்றன்மையா மென யான் கண்டு கொண்டேன்.]

வெள்ளநீர் தருமேகம் வேற்றுமையில்
லாது நல்கும் மேன்மை கண்டேன்,
வள்ளலா யிருந்தோர்தாம் வறுமைவந்தும்
பிறர்க் கிரங்கு மாண்பு கண்டேன்,
கொள்ளுவீ ரெனவிளநீர் கொடுக்கின்ற
செழுந்தெங்கின் குறிப்புக் கண்டேன்,
உள்ளநேர் விழைவின்றிக் கொடுத்துதவ
லன்பென்ன வுணர்ந்தேன் யானே.

[மேகமானது வேறுபாடின்றி அனைவருக்கும் நீரினைக் கொடுத்துதவுகின்ற மேன்மையைக் கண்டேன்; கொடைத்தொழிலில் சிறந்தோர் வறுமை வந்தெய்தியக்காலும் பிறருக்குக் கொடுத்துதவுகின்ற மாட்சிமையைக் கண்டேன்; தென்னை மரமானது அனைவருக்குந் தனது இளநீரை கொடுத்துதவுகின்ற குறிப்பினைக் கண்டேன்; இந்நிகழ்ச்சிகளைக் கண்டேனாதலினால் பிரதியுபகாரம் வேண்டாது வரையாது கொடுத்துதவுதலே அன்பின்றன்மையா மெனக் கண்டு கொண்டேன்.]

தன்மகன் சான் றோனென்ன நனிமகிழ்ந்து
களிகூர்ந்த தாயைக்கண்டேன்,
தன்மகனோய் தீர்ப்பதற்காகத் துயினீத்துப்
பசிகிடந்த தகவு கண்டேன்,

தன்மகனால் வெற்றிபெறத் தவப்பயனை
விரும்பிநல்குந் தன்மை கண்டேன்,
மன்னுநீர் வையகத்தி லன்னையன்பு
சிறந்ததென மதித்தேன் யானே.

[தன்மகன் நற்குண நற்செய்கைகளிற் சிறந்தவ னெனக் கேட்டு மிகுந்த மனமகிழ்ச்சியை யடைந்த தாயைக் கண்டேன்; அத்தாய் தனது மகனுக்கு நோய் வந்துற்ற காலத்தில் ஊணுறக்கந் தவிர்த்துத் தனது தேக சுகத்தை யொரு பொருட்படுத்தாது மகனுக்கு மருந்து முதலியவற்றைத் தேடிக் கொடுத்துக் கொண்டிருப்பதைக் கண்டேன்; பின்னு மந்தத்தாய் தனது மகன் வெற்றியை யடைதல் கருதித் தனது தவப்பலனை அவனுக்குக் கொடுத்து விடுவதைக் கண்டேன்; இக்காரணங்களினால் நிலைபெற்ற நீரினாற் சூழப்பட்ட நிலவுலகத்திலே அன்னையினது அன்பே மிகச் சிறந்த அன்பாமென யான் கண்டு கொண்டேன்.]

[illegible] கூறிய "பாவலர் விருந்து" முற்றும்.

# 7

# இளமைப் பருவத்தின் பெருவனப்பு*

தேவர்கள் மானிடராகப் பிறக்கும்பொழுது தமது தெய்வக் குணங்களுள் ஒரு சிலவற்றை யொழித்து மானிடர்க்குரிய இயற்கைக் குணங்கள் பலவற்றைத் தாங்கியவதரிப்பர். பெருந்தவப் பேற்றினலே தேவர்களை மக்களாகப் பெற்றெடுத்த அன்னைமார் தமது செல்வக் குழந்தைகள் முன்னுளிற் றேவராயிருந்த மாண்பினை யறியார். அங்ஙனமாயினும் "யாண்டிருந்தோ ஈண்டுவந்து எமது மடித்தலத்திருக்கும் இவர் யாரோ" வென்றெண்ணியையப்பாடுற்றமையாற் போலும் "ஆராரோ ஆராரோ ஆரிவரோ ஆராரோ" என்று வினவராயினர்.

பொன்னுலக மாளும் புரந்தரரோ பொற்பமைந்த
மின்னுலவு செஞ்சடையோன் மெய்யருளைப் பெற்றவரோ
—ஆராரோ
உந்திக் கமலத் துறைகின்ற வேதியரோ
செந்திருவைச் சேர்ந்த திருமாலிவர்தாமோ —ஆராரோ

தேவர் குருவோ திருக்கிளருஞ் சந்திரனர்
ஆசை மகனே அவுணர் குலக்குருவோ —ஆராரோ

இந்திரனர் மைந்தர் எழிலார் சயந்தனெனுஞ்
சுந்தரரோ கந்தருவர் சொந்தநிலம் வந்தவரோ —ஆராரோ

என்று தமது செல்வக் குழந்தைகளைத் தாராட்டுவராயினர். யசோதைப் பிராட்டியார், கௌசல்யா தேவியார், மகா மாயா தேவியார், பகவதியார், மாதினியார், சந்திரமணி தேவியார்,

* ஸ்ரீ இராம கிருஷ்ண விஜயம்,

புவனேச்வரிமாதா, இசை ஞானியார், என்றின்னோரன்ன பெரியோர் தெய்வத்தன்மை பொருந்திய தமது அரும்பெறன் மக்களை மடித்தலத்திலிருத்திச் சீராட்டிப் பாராட்டும்பொழுது அம்மக்களது பெருமையை ஒவ்வொருவாற்றா னறிந்தாரெனி னும் அவரைத் தஞ்செல்வப் புதல்வராகக் கொண்டனரே யன்றி வேறுபட வெண்ணினரல்லர். உலகத்தினையும் ஈன்றனையீன்ற திருத்தாதை சிறு குழந்தை வடிவாகிக் கண் ணன் என்னும் பெயர்பூண்டு ஆயர்பாடியில் நந்தகோபன் திருமனையில் வளர்ந்து வருகின்ற நாட்களில், ஒருநாள் மணி வண்ணனாகிய கண்ணன் யசோதைப் பிராட்டியார் வீட்டிலில் லாத தருணம் பார்த்து உறியிலிருந்த வெண்ணெயைக் கவர்ந்து பவளவாயினுள்ளிட்டுச் சுவைகண்டு சிறிது காலை மகிழ்புற்றிருந்தனன். அன்னை வருதலும் கபட நாடக சூத்திராவ்தாரியாகிய அச்சுதன் ஒன்றுமறியாதவன்போல வாய்வாளாதிருப்பக் குறிப்பாலுணர்ந்த அன்னை அவனது சிறு கையைப்பற்றி, "வாயினுள் என்ன விருக்கின்றது, திற பார்ப்போம்'' என்றனள். மணி வாயைத் திறந்து காட்டுதலும் உலகு காப்போனைக் காக்கும் உயர்பெரும் பேற்றினைப்பெற்ற அன்னை தனது செல்வக் குழந்தையினுடைய வாயினுள் சுவர்க்க மத்திய பாதலமாகிய மூவுலகும், தேவ, சித்த இருடி கணங்களும் இருக்கக் கண்டு ஒரு கணப்பொழுது அச்சமுற் றாள். மாமாயன் தனது தெய்வவுருவை மறைக்க அன்னையும் முன்னையுணர்வோடு துளபங்கமழ் திருக்குழந்தையை வாரித் தழுவி மார்போடணைத்து உச்சி மோந்து முத்தமிட்டு மடித் தலத்திலிருத்தி மகிழ்வு கூர்ந்தனள்.

அன்னை மடித்தலத்திலிருந்து சிறுகாற் பெருவிரலை சுவைத்துத் திருமுகத்திற் குறுநகை யரும்பப் பார்ப்போரனை வரும் உள்ளங்களிகூரக் கேட்போருக் கிதந்தருஞ் சிறுகுதலைச் சொற்களால் "அம்மே, அப்பா" என்று மொழிந்து, பகை மன் னரின்றித் தனியரசு புரியும் ஆழிவேந்தனென்ன அரசு வீற்றி ருக்கும் இளமைப் பருவத்தினது பெருமாண்பினை யறியாத தாய் தந்தையரிலர். பொன்னரைஞாணும் பொற்சங்கிலியு மணிந்து பூம்பட்டாடை யுடுத்தி அன்புடைய அம்மானது தோண்மீதிவர்ந்து அவரது மயிரைச் சிறு விரலாற்பற்றித் தெருவிற் பவனி செல்லும்பொழுதும், முன்றிலிருந்து புழுதி யளைந்து மணலைக் குவித்துச் சிற்றில் கோலி விளையாட்டுத்

தோழர்களாகிய பரிசனர்கள் புடைசூழக் கொலுவீற்றிருக்கும் பொழுதும், அன்னையின் முன்றானையைப்பற்றி அழுத கண்ணுஞ் சிந்திய மூக்குமாக நின்று தான் விரும்பிய பொருளைப் பெற்ற பின்னர் அழுகை யொழிந்து மகிழ்வு கூர்ந்திருக்கும் பொழுதும், கரும்பின் கட்டி முதலிய இனிய பொருட்களை நாவால் துக்கிச் சுவை கண்டு வாயினின்றும் வடியும் நீர், பட்டாடையை நனைப்பப் பேருவகையுற்று மகிழ்வே யுருவாயிருக்கும்பொழுதும், அல்லா தொழிந்த ஆழ்துயில் வேளையில் மெல்லெனக் கடை வாய்ப்புறத்திற் சிறு நகை தோற்றும் பொழுதும் இளமைப் பருவத்தினது பெருவனப் பினைக் காணலாம்.

# 8

# யோகமார்க்கம்*

"வேண்டிய வேண்டியாங் கெய்தாலற் செய்தவம்
ஈண்டு முயலப்படும்"

இறைவனுக்கு "எல்லாம் வல்லசித்தர்" என்று ஒரு திரு நாமம் உண்டு. எங்கனும் வியாபித்து நிற்கும் அவனுடைய அருட் சக்தியின் வலிமையினாலே சராசரப் பொருட்கள் அனைத்தும் நிலை பெற்று இயங்குகின்றன. இதனையுணர்ந்த அறிஞர் சித்தத்தைச் சிவன்பாலே வைத்து இறைவனுடைய திருவருள் வியாபகத்துக்குத் தம்மை யொரு நிலையமாக்கி, இக வாழ்விலேயே பேரானந்தப் பேற்றினை யடைவர். இத் தகைய அருட் செல்வத்தைப் பெற்றோரைப் பற்றியே,

"தாமடங்க விந்தத் தவமடங்குந் தாபதர்கள்
தாமுணரிலிந்தத் தல முணருந்—தாமுனியிற்
பூமடந்தை தங்காள் புகழ் மடந்தை போயகலும்
நாமடந்தை நில்லாள் நயந்து"

எனக் கூறப்பட்டது. இறைவனுடைய திருவருளைப் பெற்ற வர் அனைத்தையும் பெற்றவராவர். அதனைப் பெறுதவர் இக பர சுகங்களைப் பெறுதவராவார். நமது முயற்சினால் திருவ ருள் வந்து கைகூடுமோ வென ஐயப்பட வேண்டியதில்லை. இறைவன் தாயினும் பார்க்கப் பேரருளுடையவன். நமக்கு அநுக்கிரகஞ் செய்தலையே தனக்குரிய தொழிலாகக் கொண் டவன்; அவனது திருவருள் நம்மை என்றும் நாடிநிற்கின் றது; நாம் அறியாமையினாலும், அகங்காரத்தினாலும், நம் பிக்கை யீனத்தினாலும் அற்ப சீவியம் நடத்துகிறோம். உள்ளத்திற் படிந்திருக்கிற அறியாமை, அகங்காரம், நம் பிக்கையீனம் என்னும்; மாசுகளேயகற்றுவோமாயின் திருவ ருள் தானாகவே விளங்கும். சூரியனை மறைத்து நிற்கும் முகிற் படலம் போன்றது அஞ்ஞானம். முகிற்படலம் அகலக்

* ஸ்ரீ இராம கிருஷ்ண விஜயம்

கதிரவனொளி தானே விளங்குவது போலவும், புறத்தே படிந்த மாசினைத் துடைத்துவிடக் கண்ணாடி விளக்கின் உள்ளொளி தானே விளங்குதல் போலவும் திருவருள் விளக்கமாகிய மெய்ஞ்ஞானம் தானே விளங்கும் நீர்மையது. மன மாசினைத் துடைத்து விடுதற்குத் தவமும் சாதனையும் இன்றியமையாது வேண்டப்படுவன. சாதனை மார்க்கங்களை நூல்கள் ஞானம், பக்தி, யோகம், கர்மம் என நான்காக வகுத்துக் கூறுவன. இவற்றுள் யோகமார்க்கம் அனைத்துச் சமயத்தாருக்கும் பொதுவானது. அஃதன்றியும் அறிவு, நிறைவு, ஆற்றல் என்னும் பெருந்தன்மைகளை யுண்டாக்குவது. இம்மை மறுமைப் பயன் இரண்டினையும் ஒருங்குதரவல்லது. உயர்வாகிய ராஜ யோக முறைகளையனுட்டிப்போர் இல்லந்துறந்து குருவை யடைந்து அனுட்டித்தல் வேண்டும். இல்லத்திலிருந்து கொண்டே அனுட்டிக்கத்தக்கயோக சாதனைகளும் சில உள. இவை தேக ஆரோக்கியத்தையும், புத்திக்கூர்மையை யும், ஞாபக சக்தியையும் பெருக்கி உலக வாழ்க்கையைச் செம்மைப்படுத்துந் தன்மையின. நமது நாட்டிற்கே பெரும் நன்மையை விளைக்கத்தக்க இம்முறைகளை முன்னுள்ள அறி ஞர் வெளியிட்டுச் சொல்லாது மறைத்து வைத்திருந்தனர். கருணைக் கடலாகிய விவேகாநந்த சுவாமிகள் அனைவரும் அறிந்து பயனடையும் வண்ணம் வெளிப்படையாகச் சொல் லத்தக்க அநுட்டான முறைகள் பலவற்றை மிகவும் தெளி வாகச் சொல்லியருளினர். அவற்றுள் தேகாரோக்கியம், காரிய சித்தி, சொல்வன்மை, அறிவு நிறைவு, முகவசீகரம், பிறர் மனத்து உற்றதறிதல் என்னும் இவற்றை யடைதற்கு வேண் டிய அநுட்டான முறைகள் சிலவற்றை "விஜய" நேயர் பொருட்டுப் "பத்திராசிரியர் குறிப்புக்கள்" ஆகத் தொடர்ந்து எழுதி வருங் கருத்து உடையேம். சொல்லவேண்டிய பொருளைக் கூடிய அளவு மிகத் தெளிவாகச் சொல்லுவோம்; அப்பியாச வழிகளையும் விரித்துக் கூறுவோம்.

பிராணயாமம்

யோகம் என்ற பெயர் கேட்டவுடனே நாசித் துவாரத்துக் கும் அதற்கும் சம்பந்த மிருப்பதாகச் சாதாரண ஜனங்கள் நினைப்பதுண்டு. அங்ஙனம் நினைப்பது அறியாமையின் பாலதாகும். பிராணயாமம் யோகத்தில் ஒரு படி. இனி

மூச்சைப் பிடிப்பது மாத்திரந்தானே பிராணுயாமம் எனப்படுவது என்ருல் அதுவுமில்லை. நாசித் துவாரத்தின் வழியாக அசைகின்ற பிராணனைப் பற்றிஞற் சூட்சுமப் பிராணனை இலகுவாகப் பற்றுதல் கூடும். ஆதலினுல் சுவாசத்தைச் சுத்தி செய்வதற்கு வேண்டிய முறைகள் கூறப்பட்டன. பிராண சக்தியினியல்பை யறிந்து அதனைச் சிதற வொட்டாது பாதுகாத்தலே உண்மைப் பிராணுயாமமாகும். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அகக்கரணங்களின் இயல்பினையும் இவற்ருல் இயக்கப்படுகிற புறக்கரணங்களின் இயல்பினையும் அகக்கரணங்களுக்கும் புறக்கரணங்களுக்கும் இடையேயுள்ள சம்பந்தத்தையும் அறிந்து கொண்டவன் பிராண சக்தியைச் சிதறவிடாது பாதுகாக்கும் முறைகளை அறிந்து கொள்ளுதல் கூடும். இருட்டில் ஒரு பொருளைத் தேடுவதினும் பார்க்க விளக்கொன்றைக் கையிலெடுத்துக் கொண்டு தேடுதல் சிறந்த முறையாகும். அறிவுக்கு வாயிலாக ஏற்பட்ட மெய், வாய், கண், மூக்கு, செவி, மனம் என்னும் இவை சுத்தமாக விருப்பின் அவற்றின் வாயிலாக உட்செல்லும் அறிவொளியானது, நாம் விரும்பிய பொருளைக் கண்டடைதற்குப் பேருதவியாக இருக்குமாதலால், இம்மை, மறுமைப் பயன் கருதினேர் இவ்வாறு வாயிலையும் சுத்தப்படுத்துதல் வேண்டும். இவற்றின் வழியாக உட்புகும் அறிவென்னும் விளக்கும் பிரகாசிக்கத் தொடங்குமாயின், ஏனைய சித்திகளெல்லாம் எளிதிற் கைகூடுவன. பஞ்சபுலன்கள் அடங்கிய வழி அகக் கரணங்கள் அடங்குவவாதலாலும், அகக் கரணங்கள் அடங்கி நிற்பின் பிராண சக்தி சிதருது உண்ணின்று செயற்கருஞ் செயல்களை செய்யுமாதலாலும் புலன்களையும் மனத்தையுஞ் சுத்தி செய்தற்குரிய சாதனைகளே யோகாப்பியாசங்கள் அனைத்தினுக்கும் ஆதாரமாவன என்பது வெளிப்படை.

## ஐம்புலன்களைச் சுத்தப்படுத்துதல் :

இச்சாதனைகள் எவையென ஆராய்வோம் உடம்பின் மேற்ருேல் பரிசத்தை யுணர்வதற்கு இயைந்த கருவியாகும். கண்ணினையிழந்த குருடர் உயர்த்தியச்சிடப்பட்ட எழுத்துக்களைக் கையினுற்றடவி வாசிப்பர். பரிசவுணர்ச்சி அவர்களுக்குக் கண்ணைப்போன்று பயன்படுகின்றது. நன்கு பயிற்றப்பட்ட பரிசவுணர்ச்சி அறிவுக்குச் சிறந்ததொரு

1973 FEB 24



வாயிலாகும். கல்லையும் நெல்லையுங்கலந்து முதுகிலெறிந்தால் அட்டாவதானச் சித்தி பெற்றோர் தமது பரிசவுணர்ச்சியின் வன்மையினாலே இத்தனை கல் இத்தனை நெல் என்று சொல்லுவார்களாம். பரிச வுணர்ச்சியைச் சுத்தமாக வைத்திருப்பதற்குத் தினம் ஒரு முறையாவது உடலினை வெந்நீரினாலேனும் தண்ணீரினாலேனும் அழுக்கறக் கழுவித்தோய்த்துலர்ந்த வஸ்திரத்தினால் நன்றாகத் துடைத்தல் வேண்டும். பனி, குளிர், காற்று, காலை வெயில் என்னும் இவை உடம்பிற் படுதல் நன்றல்ல; அவசரமற்றுப் பிறர் உடலைத் தீண்டுதல் கூடாது. மலசலத்தை அடக்குதல் கூடாது. உடையைச் சுத்தமாக வைத்திருக்கவேண்டும். புறத்தே போகும்பொழுது பாதரக்ஷை யிட்டுக் கொள்ளுதல் வேண்டும். திருக்கோயிலுக்குச் சென்று வழிபடுவதினாற் காயம் பரிசுத்தமடையும். சுவையுணர்வினைச் சுத்தப்படுத்துவதற்கும் தேகத்தைச் சுகமான நிலையில் வைத்திருப்பதற்கும் மிகக் காரமான புளி, மிளகாய், புகையிலை யாதியவற்றை முற்றிலும் நீக்குதல் வேண்டும். நன்றாகப் பசியெடுத்த பின்பன்றி யுண்ணுதல் கூடாது. "மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றியுணின்," என்னும் திருவள்ளுவ நாயனார் திருவாக்கைக் கடைப்பிடித்து ஒழுகுதல் வேண்டும். "சுவையிச்சை யடங்கக் காமவிழைவு அடங்கும்" என்பது பெரியாருரை. ஆதலால் பிரம்மசரிய விரதம் மேற்கொண்டு ஒழுகுவோர் சத்துவவுணவை யளவறிந்து உண்ணுதல் வேண்டும். உணவு வகையைப் பற்றிச் சிதம்பரம், இராமலிங்கசுவாமிகள் கூறிய சில குறிப்புகளை இங்குத் தருகின்றோம். "பழைய கறிகளைக் கொள்ளாதிருத்தல் வேண்டும். பதார்த்தங்களில் புளி, மிளகாய், சிறிதே சேர்க்க வேண்டும். மிளகு சீரகம் அதிகமாகச் சேர்க்கவேண்டும். கடுகு சேர்ப்பது அவசியமல்ல. உப்புக் குறைவாகவே சேர்த்துக் கொள்ளல்வேண்டும். அன்றி எந்த வகையிலும் உப்பு மிகுதியாகக் கொள்ளாமல் உபாயமாகக் கொள்ளுவது தேகம் நீடிப்பதற்கு ஏதுவாகும். தாளிப்பில் பசு வெண்ணெய் நேரிட்டால் தாளிக்கவேண்டும். நேராத பக்ஷத்தில் நல்லெண்ணெய் சிறிது சேர்க்கவுங் கூடும். வெங்காயம், வெள்ளைப்பூண்டு சிறிதே சேர்க்கவேண்டும். கத்தரிக்காய், வாழைக்காய், அவரைக்காய், முருங்கைக்காய், பீர்க்கங்காய், கலியாணப் பூசுணைக்காய், புடலங்காய், தூதுளங்காய், கொத்தவரைக்காய் இவைகள் பதார்த்தஞ்

6

செய்தல் கூடும். இவற்றினுள் முருங்கை, கத்தரி, தூதுளை பேயன் வாழைக்காய், இவைகள் அடுத்தடுத்துக் கறி செய்து கொள்ளலாம். மற்றவைகள் ஏகதேசத்தில் செய்து கொள்ள லாம். வடை, அதிரஸம், தோசை, மோதகம், முதலிய அப்ப வர்க்கங்கள் கொள்ளப்படாது. ஏகதேசத்திற் சிறிது கொள் ளவுங்கூடும். சர்க்கரைப் பொங்கல், ததியோதனம் புளிச்சாத முதலிய சித்திரான்னங்கள் கொள்ளப்படாது. ஏகதேசத்தில் சிறிது கொள்ளலாம். புளியாரைத் துவையல் தினந்தோறும் கிடைக்கினும் மிகவும் நன்று. கரிசலாங் கண்ணிக்கீரை, தூதுளைக்கீரை, முன்னைக்கீரை, பசலைக்கீரை, முருங்கக்கீரை, இவைகளைப் பருப்போடு சேர்த்தும் மிளகோடு சேர்த்தும், புளி யிட்டும், தனித்தும் கறிசெய்து கொள்ளக்கூடும். மற்றைக் கீரைகள் ஏகதேசத்தில் நேரில் சிறிது கொள்ளக்கூடும். புளித்ததயிர் சேர்த்தல் கூடும். பருப்பு வகைகளில் முளைக்கட் டாத துவரம் பருப்பு அல்லது முளைக்கட்டின துவரம் பருப்பு மிளகு சேர்த்துக் கடைதல, துவட்டல், துவையல் செய்தல், குழம்பிடல், வேறென்றிற் கூட்டல் முதலியனவாகச் செய்து நெய் சேர்த்துக் கொள்ளுதல் கூடும். அந்த நெய்யை மிகவுஞ் சேர்க்கப்படாது. மற்றப் பருப்பு வகைகள் அவசியமல்ல. ஏகதேசத்தில் நேர்ந்தால் கொள்ளவுங் கூடும். கிழங்கு வகைகள் உண்ணுமலிருத்தல் வேண்டும். அவற்றில் கருணைக் கிழங்கு மாத்திரம் கொள்ளுதல் கூடும். பழவகைகள் உண்ணுதிருத்தல் வேண்டும். அவற்றில் பேயன் வாழைப் பழம், ரஸ்தாளி வாழைப்பழம் இவை நேர்ந்தால் சிறிது கொள்ளுதல் கூடும். போஜனஞ் செய்த பின்னர் நல்ல நீர் குடித்தல் வேண்டும். அந்த நல்ல நீரும் வெந்நீராதல் வேண்டும்."

கண்ணுணர்வினைச் சுத்தமாக வைத்திருப்பதற்கு வைக றையிற்றுயிலெழுதல், காலை ஸ்நானம் என்னும் இவை தவரு திருத்தல் வேண்டும். மின்சார விளக்குப் போன்ற கடும் ஒளிகளையுற்றுப் பார்த்தல்கூடாது. பச்சென்றிருக்குஞ் சோலை களையும் மலர்களையும், கடலையும் தூரத்திலுள்ள பொருட் களையும் கூர்ந்து நோக்குதல் வேண்டும். பகவானுடைய திவ்விய மங்கள விக்கிரத்தைப் பார்ப்பதனுல் கண் பரிசுத்த மடையும். பிறர் பொருளை இச்சையோடு நோக்குதல் கூடாது. காமஙினைவோடு பெண்களைப் பார்த்தல் கண்ணின் வழியாகப்

பிராணசக்தி சிதறுண்டு போம். சினிமாப் படங்களைப் பார்ப்பதனுற் கண்ணுக்கும் மனத்துக்குங் கேடுண்டாகும்.

நாசியுணர்வினைச் சுத்தமாக வைத்திருப்பதற்குச் சில சுவாசாப்பியாச முறைகள் பெரிதும் பயன்படுவன. இவற்றைப் பின்னர்க் கூறுவாம். தீ நாற்றத்தை யகற்றுதலும், நறுமணத்தை மிதமறிந்து உபயோகித்தலும் பொதுவாகக் கைக்கொள்ளவேண்டுவன. செவியுணர்வினைக் கூர்மைப்படுத்துவதற்கு மனத்தை யொருவழிப்படுத்தி ஏனைய புலன்களை யடக்கிச் செவிவாயிலாக வருகிற ஓசையைக் கூர்ந்து கேட்க வேண்டும். ஏகாக்கிர சித்தத்தைப் பற்றிச் சொல்லுமிடத்து இவ்விஷயத்தை விரிவாக ஆராய்வோம். இறைவனுடைய புகழைக் கூறும் தோத்திரப் பாக்களைக் கேட்பதனுல் செவியுணர்வு பரிசுத்தமடையும்.

"முவுலகு மீரடியான் முறை நிரம்பா வகை முடியத்
தாவிய சேவடி சேப்பத் தம்பியொடுங்கான் போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே."

கரும்பும், வேம்பும் ஒரு நிலத்தில் நின்றுலும் கரும்பு இனிமையைக் கவருகின்றது. வேம்பு கசப்பினைக் கவருகின்றது. ஒருவர் கூறுகிற வார்த்தைகளில் நன்மையுந் தீமையுமிருக்கும்; நன்மையைப் பற்றிக்கொண்டு தீமையையகற்றி விடுதலே செவியுணர்வின் தொழிலாக விருத்தல் வேண்டும். இனிக் கல்வி, கேள்வி யில்லாதார் கண்ணிருந்துங் கண்ணுடையரல்லர் காதிருந்துங் காதுடையரல்லர் எனத் திருவள்ளுவநாயனுர் கூறுகிறுர்.

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்."

"கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற்
றோட்கப் படாத செவி."

ஆதலால் கல்வி கேள்வியை விருத்தி செய்து கொள்ளுதல் வேண்டும். மனம், வாக்கு, காயம் என்று மூன்றினையுஞ் சுத்தி செய்யும் முறையே பிரம்மசரிய விரதம் எனப்படுவது.

பிரம்மசரியங்கைகூட மெய்யுணர்வு தானே வந்தெய்தும். காய சுத்தியின் ஒரு பாலாகிய பஞ்சபுலன்களின் சுத்தியைப்பற்றி இதுவரையும் கூறினும். வாக்கினைச் சுத்திப்படுத்தும் வழி களைக் கூறி அதன் பின் மானச தத்துவங்களை விரிவாக ஆராய் வோம். இப்பொழுது பிரம்சரியத்தைப்பற்றி மகாத்மா காந்தி யடிகள் கூறியிருக்கிற சில குறிப்புக்களைச் சொல்லி முடிப்பாம். "பிரம்மசரியம் என்பது பிரம்மத்தை நேரில் கண்டடைவது எனப் பொருள் படும். பிரம்மம் எல்லோருடைய உள்ளத் திலும் நிறைந்திருக்கிறது. இந்திரியங்களைப் புறத்தே போகாது தடுத்து உண்ணோக்குவதாலே மெய்யறிவு விளங்கும். இம் மெய்யறிவு பிரம்மத்தையடைவிக்கும். ஐம்புலன்களையடக்கினுலன்றி மனம் உண்ணோக்கிய தியான நிலையில் நிற்கமாட்டாது. இந்த நிலை மனம், உடல், தொழில் என்னும் இவற்றைக் கருவியாகக் கொண்டு அடையத் தக்கது. இந்த நிலை யடையக் கூடிய நிலை என்பதற்குச் சிறி தேனும் ஐயமில்லை. இதனை யடைவதற்குத்தான் நான் இரவு பகலாக ஓய்வின்றி முயற்சிக்கிறேன். இப்பொழுது எனக்குக் கிடைத்திருக்கிற இந்த சரீரத்துடனே இந்த நிலையை யடை வேன் என நான் முற்றுக நம்புகிறேன். நான் என் தேகத்தை என் சித்தத்தின் கட்டளைக்கு அமைந்து நிற்கும்படி பயிற்றிக் கொண்டேன். ஜாக்கிர நிலையில் வாக்கும் என் கட்டளைக்கு அமைந்து நிற்கிறது. மனத்தை இன்னும் முற்றுக அடக்கிக் கொள்ளவில்லை. ஒரு விஷயத்தைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கும் பொழுது வேறு பல எண்ணங்களும் வந்து புகுந்து கொள்ளுகின்றன. இதனுல் ஒன்றிேனுடொன்று மாறுபட்ட எண்ணங்களும் வந்து விடுகின்றன. ஜாக்கிர நிலையில் மனதிலுதிக்கும் எண்ணங்களை ஓர் அளவுக்கு முறையாக உதிக்கும்படி செய்து கொள்ளுகிறேன். கனவு நிலையில் பல எண்ணங்களும் ஒருங்கு குவிந்து கொள்ளுகின் றன. பல ஆண்டுகளுக்கு முன் உடலுக்குத் துன்பம் விளைத்த செய்திகள் கனவு நிலையிற்றேன்றுவது என் மனம் இன்னும் முற்றுக அடங்கவில்லை என்பதைக் காட்டுகின்றது. மனம் சுகஸ்திதியிலிருந்தால் உடல் சுகஸ்திதியிலிருக்கும் என்பதை நான் முற்றுக நம்புகிறேன். ஆன்மா சாந்த நிலையிலிருப்பின் தேகமும் ஆரோக்கியத்தை யடையும், உடல் தசை மிகுந்துப் பலப்படுமென்பது கருத்தல்ல. அபார சக்தியுள்ள ஆன்மா பல மற்ற தேகத்தில் வாழும். ஆன்ம சக்தியதிகரிக்கத் தேகசக்தி

குறைவதுண்டு. பூர்வசமஸ்காரங்களை நீக்கிக்கொள்ளுதல் எளிதல்ல. பூரணசாந்த நிலை சீக்கிரத்தில் வந்துவிடவில்லையே யென்றெண்ணி நான் மனச்சோர்வடைவதில்லை. ' என் எண்ணங்கள் சித்தியடையுமுன் இறந்துவிட நேரிடினும் முயற்சி வீணுய்ப்போய் விட்டதேயென்று நான் ஒரு பொழுதுங் கருத மாட்டேன். மறு பிறப்பில் எனக்குப் பூரண நம்பிக்கையுண்டு. முயற்சி வீண்போகாதென்பதை நான் நன்ருக அறிவேன். நா அடங்கக் காம விழைவு அடங்கும். ஆதலால் சுவையுணர்வை நமது கட்டளைக்கடங்கி நடக்கும்படி செய்யவேண்டும். தேக சுகத்தை யிழந்தவர்களுடைய மன் திற் காமமதிகரிக்கும். நான் சொல்லுவதைச் சற்று ஆராய்வாக நோக்கவேண்டும். தேக பலத்தைத் தேடுவதும் காப்பாற்றுவதும் தகாத செயலென்று நான் சொல்லவில்லை. ஐம்புலன்களை யடக்குவதற்கு ராம நாமத்தையுச்சரிப்பது ஒரு சிறந்த வழியாகும். வாயினுல் மாத்திரம் உச்சரிப்பதிற் பயனில்லை. திருநாமமானது மனத்திலழுந்திக் கிடக்கவேண்டும். அறிவு முழுமையும் திருநாமத்தைப்பற்றி நிற்கவேண்டும்; தீய எண்ணங்களை யொழிப்பதையே ஒரு தனி நோக்கமாகக்கொள்ளவேண்டும்". இவை காந்தியடிகள் "நவஜீவன்" என்னும் பத்திரிகையிலெழுதிய அரிய மொழிகள்.

# 9

# அருநிதியம் விலைசரசம்*

ஒரு நாட்காலையில் இள ஞாயிற்றின் மெல்லென்ற வெய்யில் உடலிற் படியத் தமிழ்க் கல்வியின் அபிவிருத்திக்காக என்ன என்ன முயற்சி செய்தல் வேண்டும் என்னும் எண்ணம் உள்ளத்திற் படியத் தெருத்திண்ணையில் உட்கார்ந்து கொண்டு அவ்வழியே வருவாரையும் போவாரையும் பார்த்துக்கொண்டிருந்தேன். அத் தருணத்தில், புத்தகம் விற்போனொருவன் "புத்தகம், புத்தகம், புத்தகம் வாங்கலையோ புத்தகம்" என்று கூவிக்கொண்டு வீதிவழியே போனான். "ஏ புத்தகக்காரா! இங்குவா, என்ன புத்தகம் உண்டு? காட்டு பார்ப்போம்" என்று சொல்லுதலும் புத்தகக்காரன் உள்ளே நுழைந்து தோளிலிருந்த சுமையை இறக்கிவைத்து, "ஐயாவுக்கு, என்ன புத்தகம் வேண்டியது; நல்ல புத்தகம் எல்லாம் இருக்குது. திருப்புகழ் வேணுமா? காவடிச்சிந்து வேணுமா? முத்துத்தாண்டவர் பதம் இருக்குது, பட்டினத்தார் பாடல் இருக்குது, தாயுமான சுவாமி பாடல் இருக்குது, இராமலிங்க சுவாமி பாடற்றிரட்டு இருககுது, மூவர் தேவாரத்திரட்டு இருக்குது. நந்தனார் சரித்திரக்கீர்த்தனையிருக்குது. நாடகத்தினுசு வேணுமானாற் பந்தயங்கூறிய கந்தவேள் சரிதையிருக்குது, பார்சி அல்லி அர்ஜுனா இருக்குது. இன்னும் எத்தனையோ இருக்குது. நாவல்ஸ் இருக்குது. வைத்தியப் புத்தகமும் சோதிடப் புத்தகமும் இருக்குது." என்று முடித்தான் "நல்லது, எனக்கு நாவல்ஸ், நாடகம் வேண்டாம், தோத்திரப் புத்தககங்களை எடுத்துக்காட்டு" என்றேன். "காலையிலே முதன்முதல் வியாபாரம் ஐயாவிடத்திலே தான் ஆகப்போகுது, நல்ல சரசமான விலைக்குத் தருகிறேன். இது மூன்றணா, இது இரண்டணா, இது நாலணா என்று ஒவ்வொன்றாகக் காட்டினான். பெறற்கரும் பொருளாகிய இவ்வருநிதியங்களைக் குறைந்த விலைக்குப் பெறக்கூடியதாயிருக்கிறதேயென்று

---

* ஸ்ரீ இராம கிருஷ்ண விஜயம்

மனமகிழ்ச்சியோடு ஒரு சில புத்தகங்களை வாங்கிக்கொண்டு, "நீ யெத்தனை வருஷமாகப் புத்தகம் விற்கிறாய்?" என்று கேட்டேன். "ஏழெட்டு வருஷமாக இதுதான் பிழைப்பு, ஐயா," என்றான். "நல்லது, உனக்கு ஒரு நாளைக்கு என்ன லாபம் வரும்?" என்றேன் "பொதுவாக நாலணா, ஐந்தணா வரும், சில வேளை எட்டணா பத்தணா வரும்" என்றான். சிறிது நேரங்கழித்து, "நான் போய்வரட்டுமா, சாமி" என்றான். "போய் வா; கடவுள் உன்னை ஆசீர்வதிப்பாராக. நீ செய்து வருகிற தொழிலைக் கைவிடாதே" என்றேன். அவனும் போய் விட்டான். பண்டிதர்கள் வித்துவான்கள் செய்கிற முயற்சியினும் பார்க்க இந்த ஏழைப் புத்தகக்காரன் தமிழுக்காகச் செய்து வருகிற கைங்கர்யம் பெரிது என்பது எனக்கு நன்றாகப் புலப்பட்டது. வீடு வீடாகப் போய் வறுமையால் வருந்துகிற நமது சகோதர சகோதரிகள் தமது இயல்புக்குட்பட்ட சிறு பொருள் கொடுத்துப் பெற்று வாசிக்கும்படி அருநிதியமாகிய பெரியோரது கருத்துக்களடங்கிய புத்தகங்களைக் கொடுத்து வருகிறானே, இவன் செய்யும் தொழிலல்லோ தொழில் என்று எனக்குள்ளே நினைத்தேன். கற்றோர்க்கு இதந்தரும் நூலெழுதுவதினும் பார்க்க அனைவர்க்கும் பயனளிக்கும் அருள் வாக்குகளைக் கொண்டு சென்று கொடுப்பது சிறந்த தொழில் எனக் கண்டேன்.

## நூலறிவோ? நுண்ணறிவோ?

கற்று வல்லோரும் பல வகையர். கம்பராமாயணம், திருவிளையாடற் புராணம், வில்லிபாரதம் என்றின்னோரன்ன நூல்களைப் படித்த வித்துவான்கள் இருக்கிறார்கள். இவற்றினும் உயர்வாகக் கருதப்படுகிற சங்கநூல்கள், சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் இன்னோரன்னவற்றை ஐயந்திரிபறப்படித்த பண்டிதர்களும் இருக்கிறார்கள். மேற்குறித்த நூல்களின் பெயர் தானும் செவிப்படாதவராய்த் தாயுமான சுவாமிகள் பாடல், பட்டினத்தார் பாடல், ஞானக்கோவை, அருட்பா, குமரேசதகம், திருப்புகழ், முத்துத்தாண்டவர் பதம் என்று இன்னோரன்ன நூல்களைப் படித்தவர்களும் இருக்கிறார்கள். முத்திறப்பட்ட இவர்களுள்ளே யார் பெரியர், யார் சிறியர் என்று விசாரிக்கும் பொழுது "நூலளவே யாகுமாம் நுண்ணறிவு" என்று சொல்வோமாயினும் மூன்றாவது வகையிற் சொன்ன நூல்கள்

முதலிரண்டு வகையிலுள்ள நூல்களைப்போலவே சிறந்தன வாதலால் ஏற்றத் தாழ்ச்சி சொல்லுதல் இயலாது என்போம். புத்தக சாலையிலுள்ள நூற்றுக்கணக்கான புத்தகங்களை வாசித்து முடித்துங் குங்குமஞ் சுமந்த கழுதை போல ஒரு பயனும் பெருது அலைகிற கற்றறி மூடருமுளர். தமது கைக்குக் கிட்டிய நான்கு ஐந்து புத்தகங்களை நன்ருகப்படித்து அவற்றின் வழி நின்று இம்மை மறுமைப் பயனை யடைகிற புத்திமான்களும் உளர். கற்றுவல்ல மூடரினுங் கல்லா அறிஞரே சிறந்தவரென்பது வெளிப்படை. ஆதலால், முற்கூறிய புத்தகக்காரனிடம் சிறு விலைக்குப் பெறக்கூடிய அரிய நூல்கள் ஒரு சிலவற்றைத் தெளிவுறப்படித்து இம்மை மறுமைப்பயனை யடைதல் கூடும் என்பதும், கல்வியை யீட்டிக் கொள்வதற்குச் செல்வப் பொருளின்மை தடையாகா தென்பதும் புலப்படுகிறது.

## உப்புக்கொருபாட்டு புளிக்கொரு கவி

நமது நாட்டில் எழுத வாசிக்கத் தெரியாத பெண்பாலார் பலரிருக்கிருர்கள், ஆடவரும் பலரிருக்கிருர்கள். இவர்களுக்கு அறிவமுதம் ஊட்டி வைத்தல் எவ்வாருகும்? நமது புத்தகக் காரனுடைய சிறந்த கைங்கரியந்தானும் இவர்க்குப் பயன்ற ராதே யென்று ஆலோசிப்போமாயின் இதற்கும் ஒரு வழி யுண்டு என்பது புலப்படும். கற்றலைப் போலவே கேட்டலுஞ் சிறப்புடையது. முன்னுளில் ஒளவைப் பிராட்டியார் உலகி லிருக்கும்போது ஏழைகளளித்த கூழமுதத்தையுண்டு அவர்களுக்கு அறிவமுதத்தை யூட்டிவைத்தாரல்லவா? உப்புக்கொரு பாட்டும் புளிக்கொரு கவியுஞ் சொன்ன எம் மன்னை அரண்மனையில் வாழும் மன்னரையும் குடிசையில் வாழும் ஏழைகளையும் ஒன்ருக மதித்து நடத்திஞளல்லவா? பிராட்டியார் சென்ற விடமெங்கும் அறிவும் பின்ருெடர்ந்து சென்றது. ஒளவையார் செய்த கைங்கரியத்தைச் செய்வதற்கு அறிவானும் வயதானும் முதிர்ந்த அன்னைமார் பலர் முற்பட்டு வருதல் கூடாதா? அந்நாளிலிருந்த ஏழைகளைப் போலவே இந்நாளிலுள்ள ஏழைகளும் கூழமுதமும் உப்பும் புளியுங் கொடுக்கத் தயாராயிருக்கிருர்கள்.

## புராண படனம்

பாகவதம், திருவிளையாடல் ஆதிய புராணங்களிலுள்ள சிறந்த கதைகளைப் பக்கவாத்திய சகிதமாகச் சொல்லுகிற

பாகவதர்களும் செய்யுளைப்படித்து அதன் அர்த்தத்தை இலகுவான நடையிற் சொல்லுகிற பௌராணிகர்களும் அறிவு விருத்திக்கு முயற்சி செய்கிறவர்களாவார்கள். நைமிசவனத்திலே சூதமாமுனிவர் அச்சியந்திரம் ஏற்படுத்திப் பதினெண் புராணங்களையும் அச்சிட்டுப் பரப்பினுரோவென்ருல், இல்லை. சத்தியவதி புத்திரராகிய வியாசபகவானிடத்துங் தாங்கேட்டுணர்ந்தவாறே சௌனகாதி முனிவருக்கு வாய் மொழியாகச் சொன்னுர். இதுவே புராணம் நடந்துவருகிற வரலாறு. ஆதலினுல் இந்நாளிலும் ஆன்மலாபத்தைத் தருகிற புராண கதைகளைக் கற்றலிலும் பார்க்கக் கேட்டலே சிறப்புடையது.

தெவிட்டாத தெள்ளமுதம்

"கற்றில னுயினுங் கேட்கவஃ தொருவற்
கொற்கத்தி னூற்ருந் துணை."

அன்பின் வழித்தாய உள்ளமுருகி மெய்மறந்து தம் வயமற்று நின்ற நிலையிற் பக்திமான்கள் இறைவன் மீது பாடிய இசைப்பாட்டுகள் கன்மனதையுங் கரைத்து கடவுள் பாற் செலுத்த வல்லன. இவ்விசைப் பாட்டுகளைப் பண்ணுேடு படிக்கவேண்டும். பண்ணுேடு படிக்க கேட்க வேண்டும். தேவாரம், திருவாய்மொழி என்றின்னேரன்ன தெய்வ வாசகங்கள் துன்புற்ற மனத்துக்குச் சுகத்தையளித்தலானும் அந்தமிலின்பத்தழியா வீட்டினைத் தருதலானும் தேவருலகத் தெள்ளமுதத்தை நிகர்ப்பன. உள்ளமெனுங்கூடத்திலூக்கமெனுந் தறி நிறுவி அன்பான நாரினுல் இறைவனைப் பிணித்து வைப்பின் அவன் தனது கருணையையளிப்பான். வீடுபேற்றினை யடைவதற்குப் பலவழிகளிருப்பினும் அன்பு நெறியைப் போலச் சிறந்த வழியை யாமறியோம். பக்திரசம் பொருந்திய பாட்டுகளைப் படித்தலும் படிக்கக் கேட்டலும் அன்பு நெறியில் உள்ளத்தைச் செலுத்துவதற்குரிய மார்க்கங்களாம். இம்மை மறுமைப் பயனையடைய விரும்புவோர் கல்வி கற்கவில்லையே யென்று வருந்துதல் வேண்டா. அறிவுடையோரிடத்துச் சென்று அன்பருரையாகிய அமிழ்தத்தைச் செவிமடுப்பாராயின் பூவுலகத்தைத் தேவருலகாக்கித் தம்மையும் புலவர் (தேவர்) ஆக்கிக் கொள்வர்.

நன்னெறிதவருத நாடக வியல்பு

மேலைத் தேசத்தில் புராண படனம், ஹரிகதாகால க்ஷேபம், தேவாரபாராயணம் இவை முதலிய நன்னெறி

மார்க்கங்களில்லை. ஆதலால் அங்குள்ள தொழிலாளர் தம் ஓய்வு நேரத்தைப் பயன்படக் கழிப்பதற்கு நாடக மேடையையும் சினிமாக் காட்சியையும் நாடிச் செல்வர். சிற்றளவாக உண்ட பொழுது சுகத்தைத் தருகிற மருந்தினைக் கவளங் கவளமாக உண்டால் அம் மருந்தே நஞ்சாவதுபோல நாடக மேடை முதலியன பொதுவாக நஞ்சாய் முடிகின்றன. ஆதலால் புராணபடனம், ஹரிகதை முதலிய சற்காலக்ஷேபங்களுள்ள நமது நாட்டில் நாடக மேடையும் சினிமாக் காட்சியும் வேண்டவே வேண்டாம். ஆனால் நன்னெறிதவறு நாடகங்களில்லையோ அவற்றைப்போய்ப் பார்த்தல் கூடாதோ வெனில் ஓர் ஆண்டில் ஒரு முறையோ அல்லது இருமுறையோ பார்ப்பதனால் தீமை நேரிடாது. "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு". இழிவுற்ற பாடல்களைப் பாடிக்கொண்டு பெண்களும் ஆண்களும் ஒருங்கு தோற்றி மானங்கடந்த சல்லாப மொழிகளைப் பேசுகிற நாடக மேடை தூயநெறி நின்றோருடைய உள்ளத்தையுங் கலைத்துத் தீயநெறியிற் செலுத்துவது. ஆதலினால் அதை முற்றுங் தவிர்ப்பதே முறை.

## கல்வியும் வறுமையும்

மேலைத் தேசத்தில் வறுமையும் தீயவொழுக்கமும் உடனுறைவன. அங்குள்ள வறியோருக்கு ஸ்நானஞ் செய்ய நீரும், வஸ்திரங்களைத் தோய்த்துலர்த்த இடமுமில்லாமையால் உடற் சுத்தமில்லாதிருப்பார்கள். அகப்பட்ட போசனத்தை யுண்பார்கள்; ஆலயத்துக்குப் போய்க் கடவுளை வணங்கமாட்டார்கள். இவற்றால் அவர்களுடைய சீவியமே பாழடைந்து போகிறது. நம்முடைய புண்ணிய பூமியிலோவென்றால் ஏரி, குளம், ஆறு முதலியன எங்கு முண்டு, தேவாலய மெங்கு முண்டு, ஹரிகதையும் புராணபடனமும், தேவாரபாராயணமும் எங்கு முள்ளன. இறைவனுடைய திருநாமத்தைச் சதா தியானித்துக் கொண்டிருக்கிற பெரியோர்கள் எங்கு முள்ளார்கள். நன்னெறி நிறுத்தும் நூல்களை நான்கணு, மூன்றணுவுக்குப் பெறுதல் கூடும். ஆதலால் இப் புண்ணிய பூமியிற் பொருட் செல்வத்தைத் தேடாத மாந்தரே அருட் செல்வத்துக்கும் கல்விச் செல்வத்துக்கும் உரியவராகிறார்கள்.

# 10

# மாதவர் நோன்பும், மடவார் கற்பும், மன்னவர் நீதியும்*

தவநெறி நிற்கும் துறவற முதல்வரும், கற்பு நெறி வழுவா மங்கை நல்லாரும், நீதி நெறி வழுவா அரசியலாளரும் கடைப்பிடித்து ஒழுகிவரும் ஒழுக்கம் வேறுபடத் தோன்றி னும் ஒரு வகையால் நன்று பட்டனவாமென அறிஞர் ஒருவர் "தமிழ்" என்னும் மாதப் பத்திரிகையில் நன்கு விளக்குகின் ருர். ஆராய்ந்து பார்க்கு மிடத்து மேற் கூறப்பட்ட மூவர் மாத்திரமல்ல, உலகிலுள்ள அனைவரும் தத்தஞ்சுவதர்மத் தின் வழிநிற்றலால் உலகிற்கு நன்மை விளைப்பவராவர். "சுவதர்மம்" என்னும் சொல்லினுற் பெறப்படுவதெதுவென ஆராய்வாம். இச் சொல்லினுடைய கருத்தை முற்ருகக் கொண்ட தமிழ்ச் சொல் இல்லையாதலால் வட சொல்லையே யுபயோகிப்போம். முதலிலே இன்னுர்க்கிது சுவதர்மம் எனச் சில உதாரணங்களை யெடுத்தாராயுங்கால் எட்டிக் கனிக்கு கசப்பும், இளந் தென்றலுக்கு மெல்லென்று வீசலும் இயல்பா யிருப்பது போல, மாதவர்க்கு நோன்பும், மடவார்க்குக் கற் பொழுக்கமும், மன்னவர்க்கு நீதியும் இயல்பாக அமைந்திருப் பன. கசப்பில்லாக்கனி எட்டியெனப்படாது; விரைந்து வீசுங் காற்று சண்டமாருதமேயன்றி மந்தமாருதமாகாது. நோன் பில்லா விரதி படிறெனனப் படுவானேயன்றி விரதி யெனப் படான், கற்பில்லா மாதர் பேய்கள் எனப்படுவாரேயன்றி மாத ரெனப்படார், நீதி வழுவிய இறை தூர்த்த னென்னப்படுவானே யன்றி முதல்வனெனப்படான். இங்ஙனமே இளை ஞற்குச் சுவதர்மம் அடக்க முடைமை, கற்று வல்லோருக்குச் சுவ தர்மம் சொல்வன்மை, வீரர்க்குச் சுவதர்மம் பிழை பொறுத் தல், இல்வாழ்வார்க்குச் சுவதர்மம் அன்புடைமை, குடிப்பிறந் தாருக்குச் சுவதர்மம் ஒழுக்க முடைமை, தேசத் தொண்டருக் குச் சுவதர்மம் உடற்சுகம் வெறுத்தல் என்று இவ்வாறு அறி

* ஸ்ரீ இராம கிருஷ்ண விஜயம்

யலாகும். தத்தம் சுவதர்மத்தில் நின்று வழுவினவர் தமது நிலையை யிழந்தவராவார். கீழாகிய நிலையில் நிற்பவருக்கும் இஃதொக்கும். உதாரணமாகக் கரவுவழியறியாக் கள்வனும் மேனிமினுக்கா விலைமகளும் தந்தொழிலைச் சீக்கிரத்தில் விட வேண்டியவராவார். ஆயினும் கள்வனது களவுத் தொழிலும் விலைமகளது இழிதொழிலும் பின்னர் வந்தேற்பட்ட தீக்குணங் களாதலால் இவற்றினின்று வழுவியது நன்மையாயிற்று. பிறந்த நாட்டொட்டே உலகிலுள்ள மக்களனைவருக்கும் ஏற் பட்ட தர்மமும் உண்டு. ஆண்களனைவருக்கு முரிய சுவதர் மம் ஆண்மை, பெண்கள் அனைவர்க்குமுரிய சுவதர்மம் பெண்மை. இவற்றுற் பெறப்படுவதெதுவெனச் சற்று விரி வாக ஆராய்வாம்,

ஆண்மையுடையவன் ஆண்; பெண்மையுடையவள் பெண். ஆண்மை ஆழுந்தன்மை; பெண்மை (பெட்பு), விரும்பப் படுந்தன்மை. மானம், வீரம், சொல்வன்மை, வாய்மை எனத்தலை மகனுக்குரியவென்று சொல்லப்பட்ட குணங்கள் யாவும் ஆழுந்தன்மையில் அடங்குவனவாம். இவற்றை யடையாதவன் ஆண் மகனுக்குரிய சுவதர்மத்தி னின்று வழுவினவனுவான். அத்தகையோனை ஆண் எனல் கூடாது. பேடியெனலே பொருத்தமாகும். நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்பன பெண்மையில் அடங்குவனவாம். இவற்றை யடையாதவள் பெண் எனற்குரிய சுவதர்மத்தி னின்று வழுவினவளாவாள். அழகெனப்படுவ மேற் சொன்ன நாற்குணங்களேயன்றி நீண்டு வளர்ந்த கூந்தலும் பொன் னிறமும் வாளா அழகெனப்படுவவல்ல. இனி ஆண்மை, பெண்மை யென்னும் தன்மைகள் ஆண்பாலார்க்கும் பெண் பாலார்க்கும் தொன்று தொட்ட சுவதர்மங்களாக அமைந்திருப் பன. இது பற்றிப் போலும் "வாயுள்ள ஆணைப் பெறு, வடி வுள்ள பெண்ணைப்பெறு" என்னும் பழமொழியும் எழுந்தது.

அறநெறியை நன்குணர்ந்த நம்முன்னோர் நால்வகை வரு ணமும், நால்வகை ஆசிரம நிலையும் வகுத்து, இன்னோர்க்கிது சுவதர்மம் என நிறுவியிருக்கின்றனர்கள். அவ்வவர்க்குரிய சுவதர்மத்தின் வழிநிற்றலே அவ்வவர்க்குப் பெருமை யாகும். அஃதொழித்து மேனுட்டார் கொள்கையைக் கடைப் பிடித்துப் பொருள் வருவாயை மாத்திரங் கருதித் தமக்குரித்

தாகாத் தொழிலைக் கைக்கொண்டு குலத்தொழில் வெறுப்பின் இரண்டொரு தலைமுறையில் இன்னல் வந்தெய்தும். உடம்பின் கண்ணே யமைந்திருக்கும் பலவகையுறுப்புகள் வேறு வேறு தொழிலைச் செய்து ஒன்றற் கொன்று உதவியாயிருத்தல் போலச் சன சமூகத்திலும் வேறு வேறு மக்கள் வேறு வேறு தொழிலைச் செய்வாரெனினும் அத்தொழில்வேறுபாட்டினுற் பெரியரெனவும் சிறியரெனவும் படார். உடன் முழுவதையும் தாங்கிச்செல்லும் காலை வாய் பார்த்து, "ஓய் காலரே! சேறும் புழுதியும் படத் தெருநீளம் அலைந்து நடக்கும் நீர் என்னேடொப்பிட்டுப் பார்க்கும்போது எம்மாத்திரம்? கீழ் மகனுகிய உம்மை நான் பொருட்படுத்துவேனே? ஞானேபதேசம் பண்ணுவதும் இறைவனைத் துதிப்பதும் தொழிலாகவுள்ள நான் மிகப் பெரியவ னன்றோ?" என்றது. இதைக் கேட்ட கால் கோபமுற்று, "ஓய் வாயரே! உம்முடைய சாமர்த்தியம் நன்று. கை தருகிற அறுசுவை யுண்டிகளை வெட்கமின்றி வாங்கி யுண்டு ஏப்ப மிடுகிறீரே, ஏழையாகிய நான் ஒரு நாளைக்குப் படுக்கையும் பாயுமாகக் கிடந்து விட்டால் உம்முடைய பல்லுக்குப் பச்சைத் தண்ணீருங் கிடையா தென்பதை மறந்து விட்டீரோ?" என்றது. இங்ஙனம் அமைந்தனவாம் நம்மவர்க் கிடையுலுள்ள சாதிச் சண்டை. நீதியாசனத்திலிருந்து நீதி செலுத்துவதும், போர் முகத்தினின்று யுத்தம் பண்ணுவதும், எவ்வளவு இன்றியமையாதனவாமோ, அவ்வளவு இன்றியமை யாதனவாம் இழிதொழிலென ஒரு சாராற் கருதப்படும் ஏனைய தொழில்களும். பிறருடைய அழுக்குத் துணியைத் தன்றலை மேற் சுமந்து சென்று வெளுத்துக் கொடுக்கும் வண்ணுன் எவ்வளவு சிறந்தவன் என்பதை யறிந்து கொள்வதற்கு நுண்ணிய ஆராய்ச்சி வேண்டுவதில்லை. தொழில் வேறுபாடும் சாதி வேறுபாடும் இருத்தல் அவசியமே. ஆனல் ஒரு சாராரை மற்றெரு சாரார் நெருங்கித் துன்புறுத்துவது அவசியமற்ற தொழிலே.

# 11

# பெரியோர் வாழ்க்கையும் அவரது திருநக்ஷத்திரங்களும்*

அறமோரு மறையாள ரகங்குளிர் ந்தின்
மொழியுரைப்ப வவனியாளும்
மறமேவு மரசர்குலம் வந்தெமது
சொற்கேட்டு வணங்கி நிற்ப
விறன்மேவ வியன்ஞாலம் விரைந்து
தொழில் புரிந்தேத்தும் விழுப்பமெய்தக்
குறன் மேவு நெடும்பனுவல் விரித்த
பெரு நாவலனைக் குறுகி வாழ்வாம்.

**மக்களியல்பு**

பெரியாருடைய வாழ்க்கையைப்பற்றி அறிய இயல்பாகவே நம்மெல்லோருக்கும் ஆவலுண்டு. அப்படி அவாவுண்டாவது இயற்கைதான். மனிதர் எப்பொழுதும் தனித்து வாழ்வதில்லை. கூட்டம் கூட்டமாகவே வாழ்கின்றனர். அப்படியிருப்பதால் அயலாருடைய வாழ்க்கை எவ்வெவ்வழிகளில் நம்முடைய வாழ்க்கையினின்று மாறுபடுகின்றது, எத்துறைகளில் நமதைப் போன்றுள்ளது என்று அறிய எண்ணமுண்டாகின்றது. மேலும் நாம் கண்ட ஒன்றை நாமறிந்த மற்றொன்றோடு ஒப்பிடுவது நம் இயற்கை; அதனுல் நாம் நம் நடத்தையைப் பிறருடைய நடத்தையைக் கண்டே பல வழியில் சீர்படுத்திக் கொள்கின்றோம்.

**சீரிய வாழ்க்கை**

நமக்குள்ளே இயற்கையாகவே இத்தகைய கூடி வாழுங் குணமும், ஒப்பிடுங்குணமும், சீர்திருத்தஞ் செய்து கொள்ளும் நேர்மையும் இருத்தலினுற்றான் நமக்குப் பிறமக்களுடைய

* ஸ்ரீ இராம கிருஷ்ண விஜயம்

செய்கைகளேயும் பேச்சையும் உள்ளக் கருத்துக்களேயும் அறிய ஆவலுண்டாகின்றது. சீரிய நடத்தையுள்ளோருடைய சீவியமே எல்லாராலும் போற்றப்படுமாதலால், சீரிய ஒழுக்கமுடையவர்களுடைய வாழ்க்கையைப் பற்றியே நாம் கல்வி கேள்விகளால் அறிந்து கொள்ளல் வேண்டும். அப்படிச் செய்வதால் நாமும், நம்மையறியாமல் சில வேளேகளில் அவர்களுடைய நடத்தையைப் பின்பற்ற முயல்வோம். மற்றுஞ் சில சமயத்தில், நாம் காலஞ் செலவழிப்பதையும், நம்மால் கொண்டாடப்பட்டவர்கள் தம் நேரத்தைக் கழிக்கும் விதத்தையும் ஒப்பிட்டு நாமும் அவர்களேப்போலவே கூடியவரையில் நடக்க முயல்வோம். அவர்களுடைய எண்ணங்களும் வழக்கங்களும் நமது மனதிற் படுவதனுல் நாமும் அவர்களுடைய மனேபாவத்தை அறிவோம். பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறுமன்ருே ?

இதனுல் பெரியோருடைய சரித்திரங்கள், அவர்களுடைய சிறந்த மேலான எண்ணங்களேயும், செய்கைகளேயும், பேச்சுக்களேயுமே குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவர்களிடம் குற்றங் குறை நீளிராவென்று கூற முடியாத போதிலும், அவைகள் குறிக்கப்படாத அவ்வளவு சிறியனவாயிருக்கும். நாம் எதைக் கவனமாய் நாடுகின்ருேமோ அவையே நம் மனத்திற் பதிவவாதலால் குற்றங்குறைகளேக் கவனியாதிருப்பது நியாயமாகும்.

## பெரியோரே நாட்டின் நிலேமைக்கு அறிகுறி

ஒரு தேசத்தின் நிலேமையை அதன் பெரியோர்களுடைய செயல்களே விளக்குகின்றன. ஏனெனில் நாம் எவ்வாறு ஒருவனுடைய உயர்குணங்களேயே கவனித்தல் நேரானதோ, அவ்வாறே ஒரு தேசத்திலுள்ள மக்களின் பெரியோருடைய வாழ்க்கையையே அத்தேசத்தினர் உயர்ந்த நோக்கத்திற்கும் செயலுக்கும் அறிகுறியாக வைத்துக்கொள்ள வேண்டும். இவ்விதம் பார்ப்பதே தகுந்த வழி. இப்படி நோக்குமிடத்து உலகின் கண்ணுள்ள எல்லா நாடுகளிலும் பெரியோர்கள் இருப்பாரென்பது விளங்கும். அதுபற்றியே நாம் எத்தேசத்தினரையும் தாழ்ந்தவர் என்று அவசரப்பட்டுக் கூறலாகாது. பக்கத்திலுள்ள நாட்டாரால் பல வழிகளில் இகழப்பட்ட மக்கட் குழாங்களிலே அறிவுணர்ச்சியும் பெருநோக்கமும்

நிறைந்த பரமஹம்ஸர்கள் பிறந்திருப்பதை அனைவரும் அறிவர்.

### வறுமையும் செம்மையும் பெரியோரும்

பெரியோர் என்பது சீலத்தில் பெரியோரையே குறிக்கும். சீலம் என்பது செல்வத்தையும் வறுமையையும் கடந்து நிற்பது. செல்வம் நிறைந்த குலத்திற் பெரியோர் பிறப்பின் அது அவர்களால் நல்வழியிற் செலவழிக்கப்படுகின்றது. அன்றேல் அதனாலுண்டாகும் தீமைகளின் பொருட்டு வெறுக்கப்படுகின்றது. வறுமையோவெனில், சோற்றுக்குத் திண்டாடும்போதும், தீயவழிகளால் பணம் சேர்க்கக்கூடிய காலத்திலும் மனத்தைத் தீய வழிகளிற் செலுத்தாது பிறருக்கு நன்மை புரிவதை நாடிச் செலுத்துகின்றது. பொதுவாகப் பணமுள்ளோரிடமும், வறுமையுடையோரிடமும் நாம் காணும் தீய குணங்கள் பெரியோரிடம் காணாது ஒழிகின்றன. செல்வம், செல்வமின்மை ஆகிய இவ்விரண்டையும் ஒரு பொருளாகக் கருதாது வாழும் குணக்குன்றுகளிடம் நாம் காணும் குறிகள் யாவை? அவைகட்கு அடிப்படையாகவுள்ளது யாது?

### பெரியோரின் மனப்போக்கு

பொறுமை, உண்மை, தனக்கென வாழாது பிறர்க்குழைத்தல், தன் செயலனைத்தினும் நெறி தவறுதிருத்தல், இவைகளே குறிகளாகும். இவைகளுக்கெல்லாம் இருப்பிடமான ஒருவன் இருப்பதை உணர்தல் இதுவே அடிப்படையாகும். இப்படி நல்வழியில் நடக்கும் பெரியோருக்கு ஈசன் வேறுலகிலிருப்பதில்லை. இங்கே யிருக்கிறான். ஆனால் ஒவ்வொரு நிமிடமும் கண்முன் பலவுருக்கொண்டு தோன்றிப் பல வழிகளில் காணப்படுகின்றான். இப்பிரபஞ்சத்தில் நடப்பவையனைத்தும் ஈசன் ஆணைப்படி நடக்கின்றமையின் பெரியோர் ஒன்றையும் வெறுப்பதில்லை. எல்லாவற்றையும் அவன் அருளாலேயே நடக்கின்றதாகக் காண்கின்றனர்.

### நமது பொறுப்பு

இதுவே நாம் பெரியோரிடமிருந்து அறிய வேண்டியது. "ஈசன் எங்குமுளன். அவன் செயலே எல்லாம். எதுவும் அவன் ஆணையின்றி நடவாது." ஆதலின் நாம் ஒவ்வொரு காரியத்

தையும் கவனித்து அதனில் நன்மை எதுவெனக் கண்டறிதல் வேண்டும். அதனைப் பெருக்க முயல வேண்டும். அதனைப் பற்றி எண்ணியும் பேசியும் வரவேண்டும். அதனால் நம்முள் ளத்திலுள்ள அழுக்கு நீங்கும்; நல்லது நிறைந்து நிற்கும். நாமும் சிறிது சிறிதாக மேலான எண்ணமும், சீலமான நடத் தையும், குறையாத அன்பும் உடையவர்களாவோம், நாம் பெரியாருடைய வாழ்க்கையை வாசித்தலினால் கைகூடவேண் டிய நன்மையுமுண்டாகும்; பெரியார் பிறந்த திருநக்ஷத்திரங் களைக் கொண்டாடுவது நல்வழக்கமாகும்.

### திருநக்ஷத்திரங்கள்

இது பற்றியன்றோ நம்பெரியார்கள் நாயன்மார் ஆழ்வா ராதியருடைய திருநக்ஷத்திரங்களைக் குறித்துள்ளார்கள். இதனை நாமறிந்து அத்தினங்களைக் கொண்டாடுதல் வேண் டாமோ? ஸ்ரீ பரமஹம்ஸர் முதலியோருடைய திருநக்ஷத்திரங் களைக் கொண்டாடுவதால் நாம் நமக்கே நன்மை விளைவித்துக் கொள்கின்றோமன்றோ? இதைவிடச் சஞ்சலம் நிறைந்த சமு சார வாழ்க்கையில் நாம் செய்யக்கூடியதென்ன விருக் கின்றது?

# 12

## மானத சக்தியும் காரிய சித்தியும்*

சித்த சக்தியின் வலிமையினுலே மலையைத் தானும் நிலை குலையப் பண்ணலாமென அறிஞர் கூறுகின்றனர். மதம் பொழியுங் காட்டு யானையை வசப்படுத்தி நடத்துவதும், சிங்கத்தின் முதுகின் மேலாரோகணித்துச் செலுத்துவதும், விஷசர்ப்பங்களைக் கையினுலெடுத்துக் கழுத்திற் போட்டுக் கொள்வதும் சித்த புருஷர்களுக்குச் சிறு விளையாட்டா வனவேயன்றிச் செய்தற்கரிய பெருஞ் செயல்களாகாவெனச் சித்தர் நூல்களாலறிகின்ருேம். சாதாரண மனிதராகிய பாம் பாட்டிகளும், சர்க்கஸ் விளையாட்டுக்காரரும் பாம்பு, சிங்கம், கரடி, புலி, யானையாதியவற்றைத்தம் மந்திரவலியாலும், மன வலியாலும், கண்ணின் காந்த சக்தியினுலும் வசப்படுத்து வதை நாம் நேரிற் காணலாகும். ஆதலால் முன்னுளிலிருந்த சித்த புருஷர் செயற்கருஞ் செயல்களைச் செய்தார்களென்பதை நாம் முற்றிலும் நம்புகின்ருேம். சித்தத்தை யடக்கியவர் சித்த புருஷரெனப்படுவார். இவருட் பெரியோர் அட்டமா சித்திகளை யுடையவராயிருந்தனர். இன்னுருடைய ஆற்ற லுக்கு அளவில்லை யென்றே சொல்லலாம். சித்தத்தை அடக் கும் மார்க்கங்களையும் அங்ஙனம் அடக்கி நிறுத்திய சித்தத் தின் வலிமையினுலே செயற்கருஞ் செயல்களைச் செய்தற்குரிய வழிவகைகளையும் யோக நூல்கள் நன்ருக விரித்துக் கூறு கின்றன. இவற்றிலிருக்கிற அரும்பெருங் கருத்துக்களை யாராய்வதற்கு நமக்கு அவகாசமுமில்லை, ஆராய வேண்டிய அவசியமுமில்லை.

பின்னர் இச்சுருக்கவுரையிற் நாம் ஆராயப் புகுந்த பொருள் எதுவென்னின், உலக வாழ்க்கையிற் காரியசித்தி யடையும் பொருட்டு நாம் நமக்கு இறைவனுற் கொடுக்கப் பட்ட மானத சக்தியை யுபயோகிக்கும் முறைகள் என்பது. யோக நூல்களைப் படித்துப் பார்ப்போமாயின் எல்லா வகை யோகங்களுக்கும் முதற்படியாகவுள்ளன இயமமும், நியமமும் என அறிவோம். பொதுவாகக் கூறின் இயமம் நியமம் என்பன கொல்லாமை, மெய்ம்மை கூறல், கள்ளாமை, பிறர் பொருளிச்சியாமை, தத்துவ நூலோர்தல், மனமுவந்திருத்தல்,

---

* ஸ்ரீ இராம கிருஷ்ண விஜயம்

தெய்வம் வழிபடல் முதலியனவாம். எல்லாவகை யோகங்களுக்கும் பிரம்மசரியம் இன்றியமையாதது. காமம் கோபம் ஆகிய இரண்டினாலும் ஆத்ம சக்தி சிதறுண்டு போமாதலினால் இவற்றையடக்காத மனிதன் யோக சாதனையிற் பிரவேசிப்பதனால் எய்திய பயனொன்றுமில்லை. அஃதன்றியுங் காமம், கோபம் என்னும் இரண்டின் வழியும் மனத்தைச் செல்ல விடுகின்ற மனிதன் உலகத்தாரால் இழிந்தவனெனக் கருதப்படுவான்; ஆதலால் அவன் காரியசித்தியடைய மாட்டான். அங்ஙனமாதலின் மானத சக்தியை விருத்தி செய்து காரிய சித்தியைப் பெற விரும்பிய மனிதன் முதற்படியாகக் காமம், கோபம் ஆகிய இரண்டினை அடக்குதல் வேண்டும். பிறர் பொருளைக் காஞ்சிரம் பழமெனக் கருதல் வேண்டும்; பிறன் மனைவியைக் கனவிலும் நினைத்தல் கூடாது.

இனி மானத சக்தியை வளர்ப்பதற்கு முதற்படியைப் போலவே இன்றியமையாத இரண்டாம்படியாகவுள்ளது வாக்குச் சுத்தி. வாக்கினாற் செய்யப்படுகின்ற குற்றங்கள் பொய், குறளை, கடுஞ்சொல், பயனில் சொல் என நான்காகும். இவை நான்கினையும் நீக்கி வாய்மை, புறங்கூறாமை, இனியவை கூறல், பயனில் சொல்லாமை என்னும் நான்கு விரதங்களையுங் கைக்கொள்ள வேண்டும். அதிகப்பிரசங்கித்தனமாக பயனற்ற வார்த்தைகளை நீளப் பேசிக் கொண்டிருப்பவன் ஆத்ம சக்தியை வீணிற் போக்கடிக்கிறான். இனிய வார்த்தைகளைப் பேசுபவன் தனது அன்பினால் மனிதரை வசப்படுத்திக் காரிய சித்தியடைவான். புறங்கூறுவதினால் ஆத்ம சக்தி நஷ்டப்படுவதேயன்றி யெய்துகின்ற பயன் பிறிதொன்றில்லை யாதலினால் எவ்வெவரும் புறங்கூறாமையைக் கைக்கொள்ள வேண்டும். இனித் தண்ணீரானது புறத்தேயுள்ள பொருட்களைச் சுத்தி செய்வதுபோல அகத்தைச் சுத்தி செய்வது வாய்மை யாதலால் எல்லாரும் மெய் கூறுதலைச் சிறந்த விரதமாகக் கைக்கொள்ளல் வேண்டும். மகாத்மா காந்தி செய்வதுபோல வாரமொருதினம் மௌனம் சாதித்தல் வாக்கு மனமிரண்டையுஞ் சுத்தி செய்வதற்குச் சிறந்த சாதனையாகும். பலபடக் கூறாது சில சொற்களாற் கருதிய பொருளை வெளியிடவும் இனிய சொற்களையே கூறவும் பயின்றுகொள்ள வேண்டும். இனி மனச்சுத்தியைப் பற்றிச் சில குறிப்புகள் சொல்லுவாம்.

மனிதருடைய மனோநிலையும் ஜீவியத்தின் போக்கும் ஒன்றையொன்று பற்றி நிற்பன. மனோ நிலையுயர்வடையு மாயின் ஜீவியமும் உயர்வடையும். மனம் தாழ்ந்த பொருட் களில் இச்சை வைக்குமாயின் கெட்ட சிநேகிதருடைய சக வாசத்தாற் கேடுற்ற நற்குலத்துப் பிள்ளையைப்போல ஆத்மா வும் பாபச் சேற்றில் விழும். ஆத்மாவினுடைய இயல்பைக் கூறுமிடத்து அது பளிங்கு போன்றது என நமது சைவ சித்தாந்த சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. சிவத்தைச் சார்ந் திருக்கும்போது ஆத்மா அறிவானந்த ரூபமாகிய சிவமய மாய் விளங்கும்; அஞ்ஞானமாகிய மலத்தைச் சார்ந்திருக்கும் போதும் காமம், வெகுளி; மயக்கம் என்னும் முக்குற்றத்தினுட் பட்டுத் தன்னிலை மறந்து தடுமாறும். நன்னீர்ப் பொய்கை யினடியில் வெண்மணலிருக்குமாயின் நீரும் கருநிறமாகத் தோன்றும். தெளிந்த பளிங்குக்கட்டியின் அருகில் செம் பருத்திப்பூ இருக்குமாயின் பளிங்கு சிவப்பு நிறமாகத் தோற் றும்; மாசுபடிந்த மனத்தினை யுடையவனது முகமும் செய லும் அவனது உள்ளழுக்கைப் புறத்தாருக்குத் தோற்றுவிப் பன. பரிசுத்தவானுடைய முகமுஞ் செயலும் அவனது உள் ளத் தெளிவைப் புறத்தாருக்குத் தெரிவிப்பன. மானத சக்தி யைப்பற்றி யாராயப் புகுந்த யாம் இந்த உண்மையை நன்கு சிந்தித்து மனிதருடைய முகம் செயல் என்னுமிவற்றைக் கூர்ந்து அவதானித்து அன்னாருடைய மனோநிலையை யுள்ள வாறுணர்ந்து கொள்ளப் பழகுதல் வேண்டும். புதியவனொருவ னுடைய மனோநிலையைச் சரிவர உணர்ந்து கொள்வது இலகு வான காரியமல்ல. சில நாட்களுக்குக் கூர்ந்து அவதானித்தால் முற்றும் அறியாவிடினும், பல விஷயங்களையறிந்து கொள்ள லாம். நாம் கருதி நோக்கிய மனிதன் அறிஞனா, மூடனா, நல்லாரோடிணங்கினவனா, தீய சகவாசமுடையவனா, வீரனா, கோழை நெஞ்சனா, ஆரம்ப சூரத்துவம் மாத்திரம் உடையவனா, நிலைத்து நின்று எடுத்த கருமத்தை முடிக்கக் கூடியவனா, உண்மை பேசுபவனா, பொய்யனா, அடக்கமுடையவனா, பலபடப்பிதற்றி இரகசியத்தை வெளிச் சொல்லுவோனா, கோபியா, சாந்த குணமுடையவனா, பாவியா, புண்ணியசீலனா, சோம்பேறியா, சுறுசுறுப்புடையோனா, தேகசுத்தியுடை யோனா, அழுக்குப்படிந்தவனா, அகங்காரியா, அறிஞர்க் கமைந்து நடப்பவனா, அன்புடையோனா, வன்னெஞ்சனா என் றின்னவற்றை யெல்லாம் ஆராய்ந்துணர்தில் மானத சக்தியை

யறிந்து உபயோகிப்பதற்கு இன்றியமையாத அப்பியாச மாகும்.

நாம் காரியசித்தியை விரும்பினோமாயின், நம்மோடு கலந் துறவாடுகின்ற மனிதர் அனைவருடைய மனப்போக்கையும் நன்றாக அவதானித்து அறியவேண்டும். நம்முடைய மனப் போக்கையும் நன்றாக அறிந்துகொள்ள வேண்டும். தன்னைத் தானே யாராய்ந்தறிந்தவன் தன்னிடத்திலுள்ள துர்க்குணங் களை யகற்றவும் நற்குணங்களை விருத்தி செய்யவும் முயலு வான். இன்னார் இன்ன அளவு என்று அறிந்த மனிதன் பிறர் குற்றங்கண்ட விடத்துத் தன்னிலை தவறிக் கோபங் கொள்ளமாட்டான். சாந்த நிலையில் நின்று கருதிய கருமத்தை முடிப்பான். பொறுமை யென்பது கடலினும் பெரியது; மிகுந்த ஆற்றலையளிப்பது. பொறுமையுள்ளவனே வல்லமை சாலி; அடக்கமுடையவனே அறிஞனெனப்படுவான். ஓடு மீனோடி யுறுமீன் வருமளவும் வாடியிருக்கின்ற கொக்கினைப் போல் வேண்டிய விடத்தில் தமது வாக்கு வல்லபம் மனோ வல்லபத்தைக் காட்டி மற்று நேரங்களில் அடங்கியிருப்பது அறிவுடையார்க்கு மரபாகும். பொறுமையும், அடக்கமுடை மையும் தேக மனோசக்திகளை வளர்ப்பதற்குச் சிறந்த சாதனங் களாவன. எந்த விஷயத்திலும் ஆத்திரப்படுதல் கூடாது.

எடுத்துக்கொண்ட காரியம் நிறைவேறி முடியும்வரையும் பிறிதொன்றின்மேல் மனத்தைச் செல்லவொட்டாது தடுத்துக் கருமமே கண்ணாயிருத்தல் வேண்டும். கல்வியைச் சம்பாதிக்க விரும்புகிறவன் இரவு பகலாகக் கல்வியின் எண்ணமேயுடைய வனாயிருக்க வேண்டும். கற்றுவல்ல பண்டிதர்கள் பலரு டைய வீட்டுக்குச் சென்று பார்த்திருக்கிறேன். அவர்கள் இருக்குமிடமெங்கும் புத்தகங்கள் வைத்திருப்பார்கள். படுக்கை யறையிலும் புத்தகங்களுண்டு. எந்நேரமும் படித் துக்கொண்டே யிருப்பார்கள். அப்படிச் செய்ததனாற்றான் கல்விமான்களானார்கள். செல்வத்தைச் சம்பாதிக்க முயற்சி செய்வோர் இரவு பகலாகப் பொருளீட்டும் வேலையிலே கண் ணுங் கருத்துமாயிருத்தல் வேண்டும். தேகபலத்தைப் பெற விரும்புபவர்கள் தேகாப்பியாசத்திலும் உண்ணுமுணவிலும் கருத்து வைத்துச் சுகத்தைப் பேணிப் பலத்தைப் பெற வேண்டும். இராமமூர்த்தி நாயுடு, சாண்டோ முதலிய பராக் கிரமசாலிகள் தாம் இளம் வயதிலே சாதாரண சிறுவர்களைப்

பார்க்கினும் தேகபலம் குறைந்தவர்களாயிருந்ததாகவும் பின்பு தேகாப்பியாச முறைகளிற் பயிற்சி செய்து சிரத்தையோடு தேகபலத்தை விருத்தி செய்து வந்தமையினுல் பலசாலிகளான தாகவும் சொல்லுகின்ருர்கள். வாலிபர்கள் அனைவரும் இந்தப் பராக்கிரமசாலிகளுடைய முன் மாதிரியைப் பின்பற்றித் தேக பலத்தை விருத்தி செய்துகொள்ள வேண்டும்.

எந்தக் காரியத்திலும் வெற்றி பெறுவதற்கு ஏகாக்கிர சித்தமாக அந்தக் காரியத்திற் சிரத்தை வைக்கவேண்டும். மனம் ஒரு வழிப்படுமாயின் செய்துமுடிக்கக்கூடாத காரியம் ஒன்றில்லை. நெப்போலியன் போனபார்ட் என்னும் சிறந்த சேனுதிபதி தம்முடைய மனத்தில் ஒவ்வொரு கருமத்துக்கும் ஒவ்வொரு அறையுண்டென்றும், ஓர் அறையைத் திறந்து வைக்கும்போது மற்ற அறைகளனைத்தினையும் பூட்டிவைக்கும் வல்லபம் தமக்குண்டென்றும், எல்லா அறைகளையும் பூட்டி விட்டுத் தாம் உடனே செயலற்று நித்திரைபோய்விடக் கூடு மென்றும் சொல்லியிருக்கிருர். நெப்போலியன் முற்பிறப்பில் ஒரு யோகியாக விருந்திருக்கவேண்டும். யோகமுறையினுல் முன்னெரு பிறப்பிற் பெற்றுக்கொண்ட ஏகாக்கிர சித்தத்தின் வலிமையினுலே அவர் பல தேசங்களை வென்று பெரிய சக்கர வர்த்தியானுர்.

பலரொருங்கு சேர்ந்து செய்து நிறைவேற்றுகின்ற கருமங்களில் அனைவரும் ஏகோபித்து ஒரு வழிப்பட்டா லன்றிப் பூரண காரியசித்தி வந்தெய்தப் பெருது. சங்கங் கூடிய பொது நன்மை செய்வதற்கு முற்பட்டுநிற்கும் வாலி பர்கள் சகோதரத்துவமுடையவர்களாய் அடக்கம், பொறுமை யென்றும் சிறந்த குணங்களுடையவர்களாய்த் தாம் தொண்டர் என்றும், தொண்டு செய்வதே தமக்கு உரிமை யென்றும் எண்ணுங் குணமுடையவர்களாய்,

“ பணிவுடையனின் சொல்லனுத லொருவற்
கணியல்ல மற்றுப்பிற ”

என்று திருவள்ளுவநாயனுர் கூறியபடி பணிவுடைமை, இனிய மொழி யென்னும் ஆபரணங்களையுடையவர்களாய், மனத்தில் நிறைந்த அன்புடையவர்களாயிருந்தால் சங்கம் நன்கு தழைத் தோங்கும்; கருதிய கருமமுங் கைகூடும்; காரியசித்தி யுண்டாகும்.

# 13

# தமிழ்மொழியின் தற்கால நிலைமையும் தமிழரின் கடமையும்*

## தமிழும் சென்னைச் சருவகலாசாலையும்

சென்னைமா நகரத்திற் பச்சையப்பன் கலாசாலை மண்டபத்தில், இராஜ மந்திர சபை யமைச்சர் ஸ்ரீமான் சிவஞானம் பிள்ளையவர்களது தலைமையின் கீழ்ச் சின்னாட்களுக்கு முன், ஒரு பெருங்கூட்டம் நடந்தேறியது. சென்னைச் சருவகலாசாலையிலே தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், சமஸ்கிருதம் ஆகிய தேச பாஷைகளுக்கு இப்பொழுது இருக்கிற நிலையினும் பார்க்க உயர்ந்த நிலையளிக்கப்படல் வேண்டும் என்னும் தீர்மானத்தை நிறுவுவதே அப்பெருங் கூட்டத்தின் நோக்கமாயிருந்தது. இற்றைக்கு இருபது ஆண்டுகளுக்கு முற்பட்டகாலத்திலே, மேற்குறித்த ஒவ்வொரு மாணவனும் அவற்றினுள் ஒன்றையாவது கற்க வேண்டியவனாயினன். இனிமேலும் முன்னிருந்த வண்ணமே கட்டாய பாடங்களாக்கினால் ஒவ்வொரு மாணவனும் ஒரு சுதேச பாஷையையாவது தவறாது கற்கவேண்டி வருமென்றும், அங்ஙனம் கற்பதனால் பெரும் பயன் விளையுமென்றும் சபையிற் கூடியிருந்த அறிஞர்கள் பலர் வற்புறுத்திக் கூறினார்கள். சென்ற இருபது ஆண்டுகளாகத் தமிழ்மொழி கட்டாய பாடமில்லாதிருந்த காரணத்தினால் அதனைக் கற்போர் தொகை அருகிவிட்டதெனப் பண்டிதர்கள் பலர் துன்புற்று வருந்தினார்கள்.

## அறிவுமுத்திரையோ? அடிமை முத்திரையோ?

சென்னைச் சருவகலாசாலை சுதேச பாஷைகளைப் புறக்கணித்து வருகிறதென்பது மறுக்கொணா உண்மையே. சருவகலாசாலை ஏற்பட்டிருப்பது எதற்கோ? ஏழைச்சனங்களிடமிருந்து பெறுகிற வரிப்பணத்திலிருந்து கோடிக்கணக்கான ரூபாக்களைச் சருவகலாசாலைக்குக் கொடுத்து வருவது

---

* ஸ்ரீ இராம கிருஷ்ண விஜயம் 1923

என்ன காரணத்திற்காகவோ? சருவகலாசாலையார் அளிக்கிற பட்டங்கள் தம் மொழிமறந்து பிறமொழியிற் பிதற்றுகிற பேதை மக்களை குறியீடு செய்வதற்குரிய அடிமை முத்திரை யாமோ? அன்றேல், அவை அறிவு நிறைமாந்தருக்கு கல்விக் கழகத்தினர் கொடுத்துதவும் அறிவு முத்திரையாமோ? என்றின்னோரன்ன துறைகளை ஆராய்ந்து நோக்குவது தேசாபிமானமுடைய பெரியார் மேற் பொறுத்த கடனாகும். தனக்குரிய சிறப்பியல்பு எது? உலகிலுள்ள கல்விக் களஞ்சியத்துக்குத் தான் கொடுத்துதவக் கூடிய பெரும் பொருள் யாது? என்றின்னோரன்ன துறைகளையாராய்ந்து நோக்குவது சென்னைச் சருவகலாசாலை மேற் பொறுத்த கடனாகும். பண்டைக்காலத்திருந்த சேர சோழ பாண்டிய மன்னர்களைப் போலத் தேசபாஷையையும் தேசபாஷையிற் கற்றுவல்ல விற்பன்னர்களையும் ஆதரித்து வருவது அரசினர் கடனாகும். சென்னைச் சருவகலாசாலை உருப்படுத்துவதற்கு முன் நமது நாட்டில் உயர்தரக் கல்வியில்லாதிருக்கவில்லை. சென்னைச் சருவகலாசாலை புறக்கணிப்பினும் தமிழ் மொழி வளர்ச்சி குன்றிவிடப் போவதுமில்லை.

## பூர்வீக கலைக்கழகங்கள்

பூர்வத்தில் யவனபுர ரோமபுர நாகரீகங்கள் தோற்றுவதற்கு முன்னே நமது தாய் நாடாகிய பரத கண்டம் மிகவும் உன்னத நிலையிலிருந்ததெனவும், அறிவுச்சுடர் இங்கிருந்தே அயற்றேயங்களுக்குப் பரம்பியதெனவும் புராதன சரித்திர நூலாராய்ச்சி வல்லோர் சொல்லுகின்றனர். நாளந்தை, தக்ஷசீலம் என்னும் இடங்களிலும், தென்னாட்டிற் காஞ்சிபுரத்திலும் சிறந்து விளங்கிய சருவகலாசாலைகளுக்கு உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் கற்று வல்லோரும் வித்தியார்த்திகளும் வந்தார்களெனவும், பலவாய நூற்றுறைகளும் இச் சருவகலாசாலைகளில் ஆராயப்பட்டு வந்தனவாமெனவும் அறிகின்றோம். தமிழுக்கு நிலையமாகிய மதுரைமா நகரின் கண்ணே அரசு செலுத்திவந்த பாண்டிய மன்னர்கள், கற்று வல்லோர் பலரை ஒருங்கு வருவித்து, இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழையும் ஆராய்வித்துப் புதுநூல்களை இயற்றுவித்துப் பலவாற்றானும் கலைநூல் வளர்ச்சியைப் பெருக்கி வந்தார்களெனவும் அறிகின்றோம். இவ்வுண்மைகளை யாராய்ந்து நோக்குமிடத்துச் சருவகலாசாலை நிறுவி

THE PUBLIC LIBRARY 1973 FEB 24

உயர்தரக் கல்வியை வளக்கும் முறை நம்மனோருக்குப் புதுவதொன்றல்ல என்பது நன்கு புலப்படுகின்றது.

## கிழக்கிலுதித்த ஞானவொளி

இனி, மேற்றிசை அறிவு வளர்ச்சியை ஆராய்ந்து நோக்குவோமாயின், பண்டை நாளிலிருந்த யவனபுர ரோமபுர நாகரீகம் சீரழிந்து, ஐரோப்பாக் கண்ட முழுவதினும் அஞ்ஞான விருள் பரந்திருந்த காலத்தில், அவ்விருட் படலத்தையகற்றும் அறிவு விளக்கத்தைக் கொடுத்தோர் கிழக்கிலிருந்து போய் மேனாட்டினில் வெற்றிக் கொடி நாட்டிய அரபியராமென அறிவோம். பாக்டாட் நகரில் விளங்கிய சருவகலாசாலையானது கிழக்கிலுள்ள கலைஞானத்தைப்பெற்று அறிவு விளக்கமில்லா மேனாட்டாருக்கு உயிர்க்கு உறுதி பயக்கும் அறிவமுதத்தை வழங்கி வந்தது. பரதக்கண்டத்தினும், பாரசீக நாட்டினும், சீனதேயத்திலும் பரந்திருந்த அறிவு நூல்கள் பாக்டாட் நகருக்குக் கொண்டுவரப்பட்டன. அங்கிருந்து அவை ஐரோப்பாவுக்குச் சென்று சேர்ந்தன. கோர்டோவா என்னும் நகரிலிருந்த இஸ்லாமிய சருவகலாசாலை மேனாட்டு அறிவு விளக்கத்துக்குத் தாயகமாய் நின்றது. யவனபுரத்துக்குக் கலைஞானிகள் தத்துவஞானிகள் இயற்றிய நூல்கள் பல அராபி பாஷையில் மொழி பெயர்க்கப்பட்டன. பின்னுளில் ஐரோப்பிய மொழிகளில் அவற்றை யெழுதினோர் பலர் அராபி மொழி பெயர்ப்பிலிருந்தே தம்மொழியிற் பெயர்த்தெழுதினுர்களெனத் தெரியவருகிறது. வானநூல், கணிதம் முதலியவற்றை அராபியர் பரதகண்டத்திலிருந்து பெற்றுர்களெனவும், பூர்வ யவனரும், எகிப்தியரும் தத்துவ ஞானநூல்களை நமது முன்னோரிடமிருந்து தெரிந்து கொண்டார்களெனவும் புராதன ஆராய்ச்சி நூலோர் கூறுகின்றனர். இவ்வாற்றான் ஆராயுமிடத்துப் பரதகண்டம் பிறநாட்டினருக்குத் தொன்று தொட்டுக் கலைஞானத்தையும் தத்துவஞானத்தையும் வழங்கி வருகிறதென்பது நன்கு புலப்படுகிறது.

## அனைவரும் விரும்பும் அறிவமுதம்

விருக்ஷங்களடர்ந்து நெருங்கிய ஆரணியங்களிலே, புண்ணிய நதிக்கரைகளிலே, பர்ணசாலைகளை ஏற்படுத்திக் கொண்டு ஒருசில மாணவரோடு தனித்துறைந்து, இறைவனியல்பு, ஆன்மாவினியல்பு என்னும் இவற்றை ஆராய்ந்

துணர்ந்த நமது ஆரிய முன்னோர்கள் எழுதிவைத்த ஞான நூல்களும் பிறவும் இன்றும் ஐரோப்பிய பண்டிதரால் ஆராய்ந்தளவிடப்படா நிலையினவாக விளங்குகின்றன. இஃதிங்ஙனமாயின் அத்தகைய முன்னோரின் வழிவந்த நாம் ஏனைய நாட்டினருக்கு ஆசிரியராக விளங்குதல் தகவுடையதா? அந்நிலைக்கு அருகராகாது அவர்பாற் சென்று கல்வி பயிலும் நிலையிருத்தல் தகவுடையதா? தற்கால மிருக்கும் கீழ்நிலை எதனாலாயிற்று என விசாரிப்போமாயின் "மறை" "மறை" எனப் பெயரிட்டு வழங்கி அறிவுப் பொருளை மறைத்து வைத்ததனாலாயிற்று என அறிவோம். கொடுக்கக் கொடுக்கக் குறையும் பொருட் செல்வத்தைப் போலாகாது, கொடுக்கக் கொடுக்க மேலும் மேலும் பெருக்கமுறும் கலைச்செல்வம் கொடுக்குந் தொழிலாற் சிறந்து விளங்குவதும் மறைக்குந் தொழிலால் இறந் தொழிவதும் இயல்பேயாம். இவன் என் மகன், இவன் பிறன் மகன் என வேறுபாடு காட்டி, அறிவு நூலெழுதிய ஏடுகளைப் பெட்டியிற் பூட்டிச் சூரிய வெளிச்சங் காணுநிலையில் மறைத்து வைப்பின் அறிவு விருத்தியாவது யாங்ஙனம்? "காகமுறவு கலந்துண்ணக் கண்டீ ரகண்டாகார சிவ, போகமெனும் பேரின்ப வெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமா, யேகவுருவாய்க் கிடக்குதையோ இன்புற்றிட நாமினியெடுத்த தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேரவாருஞ் செகத்தீரே" எனத் தாயுமான சுவாமிகள் தாங்கண்டனு பவித்த பேராநந்தத்திற் பங்கு பெற உலகினரனைவரையும் அழைத்தது போல யாமும் உலகினரனைவரையும் நோக்கி,

"எண்ணி னியல்பிங்கிதுவாகும் இறையே ரருளை யினிதளிக்கும்
பண்ணி னியல்பிங் கிதுவாகும் பதியே பசுவே பாசமென
நண்ணுமூன் று பொருளியல்பு நவிலினிது வே யருளமுதம்
உண்ணுமாறு விரைந்து வம்மின் உலகத்தீரே"

யென விளித் தொன்று தொட்டுத் தமிழ்நாட்டிற் பாராட்டி, வளர்க்கப்பட்டு வருகிற அளவைநூல், முப்பொருளுண்மை யுணர்த்துஞ் சிவஞான போத முதலிய தெய்வநூல் என்னும் இவற்றை விரித்துரைப்போமாயின் பெறற்கரும் பொருளாகிய இவற்றைப் பெறுவதற்குப் பிறநாட்டினர் வந்து நிறைவார் களென்பதற்கையமில்லை. அங்ஙனம் நமது தேயத்தறிஞரும் பிற நாட்டறிஞரும் ஒருங்கு கலந்து உறையுமிடமே சருவ கலாசாலை யெனப்படுதற்குரியது.

நமது கலை நூல்களைப் பிறர்க்கு கொடுப்பதற்காக நமது நாட்டில் நம்மால் நிறுவப்பட்ட நிலையங்களே உண்மைச் சருவ கலாசாலைகளாவன என நாம் மேலே கூறிய முடிவு ஒரு சாரா ருக்குப் பக்கம் பற்றிய முடிபு போலத் தோற்றுதலுங் கூடும். ஆதலால், இந்த முடிபைச் சற்று விரித்துரைத்துத் தெளி வாக்கி அப்பாற் செல்வாம். எந்தக் கருமத்துக்கும் பிரதான நோக்கம் ஒன்றுண்டு; அப்பிரதான நோக்கங்களுஞ் சில வுண்டு. நமது நாட்டில் நம்மால் நிறுவப்படுகிற சருவகலா சாலைக்குரிய பிரதான நோக்கம் எது வென்பது விசாரிக்கத் தக்கது. பிறநாட்டு ஆசிரியர்களை விளித்து, "ஐயன்மீர், விரைந்து வந்து அறியோராகிய எங்களிடமிருந்து மாதமாதம் ஆயிரம் வெண்பொற் காசுகளைப் பெற்றுக்கொண்டு எங்கள் உபகாரத்துக்குப் பிரதியுபகாரமாக எங்கள் நாகரீகத்தை நாசப்படுத்தி உங்களுடைய நவநாகரீகத்தைத் தரக்கூடிய அளவுக்கு எங்களுக்குத் தந்தருளி, உங்களுக்கு நாங்கள் நாளும் அடிமையாயிருக்கக் கிருபை செய்தருளுவீர்களாக" எனப் பணிந்து நிற்பதுவோ எங்கள் சருவகலாசாலைகளுக் குரிய பிரதான நோக்கம்? இதற்காகவா, இத்தனை பொருட் செலவும் கூக்குரலும்? உலகிற் பிற விஷயங்களிலுள்ள இயல்பை ஆராய்ந்து பார்ப்போமாக. கேம்பிரிட்ஸ், லண்டன் சருவகலாசாலைகளின் பிரதான நோக்கம் ஆங்கில நாகரீகத்தை வளர்ப்பதா, அன்றேல், சீன தேய நாகரீகத்தை வளர்ப்பதா? பாரிஸ் நகர்ச் சருவகலாசாலை பிராஞ்சிய தேச சரித்திரத்தை ஆராய்வதைப் புறக்கணித்து விட்டு ஜப்பான் தேச சரித்திரத் தைக் கருதிப் படித்துக்கொண்டிருக்கிறதா? அங்ஙனமல்ல; பிரான்சு தனக்குரிய கலை நூல்களையே கருதிவளர்த்து வருகிறது. இப்படியே உலகத்தில் தத்தமக்குரிய கலைஞானச் செல்வத்தை ஏனையோரெல்லாம் வளர்த்துவர யாம் மாத்திரம் வேறு வழியில் நிற்றல் தகுதியாமா என்றால் "ஏனையோர் சுய ஆட்சியுடையோர், நாம் ஆங்கிலருக்கு உரிமையானோம், ஆதலால் மேற்காட்டிய உதாரணங்கள் நமக்குப் பொருத்த மாகா" என ஒரு சாரார் மறுத்துரைத்தல் கூடும். இது சரி யான நியாயமாகாது. அரசியற் சுதந்திர மில்லாத காரணத் தால் நம் அறிவையும், ஆத்மாவையும் ஆங்கிலருக்கு அடிமைச் சீட்டெழுதிக் கொடுத்துவிட்டோமா? இல்லை; அறிவும் ஆத்மாவும் நமக்கே யுரியனவாக விருக்கின்றன. தொன்று தொட்டுவந்த நமது சிறப்புப் பொருந்திய நாகரீகத்தை

வளர்ப்பதே நமது கடமை. ஆங்கில நாகரீகத்தை வளர்ப்பது ஆங்கிலருடைய கடமை. ஆங்கில தேச சரித்திரம் ஷேக்ஸ்பியர் கவித்திறம் இவற்றையறிய எங்களுக்கு விருப்பமில்லாமலில்லை. ஆனால் அவற்றை உலகிற் பரப்புகிற கடமை எங்களுக்குரியதா ஆங்கிலர்க்குரியதா என்றால், ஒருவகை ஐயப்பாடுமின்றி ஆங்கிலர்க்கே யுரியதென்போம். ஆதலால் ஆங்கிலர் தமது பொருளைச் செலவழித்துத் தமது நாகரீகத்தை வளர்க்கட்டும். நாம் நமது நாகரீகத்தை நமது நாட்டில் மாத்திரமல்ல, பிறநாட்டிலும் பரப்புவோம். அஃதன்றிப் பொருள் கொடுத்து அடிமையாதல் முறையாகாது.

## இரப்பானுக்கு இரங்குவாரில்லை

இரப்பானுக்கு இரங்குவாரில்லை. நாம் ஆங்கில அறிஞரைப் பார்த்து, "எமக்குக் கலையறிவைத் தந்தருளுங்கள்; அடிமைத் தனத்தினின்று விடுவித்து விடுங்கள். எங்கள் முன்னோரியம்பிய வடமொழி நூற் பொருளையும் நீங்களே கற்பித்து விடுங்கள். பேதமை இந்த நாட்டில் நிறைந்திருக்கின்றமையால் அரசிறை வருமானத்திலிருந்து இன்னுங் கொஞ்சங்கூடப் பொருள் செலவிட்டுப் பள்ளிக்கூடங்களை ஸ்தாபியுங்கள்! நாங்கள் சுய நலம் மிக்கோம்; ஆதலினால் எங்கள் நாட்டுப் பள்ளிக்கூடங்களை நடத்த மிஷனரிமார்களை யனுப்பிவையுங்கள்" என எப்பொழுதும் இரந்தவண்ணமாக நின்றால் ஆங்கிலர் நம்மை மதிப்பது எவ்வாறாகும்? அவர்கள் என்றும் ஆசிரியராகவும், நாம் என்றும் மாணவராகவும் இருந்தால் சமத்துவமும் அந்நியோந்நிய நட்பும் ஏற்படுவது எவ்வாறு? அவர்கள் ஆசிரியத்துவம் வகித்து நமக்குக் கற்பிக்கவேண்டிய பொருளுமுண்டு, நாம் ஆசிரியத்துவம் வகித்து அவர்களுக்குக் கற்பிக்க வேண்டிய பொருளுமுண்டு. உலகிற்குக் கொடுக்கக்கூடிய பொருள் நம்மிடம் ஒன்றும் இல்லையாயின் நாம் உயிர் வாழ்வதற்கு உரியோமல்லோம். இன்றே தென்கடலினுள்ளே குதித்து உயிரை விட்டு விடுவதே முறையாகும். நாம் உயிர் வாழுகின்றோம்; வாழ விரும்புகிறோம். ஆதலினால், நம்மிடத்தினும் பிறர்க்குக் கொடுக்கத் தக்க பொருளிருக்கிறது. அதனைக் கொடுப்பதற்காகவே நமது நாட்டிற் கல்விக் கழகங்களை ஏற்படுத்துவோம். "ஈதலிசைபட வாழ்தலதுவல்ல தூதியமில்லையுயிர்க்கு"

என்று நமது பெருநாவலர் சொல்லிய திருமொழியின்படி கொடுப்பதுவே உயிர்க்கு ஊதியமாவது.

## கொடுப்போருக்கே கொள்ளுமுரிமையுண்டு

கொடுத்தல் போல எடுத்தலும் மரபாகாதாவெனின், கொடுப்போருக்கே எடுத்தற்கும் உரிமையுண்டு என்போம். ஆதலினாலன்றோ, மேனாட்டுப் பெரியோர் நம்முடைய முன்னோரியற்றிய கலைநூல்களைத் தானும் நம்மிடமிருந்து எடுப்பதுபோலக் காட்டாது நமக்குத் தருவது போலக்காட்டி நம்மனோரை ஏய்த்துவிடுகிறார்கள். காசிநகர் சமஸ்கிருத பாடசாலைக்குத் தலைவராக வந்தவர் ஓர் ஐரோப்பிய பண்டிதர். தாமும் முயன்று பல பிராமண சாஸ்திரிகளுடைய உதவியையும் பெற்றுச் சாங்கியம், வைசேஷிகம் முதலிய நூல்களைத் தமது தேயர்த்தவர்கள்பொருட்டு ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். நாம் எல்லாம் கைகூப்பி வணங்கி ஐரோப்பிய பண்டிதர் எங்கள் பாஷைக்குக் கண்ணிய முண்டாக்கி விட்டார் என்கிறோம். எங்கள் நூலுக்கு முன்னில்லாத கண்ணியம் மொழி பெயர்த்தபின்பு வந்துவிட்டதா? நூல் கண்ணியமாயிருந்தமையாற்றானே ஐரோப்பிய பண்டிதர் தமது மொழியிலும் பெயர்த்தெழுதிக்கொண்டார். இனி மொழி பெயர்ப்புக்கு வேண்டிய முயர்சியிற் பெரும் பகுதியைச் செய்து கொடுத்தவர்களும் நம்மவர்கள். இஃதெல்லா மிங்ஙனமாக ஐரோப்பிய பண்டிதருக்கு மதிப்பு ஏற்பட்டதெதனாலென்றால், அவர் கொடுக்குந் தொழிலிலிருக்கின்றமையால்.

சென்னைச் சருவகலாசாலைக்குரிய சிறப்பியல்பு மேற்றிசை நூலில் மாத்திரம் பயிற்சியுடையோர் மேற்காட்டிய கொள்கைக்கு உடன்பாடு கூறுவாரேனும், செய்கையளவில் நாம் மேனாட்டாருக்கு ஆசிரியராயிருத்தல் ஒருபோதும் கூடாதென்று சொல்லுதலுங்கூடும். பன்னூறு வருடங்களுக்கு அடிமைத்தனத்தில் வாழ்ந்தோருக்குச் சுதந்தரம் என்பதொன்றுண்டு என்னும் எண்ணந்தானும் இல்லாமலிருப்பது இயல்புதான். அங்ஙனமாயினும் ஆழ்ந்தாராய்வார்க்கு நம்மிடம் மேற்றிசையோர் வைத்திருக்கும் பொருள் இல்லையாயினும் அதனினுஞ் சிறந்த பிறிதொரு பொருள் உண்டென்பது நன்கு புலப்படும். உதாரணமாகச் சைவசித்தாந்த உண்மைகளை எடுத்துக் கொள்வோம். தமிழணங்குக்கு அருங்கலம்

போன்றிருக்கின்ற சிறந்த இத்தத்துவ நூலை முறைப்படியாராய்ந்து விருத்தி செய்வோமாயின், கொன்வியூயஸ், புத்தர், ஸாதுஷ்டிரர் முதலியோருடைய நூல்களைத் துருவித் துருவியாராய்கிற மேற்றிசை யறிஞர், மெய்கண்டானை உவப்புடனேற்றுப் பீடத்திருத்திப் பணிந்து நிற்பர். இதுவரையில் மேற்றிசையோர் மெய்கண்டானை மதியாமலிருப்பது ஏனென்றால் மெய்கண்டானுதித்த தமிழ்நாட்டுக்குரிய நாம் மெய்கண்டானுடைய அரியநூலை முறைப்படி ஆராயாமையினாலென்போம். முறைப்படி ஆராய்தல் என்றால் பிழைபொதிந்த ஒரு விருத்தி உரையையோ, தப்புந்தவறுமான ஒரு ஆங்கில மொழிபெயர்ப்பையோ எழுதிவிட்டிருப்பதல்ல. சிவஞானசுவாமிகள் செய்ததுபோல் இலக்கண தருக்க பாண்டித்தியங்காட்டிக் கற்றநூற் பொருளனைத்தையும் பொதிந்து ஒரு மாபாடியமெழுதிவிடுவதுமல்ல. இனித் திராவிடக் கொள்கை நிறுவி உலகிலுள்ள ஏனையோரெல்லாம் எமக்கிணையில்லையென்று சொல்லும் ஒரு சாராரைப் போல மெய்கண்டான் முற்றொடர்பில்லாது ஆகாயத்தில் முளைத்த பூ என்று சொல்லி விடுவதுமல்ல. முன்னிருந்த ஆசிரியருக்கும் சிவஞானபோத ஆசிரியருக்குமுள்ள பொதுவியல்பு, மெய்கண்டானுடைய சிறப்பியல்பு, பிறநாட்டு ஆசிரியருக்கும் மெய்கண்டானுக்குமுள்ள ஒற்றுமை, விகற்பம், மெய்கண்டான் உதித்ததற்குமுன் தமிழ்நாட்டுச்சமநிலை, ஆசிரியரது காலம், முதனூல் வழிநூல் வரலாறு, பிற்பட்ட ஆராய்ச்சியினால் மெய்கண்டானது நூலிற்காணப்படும் வழுக்கள், வழுவமைதி என்றின்றோரன்னவற்றையெல்லாம் பிறநூலுதவி பிறமொழிநூலுதவி கொண்டு ஆராயின் அவ்வாராய்ச்சி உலகத்திற்குப் பயன்படுவதாகும். உலகு அதனைப்பயன்படுத்திக்கொள்ளும். இனித்தேவாரப்பண்ணிலும், பரிபாடலிலும் பிறவற்றிலும் பொதிந்து கிடக்கும் இசைத்தமிழ் ஏனைய மொழிகளிலுள்ள இசைநூலுக்குத் தாயகமாய் நின்ற வடமொழி இசைநூலுக்கு முந்தியதென்பர். இசைத்தமிழ், நாடகத்தமிழினியல்பை இதுவரையும் பிறநாட்டாரறிந்ததில்லை. இவற்றை வளர்த்து உலகிற்குப் பயன்படச் செய்யுங்கடமை தமிழ்நாட்டுச் சருவகலாசாலைக்கன்றிப் பிறிதெச் சருவகலாசாலைக்கு உரியது? பௌத்தமதம் பரந்திருந்த காலத்தில் இந்தியாவிற் பரம்பியிருந்த அளவைநூல் (Logic) பௌத்தமதத்தோடு அகன்றுபோகத் தமிழ்நூலாகிய

மணிமேகலையில் மாத்திரம் நிலைபெற்றிருக்கின்றது. மணிமேகலைக்கு உரையெழுதிய ஆசிரியர் பிறமொழி நூலுதவி பெருமையினால் இப்பாகத்துக்கு உரையெழுதாதொழிந்தார். இதனை உலகிற்குப் பயன்படச் செய்தல் தமிழ்நாட்டுச் சருவகலாசாலைக்குரியதா, பிற நாட்டுச் சருவகலாசாலைக் குரியதா? தமிழிலுள்ள சித்தர் நூல், வைத்திய நூல் இவற்றின் எல்லையைக் கண்டறிந்தார் யாவர்? இவையெல்லாம் பெறற்கரும் பொருளா அல்லவா? திருக்குறளும் தொல்காப்பியமும் நமது மொழிக்குத்தானே அழகினைத்தந்து நிற்கின்றன. இவற்றிற்பொதிந்துகிடக்கும் பொருளை விருத்தி பண்ணுவோமாயின் சமூக வாழ்க்கையினியல்பினையறியாமையால் நிலை தழும்பிச் சீரழிகின்ற மேனாட்டார் நம்மிடம் வந்து உண்மையறிவைப்பெற்று உய்வார்களன்றோ?

## உலகிற்கு யாஞ் செய்யும் உபகாரம்

உயிர்க்குறுதி பயவாக் கணித நூலிலும், விஞ்ஞான நூலிலும் ஒரு சில உண்மைகளைப் பயின்று கொள்வதற்கு எவ்வளவோ சிரத்தை எடுத்துக்கொள்ளும் மேனாட்டார் உயிர்க்குறுதி பயக்கும் உண்மைகளைத் தெரிந்து கொள்ள ஆவலுடையவர்கள் என்பதை நாம் சொல்லவேண்டுவதில்லை. ஆதலால் நம்மிடம் ஏராளமாயிருக்கும் ஞானக்களஞ்சியத்தை நாம் பெருக்குவோமாயின், அயனாட்டார் நம்மைத் தேடி வருவார் என்பதற்கையமில்லை. இதுவே நம் சருவகலாசாலைகள் செய்யவேண்டிய முயற்சி. இம்முயற்சி உலகிற்கும் நமக்கும் ஒருங்குபயன்றருவது. உலகு தாபத்திரயங்களால் வெதுப்புற்று ஞானநீரை வேண்டிப் பரதகண்டத்தை நோக்கியவண்ணமாக நிற்கிறது. இத்தருணத்தில் நாம் அசட்டையாயிருப்போமாயிற் பரம துரோகிகளாகக் கருதப்படுவோம். எத்தனை ஆண்டுகளாக மேலைத்தேச ஆசிரியர்கள் நமக்கு அறிவுபுகட்டி வருகிறார்கள். அவர்கள் துயருந் தருணத்தில் நாம் அவருக்கு உதவாமலிருப்பது முறையாகுமா? சென்னைச்சருவகலாசாலைக்கு ஜெர்மனி, பிராஞ்சு, இங்கிலாந்து, அமெரிக்கா, இத்தாலி, தென்னாப்பிரிக்கா, சீனா, ஜப்பான், ஆஸ்திரேலியா முதலிய நாட்டிலிருந்து மாணவர்கள் கும்பல் கும்பலாக வந்து கம்பனுடைய கவித்திறத்தையும், கரிகாலன் போர்த்திறத்தையும், இளங்கோவின் இசை மாண்பையும், களங்கமிலா வள்ளுவனார் விளங்கவுரைத்த

மெய்மொழியையும் தமிழ்ப்பண்டிதரிடமிருந்து பயிலுதல் வேண்டும். மெய்கண்டான் விழுப்பொருளையும், அப் பருரைத்த அன்புமொழியையும், சைவாகம பண்டிதரிட மிருந்து பயிலுதல்வேண்டும். இவையெல்லாமில்லாதிருப்பின் சென்னைச் சருவகலாசாலையை யார்தான் நாடிவரப்போகின்ருர் கள்? வங்கதேசத்துக் கவிச்சக்கரவர்த்தியாகிய ஸ்ரீரவிந்திர நாத் தாகூர் ஏற்படுத்திய சருவகலாசாலைக்குப் பலதேசத்து அறிஞரும் வருகின்ருர்கள். தாம் கருதிவந்தனவற்றைக் கற்றுக்கொள்வதோடு தாம் கற்றுத்தேறிய பொருட்டுறையை இங்குள்ளார்க்கு உணர்த்திவிட்டுப் போகிருர்கள். இஃதன்றே மரபாவது. நம்மிடத்துள்ள அமுதத்தைப் பெருக்கி உலகத் தாரை விளித்து விருந்தருந்த வருவீராக என்று அழைப்போம். அவர்கள் பசியார உண்டு கலந்துறவாடிக்கொண்டு போகட்டும்.

# 14

# மானிடனும் அவன் மனத்தின் ஆற்றலும்*

" சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகை தெரிவான் கட்டேயுலகு "

தேகாரோக்கியம், காரியசித்தி, சொல்வன்மை, அறிவு நிறைவு, முகவசீகரம், பிறர்மனத்து உற்றதறிதல் என்னும் இவற்றையடைதற்கு வேண்டிய அநுட்டான முறைகள் சிலவற்றைத் தொடர்ந்து எழுதி வருதற்கெண்ணி ஆனி மாதத்து விஜயத்தில் யோகமார்க்கத்தின் பொதுவியல் பினையும் ஐம்புலன்களைச் சுத்தப்படுத்தற்குரிய முறைகளையும் எடுத்துக்கூறினும்; புரட்டாசி மாதத்து விஜயத்தில் இப் பொருளையே தொடர்ந்து " மானத சக்தியும் காரியசித்தியும் " என்னுந் தலைப் பெயர்க்கீழ்ச் சில குறிப்புக்கள் கூறினும். இவற்றை மீண்டுமொருமுறை படித்தபின்னர் மேல்வரும் குறிப்புக்கள் படிக்கற் பாலன.

## உடலுக்கும் மனத்துக்கு மிடையிலுள்ள தொடர்பு

மானிடராகிய நம்முடைய இயல்பினை ஆராய்ந்து நோக்கு வோமாயின், நாம் ஒருவரில் மூவராயிருக்கின்ற தன்மையை யுணர்ந்து கொள்வோம். பனி, வெயில், நோயினுல் துன்புறும் போது சரீரமே நாமென்றெண்ணி வருத்தமடைகின்றேம். ஞான சாஸ்திரங்களை யாராயும்போது அவ்வற்றின் மேற் கருத்துப் பதியச் சரீரத்தை மறந்து மனமே நாமாக நிற் கின்றேம். மனம் மடிந்த சமாதிநிலையில் சிவத்தோடு அத்து விதமாக நின்ற நமது உண்மை நிலையை அறிகின்றேம். ஆதலால் உலகம் பொய், தேகம் பொய்யென்று திண்ணை வேதாந்தம் பேசுவதனுல் அடையப்போகின்ற பயனென்று மில்லை. உலகவாழ்க்கையையுந் தேகப்பற்றினையுந் துறந்த

* 'ஸ்ரீ ராம கிருஷ்ண விஜயம்'

துறவிகள் உலகம் பொய் தேகம் பொய்யென்று சொல்லுதற்குரியர். உலகவாழ்க்கையிலிருப்போருக்கு உலகமும் தேகமும் உண்மைப் பொருட்களேயாம். நமது தேகத்தினமைப்பை ஆராய்ந்து பார்ப்போமாயின் அது பூரண ஞான சொரூபியாகிய இறைவனாற் படைக்கப்பட்ட ஓர் அழகிய யந்திரமாமெனக் கண்டு கொள்வோம். இவ்வியந்திரத்தின் சிறந்தபாகம் மூளை. அரசனானவன் இருந்தவிடத்திலிருந்து கொண்டு மந்திரி பிரதானியர், தண்டத்தலைவரென்றின்னோரைக் கொண்டு கருமமுடிப்பதுபோல மூளையான அவயவங்களைக் கொண்டு கருமமுடிப்பிக்கின்றது. மூளையிலிருந்து பிரிந்து செல்லுகிற நரம்புகள் தேகத்தினெல்லாப்பாகங்களிலும் பரந்திருக்கின்றன. இவை ஞானநரம்புகள், கரும நரம்புகளென்றிரு வகைப்பட்டு ஞானேந்திரியங்களையுங் கருமேந்திரியங்களையுந் தொழில் செய்விக்கின்றன.

"சுவை யொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகை தெரிவான் கட்டே யுலகு"

என யாம் மேலே யெடுத்துக்காட்டிய அருமைத் திருக்குறளின் பொருள் ஈண்டு ஆராயத்தக்கது. புறத்தேயுள்ள உலகத்தைப் பற்றிய ஞானத்தை யாம் பெறுவதற்குக் கருவியாக நிற்பன மெய், வாய், கண், மூக்குச் செவி யென்னும் ஞானேந்திரியங்களைந்துமாம். இவற்றைத் தொழில் செய்விக்கும் கருவி மூளை. ஆதலால் மூளையை மனத்தின் நிலையமெனக் கொள்வோம். மூளை சேதப்படுமாயின் கண், நாக்கு முதலிய கருவிகளிருந்தாலும் பார்த்தல், சுவைத்தல் முதலிய தொழில்கள் நடைபெறா. நம் கண் முன்னேயிருக்கிற புத்தகத்தைப் பார்க்கிறோம். இச்செயலைப் பலபடியாக வகுத்து ஆராயலாம். புத்தகம் இருட்டிலிருப்பின் அது நமது கண்ணுக்குத் தோன்றாது ; ஆதலால், பார்த்தற்றொழிலுக்கு ஒளியின்றியமையாததாமென அறிந்து கொண்டோம். கண் கட்டப்பட்டிருக்கின் புத்தகம் கண்ணுக்குத் தோன்றாது ; ஆதலால் கண்ணிந்திரியம் இன்றியமையாததாமென்றறிந்தோம். ஒளியும் கண்ணும் இருப்பினும் கண்ணிந்திரியத்தை மூளையோடு தொடுக்கின்ற நரம்பு சேதப்பட்டிருக்குமாயின் காட்சியுணர்வு இலதாகின்றது. மூளையிலிருந்து பிரிந்து வருகின்ற காட்சி நரம்பின் அந்தமே கண்ணிந்திரியம்; கேள்வி நரம்பினந்தமே செவியிந்திரியம்; பரிசநரம்பினந்தமே மெய்யிந்திரியம்;

சுவை நரம்பினந்தமே நாவிந்திரியம்; நாற்றநரம்பினந்தமே மூக்கிந்திரியம். சூரியனுடைய கிரணமோ விளக்கொளியோ என் கண் முன்னிருக்கிற புத்தகத்தின்மீது விழப் புத்தகத்திலிருந்து கதிர்த்திரள்கள் பல எழுந்து எத்திசையினும் பரந்து செல்லுகின்றன; அவற்றினுட் சில கண்ணினுட்படிந்து கண்ணின் கருமணியிற் புத்தகத்தினுருவத்தையாக்குகின்றன. இவ்வுருவத்தைக்காட்சி நரம்புகள் மூளைக்குக் கொண்டுசெல்ல, ஆங்கு அர்சு வீற்றிருக்கும் மனமானது ஞாபகத்திற் பதிந்துகிடக்கும் முன்பு கண்ட புத்தகவுருவங்களோடு இவ்வுருவத்தையுடன் வைத்து நோக்கி நீண்ட புத்தகம், குறுகியபுத்தகம், பெரிய புத்தகம், சிறிய புத்தகம், கறுப்புநிற அட்டையுடையது, சிவப்புநிற அட்டையுடையது என்று இவ்வாறு நிச்சயஞ் செய்துகொள்ளுகிறது. மெய், வாய், மூக்குச் செவியாகிய ஏனைய நான்கிந்திரியங்களும் இம்முறையே செயல்புரிவன.

### ஞாபக சக்தி

அறிவு அனைத்தினுக்கும் ஆதாரமாகவுள்ளது ஞாபக சக்தி. நேற்றுப் பெற்ற அநுபவத்தோடு இன்று பெற்ற அநுபவத்தை யுடன்வைத்து நோக்கி ஒற்றுமை வேற்றுமை காண்பதினுலே அறிவு நாளுக்குநாள் வளர்ச்சியடைந்து கொண்டு போகிறது. ஆதலால் ஞாபக சக்தியில்லாவிடின் அறிவு வளர்ச்சியிலதாகின்றது. ஞாபகசக்தியைப் பெருக்கிக் கொள்வதற்குரிய வழிவகைகளை யாராய்வதற்குமுன் ஞாபக சக்தியின் தன்மையை விசாரிப்போம். ஒருவர் மற்றொருவரிடம் போய் ஓர் அவசரமான காரியத்தைப் பற்றிச் சொல்லும்போது அதனைக் கேட்டவர் தற்செயலாக மறந்து போனாலும் நினைப்பாயிருக்கட்டுமென்று சொல்லி வேட்டித் தலைப்பில் ஒரு முடி முடிந்துகொள்ளுகிறார். இச்செய்கையை நாம் பலமுறை கண்டிருக்கிறோம். இது மூளையினுள் நடக்கின்ற செயலை ஒருவாறு நிகர்த்திருக்கின்றது. ஒவ்வொரு அநுபவமும் மூளையினுள்ளிருக்கின்ற கோடிக்கணக்கான நரம்புகளுள் ஒரு நரம்பில் ஒருமுடியையுண்டாக்குகின்றது. இம்முடிகள் தனித்து நில்லாது தம்மையொத்த பிறமுடிகளோடு தொடுக்கப் பட்டிருக்கின்றன. இவற்றினுள் ஒன்றினைப் பற்றியிருக்கும் பொழுது அதனோடு தொடர்புடைய பல முடிகள் ஒன்றின்

பின்னென்றாக வெளிப்படுகின்றன. உதாரணமாக மங்கல வாத்தியத்தினொலி காதிற் பட்டவுடனே கலியாண வீட்டையும், சந்தனத் தாம்பூலம், முதலியவற்றையும், வருவார் போவாரையும், மணமகன், மணமகளையும் பிற ஆடம்பரங்களையும் மனக்கண்ணினூற் காண்கின்றோம். இவற்றைக் கண்டபடியினால் உள்ளத்தில் ஒருவகைச் சந்தோஷம் எழுகின்றது. பிணப்பறையினொலி காதில் விழுந்தவுடனே, இறந்த மனிதன் முகமும், துன்புற்று மாரடித்தழுவாரது தோற்றமும் பிறவும் நம் மனக்கண்முன்பே தோன்றுகின்றன. இவற்றைக் கண்டமையினால் உள்ளத்திற்றுன்பமுண்டாகிறது. வாழ்வினும் சாவினும் வாத்தியம் முழக்குகின்ற வழக்கமில்லாத ஒரு தேசத்திலிருந்து வந்தவருக்கு மணப்பறையும் பிணப்பறையும் பெரிதும் வேறுபட்டுத் தோன்றா. அநுபவங்கள் ஒன்றினேடொன்று தொடர்புற்று நிற்பதனூற்றான் சங்கிலித்தொடர்போல ஒன்றினைப் பற்றிப் பல நினைவுகளை ஒன்றன்பின்னென்றாக மனக்கண்முன் கொண்டு வருதல் எளிதாகின்றது. இனி, புலன்கள் கொண்டு செல்லுகின்ற எல்லா அநுபவங்களையும் ஞாபசக்தி ஒரே அழுத்தமாக மூளையிற் பதித்துவைப்பதில்லை. உள்ளத்துக்கு இன்பத்தையோ துன்பத்தையோ தருகிற அநுபவங்களை மாத்திரம் தான் ஞாபகசக்தி பற்றிக்கொள்ளுகிறது. தெருவிற் போகும்போது ஆயிரக்கணக்கான முகங்களை யாம் காணுகிறோம். அவற்றையெல்லாம் நாம் நினைவில் வைத்திருப்பதில்லை. புகைவண்டியில் யான் பிரயாணம் செய்யும் போது ஒருவர் என்னுடன் அன்புகூர்ந்து பேசினார்; அவருடைய செந்தண்மையாகிய முகம் என் உள்ளத்துககு இன்பத்தையளித்தது. ஆதலினால் அவருடைய முகத்தினுருவம் என்னுள்ளத்தில் பதிந்தது; அன்னாரை யான் பத்து வருடத்துக்குப்பின்பு காண நேரிட்டாலும் உடனே இன்னாரென்று மட்டுக்கட்டிக்கொள்ளுகிறேன். அதே வண்டியிற் குரூபியான தோற்றத்தையுடையவரொருவர் கண்டோரனைவரோடும் வெடித்த வார்த்தையும், சுளித்தமுகமுமாகச் சண்டையிட்டுக் கொண்டிருந்தார். அவருடைய முகத்தினுருவம் என் உள்ளத்திற் பதிந்தது. ஏனையோர் நூற்றுக்கணக்காக அவ் வண்டியிற் பிரயாணஞ் செய்தாரெனினும் அவருடைய முக சொரூபத்தை எனது ஞாபகசக்தி பற்றிக் கொள்ளவில்லை. இதற்குக் காரணம் எதுவென்று ஆராய்வோமாயின் இன்பத்

தைத் தருகிற பொருளைக் கண்டவுடனே நாம் அதனைப் பல முறை மனக்கண்முன்னிருத்தி அது தருகின்ற இன்பத்தை யனுபவிக்கிறோம். பலமுறை மனக்கண் முன் கொண்டுவரப் பட்ட காரணத்தினால் அப் பொருளின் உருவம் ஞாபகசக்தியில் அழுத்தமாகப் பதிந்து விடுகிறது. துன்பத்தைத் தருகிற பொருளை நீக்கிவிடுதற்கெண்ணி நம் மனக்கண் அதனைப் பலமுறையும் ஞாபகத்து முன் கொண்டு வருகிறது. இதனால் துன்பத்தைத் தந்தபொருள் ஞாபகத்தில் அழுத்தமாகப் பதி கிறது. ஆனால் இன்பத்தைத் தந்த பொருளைப்போல் அவ்வளவு அழுத்தமாகப் பதிவதில்லை. இனி மனமானது சம நிலையாகச் சாந்தமாக விருக்கின்ற சமயத்தில் ஞாபகசக்தி நன்றாகத் தொழில்புரிகின்றது. பிறிதொன்றினது நினைவினால் மனமானது சுழன்று அலைந்து கொண்டிருக்கும்போது தன் முன்னிருக்கிற பொருளைப்பற்றிக் கொள்வதில்லை. இங்ஙனம் ஆராய்ந்துகண்ட முடிபுகளைக்கொண்டு ஞாபகசக்தியைப் பெருக்கிக் கொள்வதற்குரிய வழிவகைகள் எவையென்று விசாரிப்போம். முதலாவதாகச் சாந்தநிலையின்றியமையாதது. பெருநகை, கோபம், பொறாமை, அவலம், அச்சம் என்னுமி வற்றால் மனத்தினைக் கலங்கவிடுதல் கூடாது. இளமையிற் றமக்கிருந்த ஞாபகசக்தியை யிழந்துவிட்டதாகப் பலர் கூறக் கேட்டிருக்கிறோம். இது வயதேறியதினால் வந்த குற்றமல்ல, பலவேறு வகைப்பட்ட குடும்பக்கவலைகளும் வீண் கிலேசங் களும் மனத்தினுட் புகுந்து மனத்தின் சாந்த நிலையைக் கலக்கிவிட்டதனால் ஏற்பட்ட குற்றமாகும். இளமையிலும் பார்க்க நடுவயதில் மூளை நன்கு வேலைசெய்கிறதென்பதற் கையமில்லை. அதனுடைய பூரண தன்மையைப் பெறுவதற்குச் சாந்தி நிலைவேண்டும். இயல்பாகவே சாந்த நிலை பொருந்திய இளமைப்பருவமும், உலகம் சாந்தமாய் இருக்கின்ற வைகறைப்பொழுதும் ஞாபக சக்திக்கு கூநுகூலமாயின. ஒரு விஷயத்தைப் பலமுறை மனக்கண்முன் கொண்டுவருவதனால் அவ்விஷயம் ஞாபகத்தில் அழுத்தமாகப் பதிகின்றதெனக் கண்டோம். இங்ஙனம் பலமுறை மனக்கண்முன் கொண்டு வருதற்கு அவ்விஷயத்தின்மீது ஒருவகை யின்பத்தைக் கண்டநுபவிப்பது இன்றியமையாததாகின்றது. பள்ளிக் கூடத்துச் சிறுவன் பலவேறுவகைப்பட்ட பாடங்களுள் தனது மனத்துக்கு விருப்பத்தைத் தருகின்ற பாடத்தையே பன்முறையும் கூர்ந்து அவதானித்துப் படிக்கின்றான். ஞான

சாஸ்திரங் கற்பதாயின் லௌகிகக் கவலையொன்றுமின்றி அதன்மேற் கருத்து வைக்கவேண்டும். அரசியல் விஷயங்களை யாராய்வதாயின் அதற்கென்றே மனம் முற்றினையும் விட்டு அவ்வாராய்ச்சியில் இன்பங் காணவேண்டும். பலவிஷயங் களிற் புலமையடைய விரும்பினால் அவற்றினை யொவ் வொன்றாக வெடுத்துக் கொள்ள வேண்டும்.

## மெய்ப்பாடு

ஞாபக சக்தியைப் பெருக்கிக் கொள்வதற்குச் செவிப் புலனைப் போலவே கட்புலனையும் உபயோகிக்கவேண்டும். இவ் விஷயத்தைப் பின்னர் விரிவாக ஆராய்வாம். மனக்கண்ணி னுற் காணுகிற உருவங்களினியல்பினை யாராயத் தொடங்கி, முதலில் அவற்றின் உற்பத்திக் காரணமாகிய மெய்ப்பாடு களின் இலக்கணத்தை யாராய்வாம். நற்செய்தியோ தீச் செய்தியோ நகைவிளைக்கும் செய்தியோ வியப்பளிக்கும் செய் தியோ இன்னன்னப் பிறவோ உள்ளத்திற்பட்டவுடனே உடம் பின் கண்ணே பலவகை வேறுபாடுகள் உண்டாகின்றன. உள்ளத்து நிகழ்ந்த இன்பதுன்ப நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்த வாறே புறத்தார்க்குப் புலப்படுவதோராற்றான் வெளிப்படுவது மெய்ப்பாடு. இதனைக் கண்டோர் உள்ள நிகழ்ச்சியை ஒரு வாறு உணர்ந்து கொள்வார். நிலைப்பட்ட மெய்ப்பாடுகள் எட்டு என அறிஞர் கூறுவர். அவைதாம் நகை (சிரிப்பு), அழுகை (அவலம்), இழிவரல் (இழிவு), மருட்கை (வியப்பு), அச்சம் (பயம்), பெருமிதம் (வீரம் முதலியன), வெகுளி (கோபம்), உவகை (இன்பம்) என்பன. இவற்றோடு உடன் றோன்றிக் கடலிலுதித்த அலை கடலினுள்ளே மறைந்து போவதுபோல் வேறுபாடற்று மறைந்து போகும். வழிநிலை மெய்ப்பாடுகள் முப்பத்து மூன்று உள. இவற்றின் பெருந் தன்மையும் வருமாறு; மெய்யுணர்வினாலோ, பொறாமை துன் பத்தினாலோ தன்னிலையழிந்து நெட்டுயிர்ப்பெறிந்து துன்புறு தல் உயிர்ப்பு; பசிதாகத்தாற் றுன்புற்று உடல்வாடித் தளர்ச்சி யடைதல் சோர்வு; எதிர் வருந் துன்பத்தை நினைத்து நடுங்கி நாவறண்டு நிற்றல் கலக்கம்; வழி நடத்தல் முதலியவற்றால் உடல் வாடுதல் இளைப்பு; அறிவு வலிமை முதலியவற்றை யுடைமையினாலெழுகின்ற மனமகிழ்ச்சி உடைமை; துன்பங் கண்ட வழியும் துன்பந்தரு செய்தியைக் கேட்ட வழியும் செய லற்றயர்ந்திருத்தல் கையாறு; இன்பந்தரு பொருளை நினையுங்

தோறும் உவகைக் கண்ணீரோடு இடையிட்டுத் தோன்றும் மனமகிழ்ச்சி இன்புறல் ; மலர்ந்த நோக்கமின்றி முகம் வேறுபட்டமையை நோக்கத்தோடு கூடிய இரக்கம் இடுக்கண்; பிறர்க்குத் தீங்கிழைத்து வெகுண்டெழுதல் நலிதல்; கருதியது பெருமையினால் அதனை யெண்ணி யெண்ணி மனம் புண்ணுறுதல் ஒருதலை யுள்ளுதல் ; இடியேறு போல்வனவற்றால் வெருவி நிகழும் உள்ள நிகழ்ச்சி வெரூஉதல் ; பிறர் செல்வங் கண்டவழி மனம் பொறாது அலைவுறுதல் பொறாமை ; நிந்தைச் சொல் முதலியவற்றால் முனிவுறுதல் முனிதல் ; குலப்பெருமை, கல்லாமை, இளமை முதலியவற்றால் எய்தும் உள்ள மிகுதி மிகை; முன்னறிந்த பொருளை விருப்புற்று உள்ளுதல் நினைதல்; உயிர்துறத்தல் சாக்காடு; கள்ளுண்டு களியாடல் களி; நித்திரையில் வாய் வெருவுதல் கனவு; கண்மூடி உடல் நிமிர்த்தி அயர்ந்து உறங்குதல் துஞ்சல்; கண்களைக் கசக்கிக் கொட்டாவி விட்டுத் தூக்கத்திலிருந்து எழுதல் துயிலுணர்தல்; தீய வொழுக்கம் முதலியவற்றால் நாணிய வுள்ளம் பிறர்க்கு வெளிப்பட நிகழும் நிகழ்ச்சி நாணுதல் ; உணர் விழந்து வாயினின்றும் நுரை சோர்ந்து கூம்ப நடுக்குற்று நிலத்தில் விழுந்து புரளுதல் ஞஞ்ஞை யுறுதல் ; அச்சம் முதலியவற்றாற் கலக்கமுற்று ஒரு பொருண்மேல் இருபொருட்டன்மை கருதிவரும் மனந்தடுமாற்றம் ஐயம் ; கலை நூல் முதலியவற்றால் ஐயந் திரிபற உண்மையை புணர்ந்து பிறர்க்குரைத்தல் ஆராய்ச்சி; இளைப்பினாலோ வயிற்றிற் சூன் முதிர்ச்சி முதலிய ஏதுக்களாலோ தோன்றுகிற சோம்பு மடிமை ; அன்பும் அச்சமும் முதலாக உடம்பிற் புலப்படுமாற்றான் உள்ள நடுங்குதல் நடுக்கம்; நிச்சயபுத்தியின்மையினாலே பன்முறையும் ஆலோசித்தல் கருதல் ; நாணுதல் முதலியவற்றால் உடலிற் றோன்றிய வேறுபாட்டை பிறர் காணாதபடி மறைக்க முயற்சித்தல் மறைத்தல்; வியாதியால் வருந்துதல் நோயுறல் ; பைத்திய நோயால் வருந்துவோர் காரணமின்றி அழுதல், சிரித்தல், வார்த்தையாடல் மயக்கம் ; இடர், பொறாமை முதலியவற்றால் மனமலைதல் புழுங்குதல் ; காலதாமதமாவதை நினைத்துக் கலக்கமுற்று நெஞ்சு துடித்து அவசரப்படுதல் பரபரப்பு ; காமம், கோபம், மயக்கம் முதலியவற்றால் மனந்தடுமாறல் சுழற்சி; குறிப்புக்கள் பிறந்த உள்ளத்தினின்று உடம்பின்கண் தானே தோன்றும் வேறுபாடு விறலெனப்படும். அசைவற்றிருத்தல், சோர்ந்து விழுதல்,

மெய்ம்மயிர் சிலிர்த்தல், வேர்த்தல், நிறம் வேறுபடுதல், உடல் நடுங்குதல், கண்ணீர் வருதல், நாக்கிளறுதல், என விறல் எண் வகைய. மேற்கூறிய நாற்பத்தொன்பதும் ஒருவரது மனநிலையைப் பிறர்க்கு உணர்த்துவன. இவற்றைக் கூர்ந்து அவதானித்து வருதலாலே பிறர் மனத்து உற்றதை அறிய லாகும். தாம் விரும்பிய மெய்ப்பாட்டைப் பிறரிடத்தே தோற்றுவிக்க வல்லவர் சொல்வன்மை யுடையவரெனப்படு வார். குமரகுருபர சுவாமிகள் காசியில் உபந்நியசித்தபொழுது வீரச்சுவை நிறைந்த விஷயங்களைக் கேட்ட விருத்தர் தண்டெடுத்துக் கொண்டு சண்டைக்குப் புறப்பட்டதாகவும், சிருங்காரச் சுவை நிறைந்த விஷயங்களைக் கேட்போர் மாதர் மேற் சிந்தை செல்ல காமுற்று வருந்தியதாகவும் அறிகின்றோம். இங்ஙனம் செய்யவல்ல சொல்வன்மை உண்மைக் கவிஞருக்கு இயல்பாக வமைந்திருப்பது. எங்ஙனமாயினும் அனைவரும் இதனை ஒரு அளவுக்காவது விருத்தி செய்துகொள்ள வேண்டும்.

## பாவனுசக்தி

சொல்வன்மையைப் பெருக்குவதற்குப் பாவனுசக்தியும் உத்தமப் புலவர்களது கவிதைகளிற் பயில்வதும் இன்றியமையாத சாதனங்களாம். கம்பராமாயணத்திலோ, பிற உத்தமக் கவிதைகளிலோ ஏதாவதொரு சந்தர்ப்பத்தையெடுத்துப் படித்துச் சொற்பொருளையும் மெய்ப்பாட்டையும் நன்முக பற்றிக்கொண்ட பின்பு கண்ணினை மூடி மனக் கண்ணினுலே அச்சந்தர்ப்பத்தைப் பலமுறை பார்த்து அவதானிக்க வேண்டும். நன்முக அவதானித்த பின்பு அச்சந்தர்ப்பத்தை இயன்றவரை நிறைவாக விரித்து எழுதவேண்டும். பின்பு தானெழுதிய வாசகத்துக்கும் கவியினுடைய மொழிக்குமிடையிலுள்ள தாரதம்மியத்தை நோக்கித் தனது வாசகத்தைத் திருத்தி யமைக்கவேண்டும். இங்ஙனம் அப்பியசித்துக் கொண்டு வருவதனுலே மனத்திற் கருதிய பொருளைப் புறத்தார்க்குச் சுவை பயக்கச் சொல்லவல்ல வாக்கு வல்லமையுண்டாகும். நன்முக எழுதக்கூடிய வன்மையோடு தீவிர புத்தியையும் விருத்தி செய்துகொண்டு வந்தால் பிறர் மனத்தைக் கவருகின்ற சொல்வன்மையுண்டாகும். இவ்விஷயத்தைப் பின்னர் விரிவாக ஆராய்வோம். பாவனு சக்தியை விருத்தி செய்வதற்குத் தினந்தோறும் சற்று நேரமாவது தனியிடத்

திருந்து புற இந்திரியங்களை மூடி மனக்கண்ணின் முன்னிலையில் மனத்துக்கு இன்பத்தைத் தருகின்ற இஷ்டமூர்த்தியினுருவத்தையோ பிற உருவத்தையோ நிறுத்தி மனம் அலைந்து செல்லுமாயின் அதனை மீண்டு மீண்டுந் தியான உருவத்திற் கொண்டு வந்துநிறுத்திப் பழகவேண்டும். தியான மூர்த்திகளது இலக்கணமாக ஆன்றோர் கூறிய சில செய்யுட்களையும் செய்யுட் பாகங்களையும் இதன் கீழ்த் தருகின்றோம். நேயர்கள் அவற்றாற் கூறப்படுகின்ற மூர்த்திகளின் திருவுருவங்களை தியானித்து மனக்கண்ணினாற் றெளிவாகப் பார்த்து அப்பியசிப்பார்களாக.

## அர்த்தநாரீசுவர மூர்த்தி

"தோலும் துகிலும் குழையுஞ் சுருடோடும்
பால் வெள்ளை நீறும் பசுஞ் சாந்தும் பைங்கிளியும்
சூலமுந் தொக்க வளையுமுடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்தூ தாய் கோர்த்தும்பீ."

[அர்த்தநாரீசுவர வடிவத்தினது வலப்பாகம் இறைவனது திருவுருவம், இடப்பாகம் இறைவியுடைய திருவுருவம். தோல், குழை, பால் வெள்ளை நீறு, சூலம், பாம்புக் கங்கணம் என்றின்னன வலப்பாற்குரியன; துகில், சுருள்தோடு, பசுஞ்சாந்து, பைங்கிளி, வளையென்றின்னன இடப்பாற் குரியன. அடுத்த பிரசுரத்தில் யாம் எழுதக் கருதியிருக்கும் "அர்த்தநாரீசுவர மூர்த்தி" யென்னும் கட்டுரையினுள் இச்செய்யுட் பொருளை விரித்துக் கூறுவோம்.]

## சிவபெருமான்

"முடிகொண்ட மத்தமு முக்கண்ணி நோக்கு முறுவலிப்புந்
துடிகொண்ட கையுந் துதைந்த வெண்ணீறுஞ் சுரிகுழலாள்
படி கொண்டவாகமும் பாய்புலித் தோலு மென் பாவிநெஞ்சிற்
குடிகொண்டவா தில்லையம்பலக் கூத்தன் குரைகழலே."

## உமாமகேசுவரர்

"பவளமே மகுடம் பவளமே திருவாய் பவளமே
[திருவுடம்பதனிற்
றவளமே களபந்தவளமே புரிநூற்றவளமே முறுவலாடரவந்
துவளுமே கலையுந்துகிலுமே யொருபாற்றுடியிடையிட
[மருங் கொருத்தி
யவளுமே யாகிலவரிடங்களந்தை யணிதிகழாதித் தேச்சரமே."

## நடராஜமூர்த்தி

" குனித்தபுருவமுங் கொவ்வைச்செவ்வாயிற்
குமிண்சிரிப்பும்
பனித்தசடையும் பவளம்போல் மேனியிற்
பால் வெண்ணீறும்
இனித்தமுடைய வெடுத்த பொற்பாதமுங்
காணப் பெற்ருல்
மனித்தப் பிறவியும் வேண்டுவதேயிந்த
வையகத்தே."

## மகாவிஷ்ணுமூர்த்தி

" வீங்குநீ ரருவி வேங்கட மென்னும்
ஓங்குயர் மலையத் துச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறுந் திங்களும் விளங்கி
யிருமருங் கோடிய விடைநிலைத் தானத்து
மின்னுக் கொடியுடுத்து விளங்குவிற் பூண்டு
நன்னிற மேகநின்றது போலப்
பகையணங் காழியும் பால்வண் சங்கமும்
தகை பெறு தாமரைக் கையினேந்தி
நலங்கிளளார மார்பிற் பூண்டு
பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய
செங்க ணெடியோ னின்ற வண்ணமும்."

[சக்கராயுதத்துக்குச் சூரியனும் பால்நிறத்த வெள்ளிய சங்கினுக்குச் சந்திரனும், திருமேனிக்குக் கருமேகமும், முத்துமாலைக்கு மின்னற் கொடியும், பிதாம்பரத்துக்கு மின்னற் கொடியின் பிரகாசமும், திருக்கரத் தேந்திய வில்லுக்கு மேகத்தினிடையே தோற்றும் இந்திர தனுவும் ஒருவாறு உவமானமாயின.]

## உமாதேவியார்

சுரும்பு முரல் கடிமலர்ப்பூங் குழல்
போற்றி. யுத்தரியத் தொடித்தோள் போற்றி.
கரும்புருவச்சிலை போற்றி. கவுணியர்க்குப் பால் சுரந்த
கலசம் போற்றி.
யிரும்புமணங் குழைத்தென்னை யெடுத்தாண்ட வங்கயற்கண்
ணெம்பிராட்டி
அரும்புமிள நகைபோற்றி. யாரணநூபுரஞ்சிலம்பும்
அடிகள் போற்றி.

## விநாயகக் கடவுள்

மாரனெடுத்து வளைக்குமொரு கரும்பை
யொடித்து மலர்சிதறி
நாரியடுத்த வளிமாலை குலையத்துரந்து
நயந்தோடி
வீரமனத்து வினைப்பாகர் குறிப்பினெழுகி
விளையாடும்
ஈரமதிச் செஞ்சடைக்களில் நல்யானை
யிணைத்தாளேத்துவோம்.

## சுப்பிரமணியக் கடவுள்

பரிந்த செஞ்சுடரோ பரிதியோ மின்னோ
பவளத்தின் குளவியோ பசும்பொன்
சொரிந்த சிந்தூரமோ தூமணித்திரளோ
சுந்தரத் தபசிது வென்னத்
தெரிந்த வைதிகர் வாழ் திருவிடைக்
கழியிற் றிருக்குரா நிழற்கீழ் நின்ற
வரிந்த வெஞ்சிலைக்கை மைந்தனை யஞ்சொன்
மையல் கொண்டை யுறும்வகையே.
மூவிருமுகங்கள் போற்றி முகம்பொழி
கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற வீராறு
தோள்போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேண்
மலரடி போற்றி யன்னான்
சேவலு மயிலும் போற்றி
திருக்கைவேல் போற்றி.

## மஹாலக்ஷ்மி

பொன்றிறங்கொள் திருமேனி பொலிவுறு
நல்லெழில் கண்டேன்,
குன்றனைய பயோதரத்திற் குளிர்முத்த
வடங் கண்டேன்,
அன்றலர்ந்த செங்கமல மங்கைமலர்
மிசைக் கண்டேன்,

வன்றிற்கோலனைச்செற்ற வச்சிரதண்
டமுங்கண்டேன்,
வெண்ணிறத்த சுரிசங்கம் விளங்குதிருக்
காங்கண்டேன்,
அண்ணலஞ் சீர்த் தனியொழியமர்ந்த
விறற்கரண் கண்டேன்,
புண்ணியச் செங்கருடன் மிசைப்
பொருந்துதிருவு ருக்கண்டேன்,
மண்ணகம் விண்ணகம் போற்றும்
வைணவியைக் கண்டேனே.

## சரஸ்வதி

கருமழைத் தண் டுளி பொழியுங் காலமதி யொளியுமொளி
காலுமுத்தின்
பருமணிமாலையுமபய வரதமும் புத்தகமும் வடப்பளிங்குந் தாங்கி
முருகுயிர்க்கு நறுந்தவள முளரியா லயத்திருந்த முதுபிராட்டி
யிருபதமுங் கடைப்பிடித்தே னெப்பதம் வாராதபத மெனக்கு-
மன்றே.

# 15

## சிந்தனை மொழிகள்*

அருட்சோதியின் திருவருளால் தோன்றிய இவ்வுலகம் தற்சமயத்தில் தன்னிலையறியாது தடுமாறி நிற்கின்றது. ஸாத்விக குணம் நிறைந்தவர் பல்லோர்; நாடுகள் எல்லாம் நலம் பெருகி நிற்க வேண்டுமென நன்முயற்சி செய்து வருகின்றனர். "நகாரிகம்," "நாகரிகம்", "அது பரவுதல் வேண்டும்" என எல்லோரும் முறையிடும் இக்காலத்தில் "நாகரிகம் என்பது யாது?" என்பதை அறிந்து அதனையடைய உழைக்க வேண்டுமே யொழிய, பகட்டுகளைக் கண்டு மயங்குதல் பேதமை எனப் பெரியோர் கூறுகின்றனர். இவ்வாறு கூறி நிற்காது உண்மை நாகரிகம் எதுவென்பதைத் தங்கள் வாழ்க்கையிலறிந்து, அதனைக் கையாண்டும் வருகின்றனர். ஆயின் இவ்வாறு செய்வது அனைவருக்கும் விருப்பமில்லை.

மானிடரிற் சிலர் தமது ஊழ்வினைப் பயனாலோ, அல்லது மற்றெந்த காரணங்களைக் கொண்டோ தம் வாழ்க்கையில் இந்திரிய சுகங்களையும் அவற்றின் முதற் காரணமாயுண்டாகும் பிற விஷயங்களையுமே முக்கியமானவைகளெனக் கண்டு, அவைகளுக் குதவியானவைகளையே மேன்மேலும் வளர்த்து வருகின்றனர். இந்திரிய சுகங்களோ எவ்வித மானிடனையும், இருதய சுத்தியின்றேல் எளிதில் மயக்க வல்லவை. அவற்றை அநுபவிக்க அநுபவிக்க மேலும் அவா பெருகுமே யொழியக் குன்றாது. உலகத்திலோ மானிடர்க்கு வேண்டிய சுவையே என நினைக்கச் செய்யும் வன்மையுடையவை இவை ஆகையால் இவற்றில் ஈடுபட்டோர் இப்பூமியிற் பலர் உளர்.

*  *  *  *

மற்றொரு விஷயமும் இங்கு குறித்தல் அவசியம். மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து இந்திரியங்களும் தம்மைத் திருப்தி செய்வதற்குப் பல பொருள்களை நாடி நிற்பனவாதலால் அப்பொருட்களை உண்டாக்குவதற்கும் அதனைப்

---

*ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

பலரும் அடையும் வண்ணம் செய்வதற்குமே, ஜனங்களிற் பெரும்பாலார் ஆயுளைச் செலவழிக்கின்றனர். இத்தகைய வேலை பெருக மெள்ள, மெள்ள மானிட னுக்குத் தன் உண்மை நிலை மறந்து விடுகிறது.

பஞ்ச பூதங்களின் சேர்க்கையாலுண்டாகிய இவ்வுடலும் அதனிலுள்ள பஞ்சேந்திரியங்களும் மாத்திரம் மனிதனன்று. அவனுடலையும், அது வளர்தற்கும், அழகுடன் சோபிப்பதற்கும் செய்யும் காரியங்கள் மாத்திரமே முக்கியமானவை என நினைப்பது மதியீனம். ஏனெனில் மானிடன் எனப்படுபவன் இவைகளைத் தன் உபகரணங்களாய்க் கொண்டு, அவற்றின் உதவியால் தான் யார் எனவும், தன்னுண்மை நிலைமை வழி எதுவென்பதையும் அறிந்து கொள்கிறான். இவ்வெண்ணம் தோன்றியபோது, இக்காலத்தில் நாகரிகம் எனக் கூறுப்படுவது எவ்வளவு தாழ்ந்தது என்பது விளங்கும்.

* * * *

இருப்புப் பாதைகள் இயந்திரங்கள், தந்தி முதலிய சாதனங்கள், பலவகை உணவுகள், கண்ணைக்கவரும் உடைகள் காலங்கழிக்க ஏற்பட்டுள்ள விநோதங்கள் இவை யெல்லாம் இக்காலத்தில் மேன்மேலும் விருத்தியடைந்து வருகின்றன. முற்காலத்தைக் காட்டிலும், ஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கும் சுகங்கள் எண்ணிறந்தவை, அதுவரையில் மகிழ்ச்சியடையாதார் ஒருவருமிலர்.

* * * *

ஆயின் இவைகளில் விருத்தியுண்டானது போலவே, மனிதன் தன்னுண்மை நிலையை யறிவதிலும், தான் பரம் பொருளின் அம்சமென்பதையும் அறிய வழிகளை விருத்தி செய்து வந்திருக்கிறானா ? என்னும் கேள்விக்கு விடை யென்ன ? நாகரிகம் விருத்தி யடைந்துள்ளது ; அது முன்னிலும் பரவியுள்ளது எனக் கூறுவார் விடையளிக்கட்டும்.

* * * *

உண்மை நாகரிகம் என்பது உயர் வாழ்க்கையையே குறிக்கும், குறிக்கவேண்டும். உயர்வாழ் வென்பது உடலெடுத்தோர் அனைவருள்ளும் இருந்து அவனை ஆட்டுவிக்கும் சக்தி, பரமசக்தியின் அம்சமே என்பதையே வற்புறுத்தும். இப்படி வற்புறுத்தினால், மானிடர்க்குள், ஆத்மஞானம் பரவ, அதன் பயனால் சமத்துவம், சாந்தம், சகோதரத்துவம், பரோப

காரம் முதலிய நற்குணங்கள் பொலிந்து நிற்கும் இவ்வுலகம். பிறர்க்குதவி செய்தலே பெருந்தொழிலாக, ஒவ்வொருவரும், பிறர்க்கு நன்மைபுரிவதையே விரதமாகக் கொண்டு, நன்மை புரிய முன்வருவர். ஈசுவரத்தன்மை எங்கும் நிறைந்து நிற்கும்.

* * * *

இதுவோ இக்காலம் நாம் காணும் காட்சி, நண்பரே! சற்று யோசியும். எளியாரை வலியார் வருத்துவதும், இலாதாரை (பொருள்) இருப்போர் இகழ்வதும்! எல்லாம் 'எனது' என்று கூறுவதுமாகவோ இருக்கின்றது! இதனைக் கண்டு மகிழ்வாருமுண்டோ!

* * * *

இத்தகைய பரிதபிக்கத்தக்க நிலையில் இவ்வுலகம் இருப்பினும், இருள் நிறைந்து இருக்கும் நேரத்திற் கூட, இன்பம் தரக்கூடிய வெளிச்சம் தோன்றுமென நினைப்பது போல, இறைவனது அருள் பெற்ற அன்பரால் செய்யப்படும் காரியம் நமது மனத்தை மகிழ்விக்கின்றது. லோகாயதக் கொள்கைகளில் மூழ்கியிருப்பாரைப் பொன், பெண், இவைகளைத் தவிர மற்றவைகளைப்பற்றி நினைக்கச் செய்வதுகூட அருங் காரியமாயினும், அறிவுச் சுடர் எங்கும் படர்ந்தெரியுமாறு உழைத்து வருகின்றனர் இந் நாகரிகம் எதுவென அறிந்தோர். இத்தகைய தொண்டு புரிவோர்க்குக் கைமாறு ஈசனது அருட்பிரசாதமும், அழிவிலா ஞானப் பெருக்குமே யாகும். உலக சுகத்தில் ஆழ்ந்திருப்பவர்கள் இவர்கள் கூறுவது ஆகாத காரியமெனக் கூறினும், தம்வாழ்க்கையிலே ஆநந்தப் பெருக்குப் பெற்ற இவர்கள், பிறரும் அவ்வானந்த வெள்ளத்தில் மூழ்கியிருத்தல் கூடுமென நினைக்கின்றனர்.

* * * *

சில வருஷங்களுக்கு முன் நடைபெற்ற ஐரோப்பிய யுத்தத்தில் மேற்கூறிய உண்மைகளே வெளிவந்தன. கேவலம் சரீரத்தைக் கவனித்ததாலுண்டான இந்த யுத்தம் பல கெடுதிகளை விளைவித்த போதிலும், ஐரோப்பிய ஆடம்பர, அர்த்தமில்லா நாகரிகம் மிருகத்தன்மையை, பஞ்சேந்திரியங்களின் பூரண ஆசையைத் திருப்தி செய்ததேயன்றி, மனிதனுடைய உண்மை ஆத்மநிலையை ஒரு சிறிதேனும் வளர்க்கவில்லை என்பதை விளக்குகின்றது.

ஆயினும் உண்மை நாகரிகம், உண்மை உயர்வு, உண்மை

ஞானம் எங்கே தோன்றியது? அதற்குக்காரணமாக இருந்தார் யார்?

*  *  *  *

மனத்திலெண்ணக் கூடாத காலந்தொடங்கி பஞ்சேந்திரியங்களையும் அதனாலுண்டாகும் பந்தங்களையும் அறவே ஒழிக்க முயன்று அதனில் சித்திபெற்று, அருட்பெருங் கடவுளைக் கண்டார் பலரைப் பெற்றுள்ள நம் நாட்டிற்றான் உண்மை நாகரிகம் தோன்றியது. பிறநாடுகளிலும் ஈசனார் திருவவதாரந்தாங்கி நின்றார் என்பது உண்மையாயினும், நம் பாரத பூமியிலேயே அத்தகைய பெரியோர் பலர் தோன்றினர்.

*  *  *  *

இக்காலத்தில் புல்லியர் பலரால் புகழப்படும் நாகரிகம் உண்மை அறிவை விருத்தி செய்வதில்லை என விளக்கவோ, அன்றேல், இவைகளின்றியே, பெறுதற்கரிய ஆத்ம செல்வம் நிறைந்து, தம் குணப்பெருக்கினால் தம்மைக்கண்டோரும், கேட்டோரும், கேட்கச் செய்வித்தோரும், தம்முயர் நிலையை யறியும்படி செய்யக்கூடும் என்பதைத் தெரிவிக்கவோ தோன்றினது போல அவதரித்தனர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவர். இவருடைய சரித்திரத்தை உலகிலுள்ளோர் அனைவரும் அறிவர்.

உண்மை நாகரிகம் எது வென்பதையும், நம் நாடு எவ்வழியில் உண்மை நாகரிகத்தையே மேலானதெனக் கைக் கொண்டு வந்தது என்பதையும் அவர் தம் வாழ்க்கையில் விளக்கியுள்ளாராதலினால் பக்தர்களனைவரும் அவர் சரித்திரத்தை இம்மாதம் அன்புடனும், ஆர்வத்துடனும் சிந்தித்துப் பயன்பெற வேண்டுகிறோம்.

*  *  *  *

வாழ்க்கையின் உண்மைப் பொருளையும், உயிர் பெற்று வாழும் மாந்தர் பின்பற்ற வேண்டிய நெறியையும், உபதேசத்தாலும் உயரிய வாழ்க்கையாலும் உதாரணங் காட்டப் பிறப்பர் பெரியோர். இவருடைய குணப்பெருக்கை அறிந்து, அதனை மதித்து, தம்மாலான வரையில் அப்பெரியோரின் அடிச்சுவடுகளைப் பின்பற்ற முயலுவது நல்லோர் தன்மை. தொல்லைகள் நிறைந்த சன்மத்தில், பலவிதப் பற்றுக்களாலும் பீடிக்கப்பட்டு வருந்தும் மனிதர் பெரியோருடைய வாழ்க்கையையும் அதிலிருந்து நாமறிய வேண்டிய நீதிகளையும் மறப்பது

1973 FEB 24 BATTICALOA

எளிது. அதனை யுணர்ந்த நன்மக்கள் சிறந்ததொரு வழக்கத்தைத் தொன்றுதொட்டு ஏற்படுத்தியுள்ளனர்.

*　　　　*　　　　*

பன்னிரண்டு மாதங்கள் நிறைந்த ஒருவருடத்தில் ஒவ்வொரு மாதத்தினும், குறித்த பட்சத்திலும் நக்ஷத்திரத்திலும் பெரியார் இவர் இவ்வுலகில் தோன்றினர் என்பதைப் பஞ்சாங்கத்தில் குறித்துள்ளார். பக்தர்களிடம் உண்மையன்பும் பரம் பொருளிடம் பேரன்பும் பெற்றோர், அத்திரு நக்ஷத்திரங்கள் நிகழும் நாட்களிலே, பிற காரியங்களை ஒழித்திட்டுத் தம் மனோ வாக்குக் காயங்கள் மூன்றையும் நல்விஷயத்திலேயே செலவழிப்பர். அந்நாள் முழுவதும் நல்லாருக்கு ஒரு திருவிழா நாளாகும். ஏனெனில் பெறுதற்கரிய இம்மானிடப் பிறவியில் தோன்றிய நாம், இனி சுக துக்கமென்னும் இரட்டைகளை யொழித்து ஈசன்பாற் செல்வதற்கு வழிகாட்டிகளாகி நிற்கும் ஜீவன்முக்தர்களுடைய திருநக்ஷத்திர நாட்களில் நம்முண்மை நிலையும் அதனையடைய நாம் செய்யவேண்டிய முயற்சிகளும் பளிங்குபோல் விளங்குகின்றன. அன்பிற்குப் பிறப்பிடமும் அறிவிற்குச் சிறப்பிடமுமான ஈசனிடம் சென்றோருடைய அவதார தினத்தை நாம் கொண்டாடுவதால் நம் மனமும் அப்பெரியாருடைய ஞானத்தையும் ஆனந்தத்தையும் அடைய முயலுகின்றது.

*　　　　*　　　　*

புண்ணிய பூமியாகிய நம் நாடு தன் பூர்வீக நிலையை மறந்து, புல்லிய உடலையே பெரிதெனப் போற்றும் மேற்றிசை நாகரிகத்தின் வாய்ப்பட்டுத் திண்டாட இருக்கும்போது தோன்றினர் ஸ்ரீராமகிருஷ்ணர். அவர் தமது புனித வாழ்க்கையாலும் பொன்னேபோலப் போற்றவேண்டிய பேச்சுக்களாலும், கல்வியிலும் கேள்வியிலும் சிறந்த வங்காளிகள் பலரை நம்நாட்டு உயர்வழியிற் கொண்டு சேர்த்தனர். அவர்களில் ஒருவர் ஸ்ரீமத் ஸ்வாமி விவேகாநந்தர். தம் குருவின் பேரன்பிற்குப் பாத்திரரான அவர் பிற்காலத்தில் தாய்நாடு விட்டுப் பிறநாடு சென்று, நம்மை நாகரிகமற்ற மிலேச்சரென்றும், (தெய்வ) நம்பிக்கை யற்ற நரர்களென்றும் எண்ணியிருந்த மேற்றிசையாருக்கு உண்மை ஞானம் பிறந்த நாடு பாரத பூமியென்னும் நந்நாடே யென்றும், அப்புண்ணிய

பூமியிற் பிறந்தோன் எவனும், அயல் நாட்டாரைவிட மேலான ஆத்மஞானம் நிறைந்தவன் என்றும் உள்ளங்கை நெல்லிக் கனியே போன்று விளக்கினர்.

* * *

மேற்கூறிய பிறநாட்டிலே நம்மவருடைய குற்றங் குறைகளை அவர் மறந்தாரில்லை. தாமிந்தியாவிற்கு வந்த போது, தமது சிஷ்யர் பலருக்கும், தம் முபந்நியாசம் கேட்க வந்தவருக்கும், நம்மவர்களுடைய குறைகளை எடுத்துக் கூறி, அவற்றை நீக்குவதற்கு வழிதேட வேண்டுமெனவும், அப் பொழுதே நம்மிந்திய நாடு தன் உயரிய நிலையைப் பெறுமென வும் கூறினர். நம் ஸ்வாமிகள் தம் ஸ்தூல தேகத்தை விட்டு ஈசனுடன் இரண்டறக்கலந்து இருபத்திரண்டு வருஷங்களாயி னும், அவர் அக்காலத்துக் கூறிய மொழிகள் ஒரு சிறிதேனும் பொய்யாது இக்காலத்திலுமிருக்கின்றன !

* * *

சற்று யோசிப்போம். மானிடர்கள் உழலும் பல துறை களையும், மேலான பார்வையுடன் நோக்கிய நம் ஸ்வாமிகள் அத்துறைகளில் எல்லாம் சீர்திருத்தங்கள் எவ்வாறு நடை பெறவேண்டும் என்பதைக் கூறியுள்ளார். பொதுஜனக்கல்வி; கைத்தொழிற்பயிற்சி; சுகாதாரம்; ஸ்திரீகளின் மேம்பாடு; இளஞ்சிறுர்களின் இலவசக்கல்வி; இந்நாட்டைவிட்டுப் பிற நாடுகள் சென்று இயந்திர நிருமாணம் முதலியவற்றையறிதல்; இராஜ்ய விஷயம்; ஆசார சீர்திருத்தம்; அனுபவஞானம்; ஜாதிப்பிரிவு ; ஒற்றுமையும் அதன் பலனும் ; சச்சிதாநந்தப் பொருள்; சாசுவத இன்பத்தை அடைவதற்கு நாம் பின்பற்ற வேண்டிய வழி இவைகள் எல்லாவற்றையும் பற்றி ஸ்வாமிகள் கூறியுள்ளார்.

* * *

சென்ற முப்பது வருஷங்களாக நம் நாடு, பல வருஷங் களாக அமர்ந்திருந்த தாமஸ நித்திரையிலிருந்து விழித்திருக் கின்றது என்பதை மறுப்பவரும் உண்டோ? அத்தகைய விழிப்பிற்கு முக்கிய காரணமாயிருந்தவர்களி லொருவராவர் நம் ஸ்வாமிகள். காலச் சக்கரம் சுழன்ற பிறகு நம்நாட்டுச் சரித்திரம் எழுதப்படும் அக்காலத்திலே உயரிய இந்தியாவில் மேலானவராய் நம் ஸ்வாமிகள் பெயர் வழங்கப்படும் என்பதற் கையமில்லை

இதற்குக் காரணமென்ன? பிறருக்கும் ஸ்வாமிகளுக்கு முள்ள மாறுபாடு யாது? எவ்வகையில் இவர் பிறரிலும் பெரியோர்? எனக் கேட்பின் விடை கூறுகின்றேம். மற்றையோர், கேவலம் இராஜ்ய விஷயம், தேசிய முன்னேற்றம் முதலியவற்றையே நோக்கமாகக் கொண்டு, அதற்காகப் பாடுபட்டு உழைத்தனர். எண்சாணுடம்பிற்குப் போசனமும் ஏழை மனத்திற்கு நிம்மதியுமே நாடினர். அதற்குமேல் அவர்கள் லக்ஷியஞ் சென்றிலது. ஆனால் நம் ஸ்வாமிகளோ, இவற்றையுங் கருதினராயினும், மானிடனுக்கு முக்கியமானது ஆத்மா வெனவும், அதை இறைவனுடன் ஈடுபடச் செய்வதற்கே நாம் முயல வேண்டுமென்றும் வற்புறுத்தி, சரீரத்திற்கு வேண்டிய சுகங்கள் கவனிக்கப்பட வேண்டாமோ எனின், ஆம், வேண்டும்; சுகத்திற்காக மாத்திரமன்று, மற்றெதற்கு எனின், சரீரம் சுகமாயிருந்து மனம் தெளிவாயிருந்தபோதே ஆத்ம ஞானம் விரிவடையுமாதலால், ஆத்ம ஞானத்தை முக்கியமாகவும், அதற்கு உதவியாக சரீர சுகம், மனோசுகம் முதலியவை அவசியமெனவும் நம் ஸ்வாமிகள் மொழிந்தனர்.

* * *

ஆகவே இராஜ்ய விஷயம், கைத்தொழில், கல்வி, ஆசார சீர்திருத்தம், முதலியவற்றில் ஸ்வாமிகள் கற்றுக்கொண்டது இகத்திற் சுகத்தை நாடியதாய் மாத்திரமன்று; இகபரத்திற்கு இவைகள் எவ்வளவு அவசியமோ அவ்வளவே என்பதே. இதுவே நம் நாட்டு மேன்மக்களும் பிற நாட்டு புத்திமான்களும் உண்மையெனக் கூறியதும் மற்றுமொரு முறை கூறுவோம்.

மானிடனுடைய இயற்கை நிலை ஆத்ம விஷயமானது; ஈசனுக்கும் அவனுக்குமுள்ள ஒற்றுமையையும் உறவையும் தெரிவிப்பது; எவ்வெக்காரியங்கள் மானிடனுடைய ஆத்ம ஞானத்தின் அபிவிருத்திக்கு இடந்தருமோ அவை யெல்லாம் நன்மை பயப்பனவே; அதனை மனதினில் நிறுத்தி மற்ற காரியங்கள் செய்தல் வேண்டும்.

* * *

அத்தகைய மேலான லக்ஷியத்தை நிறுவிய நம் ஸ்வாமிகள் பிறந்த தினத்தைக் கொண்டாடுவது அறிவாளிகள் செய்யுங் காரியமாகும். திருவிழாத் தினமாகக் கொண்

டாடி அன்றைய தினம் முழுவதையும் நம் ஸ்வாமிகள் சரித்திரத்தையும் அவருடைய குருநாதருடைய திவ்விய வாழ்க்கையையும் கேட்டு, அறிந்து ஆனந்தங்கொள்வது நம்மை மேலான நிலைக்குக் கொண்டு போவதாகும்.

* * *

ஆயின் திருவிழாத்தினம் ஒன்றுடன் நின்று விடுதல் தகுமோ? வருடத்திற் கொருமுறை நம் ஸ்வாமிகளுடைய நாமத்தையும் பரமஹம்ஸருடைய திருப்பெயரையும் பன்முறையும் பன்முறையும் கூறின் பயன் கிடைத்து விடுமோ? அப்படி நினைப்பதும் பெரும் பிழையாகும். வருடத்தின் ஒவ்வொரு நாளும், நேரமும் இவர்களுடைய சரித்திரத்தை மனதில் வைத்து, உபதேசங்களை வாழ்க்கையில் அனுஷ்டிக்க முயலவேண்டும். அன்றே நாம் உண்மைப் பக்தர்களாவோமேயன்றி வருடத்திற் கொருமுறை பக்தர் வேடம் பூண்டதாலாகமாட்டோம். இப்படி நாள்தோறும் நல்வழியில் நடந்து ஜன்ம தினத்தன்று, நம்மாத்ம நிலையென்ன வென்பதை யாராய்ந்து மறு வருஷமும் நல்வழியிலேயே செல்ல வாக்குறுதி, மன உறுதி செய்துகொள்வதே நம் கடமை. இதைத் தவிர மேலான காரியம் ஒன்றுமில்லை.

* * *

ஈசுவரனிடம் நமக்கு எவ்வளவு தீவிரமான பக்தியிருக்க வேண்டுமென்பதை நீ அறிவாயா? தனது கணவனிடம் ஒரு கற்புடைய ஸ்திரீக்கு இருக்கும் பக்தி, தான் புதைத்து வைத்த பணத்தினிடம் ஒரு லோபிக்கு இருக்கும் ஆசை, உலகப் பொருள்களைப் பெற வேண்டுமென்று ஸாமன்னியர்கள் கொள்ளும் ஆவல்; இந்த மூன்றும் ஒன்று கூடினாற் போன்ற தீவிர பக்தியானது ஈசுவரனைக் காணவேண்டியதற்காக உன் மனத்தில் உதிக்குமானால் அப்போது அவனை நீ நிச்சயமாக அடைவாய்.

* * *

தண்ணீர்த் தாகமுள்ளவன் ஆற்றுநீர் வண்டலாக இருக்கிறதென்று அதைத் தள்ளி விடுவதில்லை. தெளிந்த ஜலத்துக்காகக் கிணறு வெட்டத் தொடங்குவதுமில்லை. அதுபோல தர்ம விஷயத்தில் வாஸ்தவமான தாகமுள்ளவன் பக்கத்திலுள்ள தர்மம் இந்து தர்மமாகவோ வேறு தர்மமாகவோ

இருந்தாலும் அதைத் தள்ளி விடுவதில்லை. தனக்கென்று புதிதாக ஒரு தர்மத்தை ஏற்படுத்திக் கொள்வதுமில்லை. உண்மையிலேயே தாகமுள்ளவனுக்கு இப்படி யெல்லாம் சிந்திப்பதற்கு நேரம் கிடைக்காது.

* * *

ஒரு தாய்க்கு அனேகம் குழந்தைகளிருக்கின்றன. ஒன்றின் கையில் ஒரு பவளத்துண்டையும் இன்னொன்றின் கையில் ஒரு மரப் பாவையையும் மற்றொன்றினிடம் பக்ஷணங்களையும் கொடுத்திருக்கிருள். ஆகவே அக்குழந்தைகள் தாயாரை மறந்து தங்கள் தங்கள் விளையாட்டுப் பொருள்களில் கருத்தூன்றி யிருக்கின்றன. தாயாரோ தனது காரியங்களைச் செய்து கொண்டிருக்கிருள். ஆயினும் பொம்மைகளைத் தூரப் போட்டுவிட்டு "அம்மா, அம்மா!" என்று அழும் குழந்தையிடம் அவள் உடனே ஓடி வந்து வாலனை பாலனை செய்கிருள். அதுபோல, ஓ மனிதனே! நீ உலக விஷயங்களில் அழுந்தியவனுய் உனது ஜகன் மாதாவை மறந்திருக்கிருய். அவைகளைத் தூர அகற்றிவிட்டு, அவளைப் பரிவுடன் அழைப்பாயானுல் அவள் உடனே வந்து, உன்னைத் தனது திருக்கைகளில் எடுத்துக் கொள்வாள்.

ஒரு மண் பாத்திரத்தில் ஜலத்தை நிரப்பி, அதைத் தனியே ஒரு பலகையின் மீது வைத்திருந்தால் சில நாளில் அந்த ஜலமெல்லாம் வற்றிப் போய்விடும். ஆனுல் அப்பாத்திரத்தை ஜலத்துக்குள்ளேயே அமிழ்த்தி வைத்தால், அது அங்கிருக்கும் வரையில் ஜலமும் அதில் இருக்கும். ஈசுவரனிடம் உனக்கிருக்கும் பிரேமையும் அப்படிப்பட்டதுதான். கொஞ்சக் காலத்துக்கு உன் மனத்தை ஈசுவர பிரேமையால் நிரப்பிவிட்டு, பின் உலக விஷயங்களில் பிரவர்த்தித்து அவனை முழுவதும் மறந்திருந்தால் உன் மனம் பழையபடி பக்தியற்றுச் சூன்யமாவது நிச்சயம். ஆனுல் திவ்விய ப்ரேமையிலும் விசுவாசத்திலும் உன் மனம் எப்போதும் அமிழ்ந்திருக்குமானுல், அது ஸதா ஸர்வகாலமும் அந்த சிலாக்யமான பிரேமையால் கரைபுரண்டு கொண்டேயிருக்கும்.

* * *

ஆரம்பத்தில் ஒருவன் தன்னந்தனியனுக உட்கார்ந்து கொண்டு மனத்தை ஒருமிக்க, அதாவது ஏகாக்ர சித்தத்தையுடைய முயலவேண்டும். இல்லாவிட்டால் மனம் பற்பல.

விஷயங்களில் ஓடிச் சஞ்சலத்துக்குள்ளாகும். பாலையும், ஜலத்தையும் ஒன்ருக்கி வைத்தால் இரண்டும் நன்ருகக் கலந்து விடுவது நிச்சயம். ஆனுல் பாலைக் கடைந்து வெண்ணையை எடுத்து ஜலத்தில் போட்டு வைத்தால் அவ்வெண்ணெய் ஜலத்துடன் கலக்காமல் அதன் மேலே மிதக்கும். அதுபோல இடைவிடாத பழக்கத்தினுல் ஒருவனுக்கு ஏகாக்ர சித்தம் நிலைக்குமானுல் அவன் எங்கிருந்த போதிலும் சரியே, அவனுடைய மனம் சுற்றிலுமுள்ள பொருள்களின் மீது செல்லாமல் ஈசுவரன் மீதிலேயே செல்லும்.

* * *

பிறருடைய குணதோஷங்களைப் பற்றிப் பேசுவதில் காலத்தைச் செலவிடுபவன் தன் காலத்தை வீணிலே கழிப்பவனுகிருன். ஏனெனில் அப்படிச் செலவிடப்பட்ட காலம் அவனையாவது ஈசுவரனையாவது பற்றிச் சிந்திக்கப்படாமல் பிறரைப் பற்றி யாதொரு பிரயோசனமுமில்லாமல் சிந்திக்கப்பட்ட காலமாகும்.

* * *

ஈசுவரபக்தி இருவகைப்படும். முதலாவது சாஸ்திரங்களை விதிக்கும் பக்தி. இன்னவிதமாகப் பூஜை செய்யவேண்டும், பகவந்நாமத்தை இத்தனை தரம் ஜபிக்கவேண்டும் என்று ஏற்பட்டு அவ்விதிகளின்படி செய்யும் பக்தி "வைதிக பக்தி" எனப்படும். இதனுல் பிரம்ம ஞானத்தை அடையலாகும். இப்படி ஸமாதியில் லயித்த ஆத்மா மறுபடியும் திரும்பி வருகிறதில்லை. இந்த ரீதி சாதாரண பக்தர் விஷயத்தில் மட்டுந்தான் ஏற்படும்.

* * *

அவதார புருஷர்கள், ஈசுவராம்ச முடையவர்கள் முதலிய மஹான்களுடைய விஷயம் முற்றிலும் வேறுபட்டது. அவர்களுக்கு ஈசுவரனிடம் இருக்கும் பக்தி கேவலம் விதிகளால் உண்டானதன்று. உள்ளிருந்தே ஊற்றெடுத்துப் பெருகுகின்றது எனலாம். சைதந்யர் போன்ற அவதார புருஷர்களும், ஈசுவர சமீபத்தை யடைந்தவர்களும் ஸமாதியில் அடையக்கூடிய பிரம்ம ஞானத்தை எளிதில் அடைவார்கள். அவர்களுக்கு அந்த உன்னத பதவியிலிருந்து கீழே இறங்கி வரவும் கூடும். அப்போது அவர்களுடைய வியக்தித்வம் போவதில்லை. ஈசுவரனைத் தாயெனவும், தந்தையெனவும் பாவிப்

பார்கள். "இதன்று, இதன்று" என்று சொல்லிக் கொண்டு அவர்கள் ஒவ்வொரு படியாக ஏறி உச்சிக்குச் செல்கின்றனர். அங்கே போனதும் "இதுதான்" என்கின்றனர். ஆனால் சீக்கிரத்தில், படிக்கட்டுகளும், உச்சியைப்போலவே, கல், சுண்ணும்பு, மண் முதலிய பொருள்களால்தான் ஆனவை யென்பதைக் கண்டு கொள்கின்றனர். ஆகவே அவர்கள் சில வேளை உச்சியில் தங்கியும் சிலசமயம் படிக்கட்டுகளில் நின்றும் மேலுங் கீழுமாகப் போய்க்கொண்டிருக்கின்றனர்.

இந்திரிய உணர்ச்சி முற்றிலும் அழிந்துபோகும் குண முடைய ஸமாதியில் அடையக் கூடிய பிரம்மஸ்வருபந்தான் அந்த உச்சிஸ்தானம். படிக்கட்டோ பௌதிக உலகம், உச்சியை அடைந்த பிறகு, நாம ரூபங்களையும் பெற்ற இவ் வுலகம் மானிட அறிவுக்குப் புலப்படும் பிரம்ம ஸ்வரூபமாகத் தோன்றும்.

* * *

ஒரு ஸாதுவானவர் ஜன நெருக்கமுள்ள ஒரு தெரு வழியே போகும்போது ஏதோ தற்செயலாய் ஒரு துர்ச்சனனுடைய காலை மிதித்துவிட்டார். உடனே அந்தப் பொல்லாதவன் மிக்க கோபங்கொண்டு கொஞ்சமேனும் இரக்கங் காட்டாமல் ஸாதுவை அடித்தபடியால் அவர் பிரக்ஞையற்றுத் தரையில் விழுந்து விட்டார். அவருடைய சிஷ்யர்கள் வெகு பாடுபட்டுப் பலவித சைத்யோபசாரங்களைச் செய்து அவருக்குத் தம் நினைவை உண்டுபண்ண முயன்றனர். கொஞ்சம் பிரக்ஞை வந்ததும், சிஷ்யர்களில் ஒருவர் அவரைப் பார்த்து, "ஸ்வாமி! இப்போது தங்களுக்கு உபசாரஞ் செய்கிறது யார் என்று தெரிகிறதா?" என்று கேட்டார். "என்னை அடித்தவன் தான்" என்று ஸாது பதில் சொன்னார். உண்மையான ஸாதுவுக்கு மித்திரனென்றும் சத்துருவென்றும் வித்யாசமே கிடையாது.

* * *

உலகத்தில் வாழும் ஞானிக்கும் உலகத்தை வெறுத்த ஞானிக்கும் ஏதாவது வித்யாசம் இருக்கிறதா என்று கேட்டால், இல்லையென்றே நான் சொல்வேன். இருவருக்கும் பொதுவாக இருப்பது ஞானம், ஆனால் உலகத்தில் வாழும் ஞானிக்குப் பயம் ஏற்படக்கூடும். விஷய சுகங்களைக் கொடுக்கும் பொருள்களினிடையே இருப்பதனால் அவனுக்குக் கொஞ்சமா

வது பயம் ஏற்படும். புகையடைந்த அறையில் நீ வசித்தால், என்ன ஜாக்கிரதையுடனிருந்த போதிலும் உனது சரீரத்தில் கொஞ்சமாவது கரி படிவது நிச்சயம். கலியுகத்துக்கு, நாரதீய பக்தி விதிக்கப்பட்டிருக்கிறது. அதாவது நாரதரிஷி அனுஷ்டித்தது போலப் பக்தி, அன்பு, சரணுகதி இவைகளால் ஈசுவரனை அடைதல். கர்மயோகத்துக்கு, அதாவது மனிதனுல் செய்யப்பட வேண்டுமென்று சாஸ்திரம் வகுக்கும் பலவிதமான கர்மங்களை செய்வதற்கு சாவகாசம் போதாது.

* * *

எல்லாத் தர்மங்களுக்கும் ஈசுவரன் ஒருவனுகவே இருந்தால் ஏன் அவனைப் பல மதஸ்தர்கள் பலவிதமாக வர்ணிக்கின்றனர். ஈசுவரன் ஒருவனே, ஆனுல் அவனுடைய நாம ரூபங்கள் பல; ஒரு வீட்டின் எஜமானன், ஒருவனுக்குப் பிதாவாயும், இன்னொருவனுக்குச் சகோதரனுயும், ஒருத்திக்கு நாயகனுயும் ஆகும்போது, வேறு வேறு உறவு முறை பாராட்டி அழைக்கப்படுகிருன். அது போல ஒரே ஈசுவரன், பக்தர்களுக்கு எந்தெந்த ரூபத்துடன் தோன்றுகிருனே அந்தந்த ரூபத்துக்கு அனுகுணமான வழிகளால் வர்ணிக்கப் பட்டிருக்கிருன்.

* * *

ஈசுவரன் ஜகத்பிதாவும் நித்யமுக்த ஸ்வரூபியுமாகிருன். ஆனுல் சச்சிதாநந்தமாகிய பகுக்கொணுப் பிரம்மமோ நம்மைத் தத்தளித்து மூழ்கச் செய்யும் கரைகாண முடியாத பிரம்மாண்ட ஸமுத்திரத்தைப் போல மனோவாக்குக்கெட்டாததாம். ஆயினும் தம் விளையாடல்களைச் செய்தருளும் ஈசுவரனுடைய இச்சைதங்யத்தில் நாம் புகுந்துவிட்டால், தண்ணீரில் மூழ்குபவன் மெதுவாகக் கரையோரத்தில் ஒதுக்கப் படுவதைப் போல, வெகு சுலபமாகச் சாந்தியைப் பெறுகிருேம்.

முற்றும்

8